RNINUMBER:TNTAM/2018/75087

# மெட்ராஸ் மணி

MADRAS MANI | DAILY TAMIL | தைரியம் மற்றும் நெறிமுறை பத்திரிகை | PUBLISHED FROM - CHENNAI

29.04.2026 (புதன்கிழமை) பக்கங்கள் 8 விலை 5.00 மணி 8 | ஓசை 39

Facebook/dailymadras@gmail.com | dailymardras@gmail.com

5 ஆம் ஆத்மியில் இருந்து 7 பேர் இணைந்ததால் மாநிலங்களவையில் பாஜக எம்.பி.க்களின் பலம் 113 ஆக உயர்வு



6 ஈரான் புதிய நிபந்தனைகளை ட்ரம்ப் ஏற்க வாய்ப்பில்லை பேச்சுவார்த்தை தொடர்வதில் சிக்கல்



8 ஐபிஎல் கிரிக்கெட்டில் மிக குறைந்த ரன்களில் ஆல் அவுட்டான 5 அணிகள்: முதலிடத்தில் ஆர்சிபி



### மேற்கு வங்கத்தில் 2–ஆம் கட்டமாக

# மீதமுள்ள 142 தொகுதியில் இன்று ஓட்டுப்பதிவு

## 2,321 கம்பெனி துணை ராணுவம் பாதுகாப்பு; ஓட்டு எண்ணிக்கை முடிந்த பிறகும் மத்தியப்படையை நிறுத்த தேர்தல் ஆணையம் முடிவு

**கொல்கத்தா, ஏப்.29–**

மேற்கு வங்கத்தில் மொத்தம் உள்ள 294 சட்டமன்ற தொகுதிகளுக்கு 2 கட்டங்களாக தேர்தல் நடைபெற்று வருகிறது. இதில் கடந்த ஏப் 23ந்தேதி 152 தொகுதிகளுக்கு முதல் கட்ட தேர்தல் நடைபெற்றது. அங்கு வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் காரணமாக வாக்குப்பதிவு மிக அதிக அளவில் பதிவாகி இருந்தது. குறிப்பாக, தட்சிண் தினாஜ்பூர் (94.85 சதவீதம்), கூச் பெஹார் (94.54 சதவீதம்), பிர்பும் (93.70 சதவீதம்), ஜல்பைகுரி (93.23 சதவீதம்) மற்றும் முர்ஷிதாபாத் (92.93 சதவீதம்) ஆகிய மாவட்டங்களில் மிக அதிக அளவில் வாக்குகள் பதிவானது. முதல்கட்ட தேர்தலில் 93.2 சதவீத வாக்குகள் பதிவான நிலையில் சுமார் 3.36 கோடி வாக்காளர்கள் தங்களது ஜனநாயக கடமையை ஆற்றி இருந்தனர். இந்நிலையில் மீதமிருக்கும் 142 சட்டமன்ற தொகுதிகளுக்கான 2வது மற்றும் இறுதி கட்ட வாக்குப்பதிவு இன்று (ஏப் 29 ந்தேதி) நடைபெறுகிறது.

இதற்கான பிரசாரம் மாலை 6 மணியுடன் ஓய்ந்தது. 2ம் கட்ட தேர்தல் நடக்கும் 7 மாவட்டங்களில் மட்டும் பாதுகாப்பை பலப்படுத்தும் வகையில் 2,321 கம்பெனிகளைச் சேர்ந்த மத்திய காவல் படையினர் பெருமளவில் குவிக்கப்பட்டு ள்ளனர். கொல்கத்தா, ஹவுரா, ஹூக்ளி, நதியா, வடக்கு மற்றும் தென் 24 பர்கனாஸ் உள்ளிட்ட மாவட்டங்களில் இன்று தேர்தலையொட்டி பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

முன்னதாக, 2ம் கட்ட தேர்தலையொட்டி தலைவர்கள் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டனர்.. பிரதமர் நரேந்திர மோடி, மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா உள்ளிட்ட பா.ஜ.க தலைவர்களும், திரிணாமுல் காங்கிரஸ் தலைவரும், மேற்கு வங்க முதல்வருமான மம்தா பானர்ஜி, காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி உள்ளிட்ட பலரும் தீவிரமாக வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர். முதல்கட்ட தேர்தலில் பெருமளவில் வன்முறை சம்பவங்கள் எதுவும் நடைபெறவில்லை. எனினும் சில இடங்களில் மோதல்கள் ஏற்பட்டது. அதே நேரத்தில் 2வது கட்ட வாக்குப்பதிவுக்காக பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்கு வங்க தலைமை தேர்தல் அதிகாரி மனோஜ் அகர்வால் கூறுகையில், வாக்குச்சாவடிகளில் பாதுகாப்பு முழுமையாக மத்திய பாதுகாப்பு படை கட்டுப்பாட்டில் உள்ளது. இதனால் மக்கள் பயமின்றி தங்கள் வாக்குகளை பதிவு செய்துள்ளனர். இந்தமுறைஅனைத்து வாக்குச்சாவடிகளிலும் 100 சதவீதம் வெப் கேமரா மூலம் கண்காணிப்பு செய்யப்பட்டு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது என்று கூறினார். மேற்கு வங்கத்தைப் பொறுத்த அளவில் கடந்த 15 ஆண்டுகளாக திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் ஆட்சி நடைபெறுகிறது. மம்தா பானர்ஜி தொடர்ந்து 4வது முறையாக முதல்வராகும் வேட்கையில் உள்ளார்.

அவருக்கு பா.ஜ,க கடும் போட்டி அளிக்கிறது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், காங்கிரஸ் தனித்து போட்டியிடுகிறது.

மேற்கு வங்கத் தேர்தலில் எப்போதுமே வன்முறைச் சம்பவங்கள் அதிகளவில் நடப்பது வழக்கம். கடந்த முறை எட்டு கட்டங்களாக நடைபெற்ற சட்டமன்ற தேர்தல் இம்முறை இரு கட்டங்களாக நடத்தப்படுவதே வியப்புக்குரிய விஷயமாக பார்க்கப்படுகிறது.

இம்முறையும், தேர்தலையொட்டி பல இடங்களில் வன்முறை, மோதல் சம்பவங்கள் நடைபெற்றன. இதையொட்டி முதல் கட்ட தேர்தலிலேயே 16 மாவட்டங்களுக்கு 2 ஆயிரத்து 450 கம்பெனி துணை ராணுவப் படையினரை பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தினர். தற்போது 2ம் கட்ட தேர்தலில் 2,321 கம்பெனி வீரர்கள் பாதுகாப்பு பணியில் உள்ளனர். பதற்றமான வாக்குச் சாவடிகள் அடையாளம் காணப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இம்முறையும் தேர்தல் நடைபெறும் நாளை காலை வரை, வாக்குப்பகுதி நடக்கும் இடங்களில் பைக்கில் இரு ஆண்கள் சேர்ந்து செல்லக் கூட தடை விதிக்கப்பட்டு ள்ளதாகக் கூறப்படுகிறது. முதல் கட்ட தேர்தலின் போது தேர்தல் செயல்பாடுகளில் ஆங்காங்கே சில குளறுபடிகளும் இருந்தன.

இதையடுத்து சில அதிகாரிகளை தேர்தல் ஆணையம் பணியிடை நீக்கம் செய்தது. 2ம் கட்ட தேர்தலில் குளறுபடிகள் இருக்கக் கூடாது, மீறினால் துறை ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்தல் ஆணையம் எச்சரித்துள்ளது.

நேற்று அரசியல் கட்சிப் பிரமுகர் வீட்டில் சுமார் 100 க்கும் மேற்பட்ட நாட்டு வெடிகுண்டுகள் காவல்துறையினரால் கைப்பற்றப்பட்டது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பங்கர் பகுதியில் வசித்து வரும் ரபிகுல் இஸ்லாம் என்பவரது வீட்டில் இருந்து வெடிகுண்டுகள் கைப்பற்றப்பட்டதாக தகவல்கள் கூறுகின்றன. முன்னதாக, காசிப்பூர் பகுதியில் ஆளில்லாத வீட்டில் 79 வெடிகுண்டுகள் கண்டறியப்பட்டது குறிப்பிடத்தக்கது. வெற்றி, தோல்வியை 2ம் கட்ட தேர்தல் நிர்ணயிக்கும் என்பதால் இம்முறை வன்முறை சம்பவங்களுக்குஅதிகவாய்ப்பு இருக்கும். எனவே, பதற்றமான பகுதிகளில் கண்காணிப்பைப் பலப்படுத்தவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

2016 சட்டமன்றத் தேர்தலில் 3 இடங்களில் மட்டுமே வென்ற பா.ஜ.க. கடந்த 2021 தேர்தலில் 77 இடங்களைக் கைப்பற்றியது. இம்முறை பா.ஜ.க. ஆட்சி அரியணையை குறிவைத்துள்ளது. முதல் கட்ட தேர்தலில் அதிக வாக்குப் பதிவு நடந்தது ஆட்சி மாற்றத்தையே குறிக்கிறது என்று அமித்ஷா பேசியிருந்தார். கடந்த தேர்தலில் நந்திகிராம் தொகுதியில் மம்தாவை எதிர்த்து பா.ஜ.க.வின் சுவேந்து அதிகாரி போட்டியிட்டு வென்றார்.

அதன் பிறகு பவானிபூர் இடைத்தேர்தலில் நின்று மம்தா வெற்றி பெற்றார். இம்முறை பவானிபூரில் சுவேந்து அதிகாரி மம்தாவை எதிர்த்து மீண்டும் போட்டியிடுவதால் முடிவு எப்படி அமையும் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. 2ம் கட்ட தேர்தலில் பல இடங்களில் வன்முறை சம்பவங்கள் நடந்துள்ளன.

வடக்கு 24 பர்கனாஸ் மாவட்டத்தில் உள்ள ஜகத்தால் தொகுதியில் பா.ஜ.க. வேட்பாளர் அர்ஜூன் சிங்கின் ஆதரவாளர்களுக்கும், திரிணாமுல் காங்கிரஸ் வேட்பாளர் சோம்நாத் ஷியாமின் ஆதரவாளர்களுக்கும் இடையே கடும் மோதல் ஏற்பட்டது. மம்தா கட்சியைச் சேர்ந்த தலைவரின் வாகனத்தை பா.ஜ.க.வினர் அடித்து நொறுக்கினர். தெற்கு பர்கனாஸ் மாவட்டத்திலும் இதே போன்ற வன்முறை சம்பவங்கள் நடைபெற்றன.

மேற்கு வங்கம், தமிழ் நாடு, அசாம், கேரளா மற்றும் புதுச்சேரி ஆகிய 5 மாநிலங்களுக்கான வாக்கு எண்ணிக்கை மே 4ந்தேதி நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.



உலக பிரசித்தி பெற்ற மதுரை சித்திரை திருவிழா நடைபெற்று வருகிறது. இதில் முக்கிய நிகழ்ச்சியான மீனாட்சி – சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணம் நடைபெற்றது.

### மதுரையில் சித்திரை திருவிழா

# மீனாட்சி அம்மன் – சுந்தரேசுவரர் திருக்கல்யாணம் கோலாகலமாக நடந்தது

## ஆடி வீதிகளில் பக்தர்கள் பரவசம்

**மதுரை, ஏப்.29–**

மதுரை மீனாட்சியம்மன் – சுந்தரேசுவரர் திருக்கல்யாணம் நடந்தது. இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று பரவசத்துடன் சாமி கும்பிட்டனர்.

உலக பிரசித்தி பெற்ற மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் சித்திரைத் திருவிழா ஆண்டுதோறும் கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டு கடந்த 19–ந் தேதி கொடியேற்றத்துடன் விழா தொடங்கியது. திருக்கல்யாணத்தையொட்டி இன்று காலை சுந்தரேசுவரரும்பிரியாவிடையும் மேடைக்கு வந்தனர். சுந்தரேசுவரன் தங்ககிரீடம்சூட்டி,வைர மாலை அணிந்து, பட்டு வேட்டி அணிந்து மணமகன் திருக்கோலத்தில் காட்சியளித்தார். அவரை தொடர்ந்து மீனாட்சி அம்மன் தனி பல்லக்கில் மேடைக்கு வந்தார்.

**பக்தர்கள் பரவசம்**

மீனாட்சி சுந்தரேசு வரர் பிரியாவிடை மற்றும் மீனாட்சி அம்மனுக்கு மாலை அணிவிக்கப்பட்டிருந்தது. அவர்கள் மேடைக்கு வந்தபோது பக்தர்கள் பக்திபரவசத்துடன் மீனாட்சி அம்மனையும், சுந்ரேஸ்வர பெருமானையும் வணங்கினார்கள்.

அதன்பிறகு மீனாட்சி அம்மனை சுந்தரேசுவரருக்கு தாரை வார்த்துக் கொடுப்பதற்காக மேடைக்கு பவளக்கனி வாய்ப் பெருமாள் தங்க கெண்டியுடன் தனிப்பல்லக்கில் மேடைக்கு வந்தார். இதைத் தொடர்ந்து திருப்பரங்குன்றத்திலிருந்து சுப்பிரமணியரும், தெய்வாணையும் மணமேடைக்கு வந்தனர். திருமண மேடையில் சுந்தரேசு வரருக்கு வலது பக்கத்தில் மீனாட்சியும், இடது பக்கத்தில் சுப்பிரமணியரும் அமர்ந்திருந்தனர்.

காலை 5.30 மணிமுதல் திருமண ஏற்பாடுகள் தொடங்கி நடந்தன. ஹோம குண்டங்கள் வளர்க்கப்பட்டு சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்களைமுழங்கினார்கள். இந்த நிகழ்ச்சிகளை மீனாட்சி அம்மன் மற்றும் சுந்தரேசுவரர் சார்பில் பக்தர்கள் செய்தனர்.

மணமக்கள் சார்பில் பக்தர்கள் இரண்டு பேர் மாலை மாற்றிக் கொண்டனர். இதன்பிறகு மணமக்களுக்கு ஆடை அணிவிக்கும் நிகழ்ச்சி நடந்தது.

**திருமண நிகழ்ச்சி**

சுந்தரேசுவரருக்கும், மீனாட்சி அம்மனுக்கும் பட்டாடைகள் அணிவிக்கப்பட்டன. பிரியா விடைக்கும் பட்டாடை அணிவிக்கப்பட்டது. அதன்பிறகு வேத மந்திரங்கள் முழங்க, மேளதாளத்துடன் நாதசுவரம் இசைக்க திருமறைகள் பாடி மணவிழாவின் உச்சகட்டமாக மங்களநாண் அணிவிக்கும் நிகழ்ச்சி தொடங்கியது. வைரத்தால் செய்யப்பட்ட தாலியை இருவரும் எடுத்து 3 முறை சுந்தரேசுவரரின் கையில் வைத்து பக்தர்களுக்கு காட்டினார்கள். பிறகு அந்த தாலியை சரியாக காலை 8.53 மணிக்கு அம்மன் கழுத்தில் அணிவித்தனர்.

அப்போது மங்கள ஒலி இசைக்கப்பட்டது. இந்த காட்சியைக் கண்டதும் அங்கு கூடியிருந்த பக்தர்கள் பரவசத்துடன் அம்மனை வணங்கி வழிபட்டனர். இதன்பிறகு பிரியா விடைக்கு தங்கத்தினால் ஆன தாலி அணிவிக்கப்பட்டது. பின்னர் 5 வகை பாலிகா பூஜை, 5 வகை பட்சணம், 5 வகை அன்னம் ஆகியவை மணமக்களுக்கு வழங்கப்பட்டது.

### கொடைக்கானல் நட்சத்திர ஏரியை சுற்றி

# முதல்வர் ஸ்டாலின் சைக்கிள் பயணம்

## சுற்றுலாப் பயணிகள் 'செல்பி' எடுத்துக் கொண்டனர்

**கொடைக்கானல், ஏப். 29–**

கொடைக்கானலுக்கு கடந்த சனிக்கிழமை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது குடும்பத்தினருடன் ஓய்விற்காக வந்தடைந்தார்,

இந்நிலையில் இன்று நட்சத்திர ஏரி பகுதியில் காலை வேளையில் 11 டிகிரி செக்சியஸ் முதல் 13 டிகிரி செல்சியஸ் வரை வெப்பநிலை நிலவியது, குறிப்பாக ஏரியின் மேற்பர ப்பில் நீர்ப் பனியானது படர்ந்து காணப்பட்டது,

குறிப்பாக இந்த பகுதியில் நிலவும் இதமான குளுமையான கால நிலையை அனுபவித்து நீர்ப்பனியை கண்டு ரசித்தவாறே,தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் மூன்றாவது நாளாக நடைபயிற்சி மேற்கொண்டார்.முதல்வரை காண்பதற்கு அதிகாலையில் இருந்தே ஏராளமான சுற்றுலாப்பயணிகள் மற்றும் பொதுமக்கள், கட்சி தொண்டர்கள் ஏரி பகுதியில் காத்திருந்தனர், அவர்களுடன் கலந்துரையாடி புன்னகைத்தபடி செல்பி மற்றும் புகைப்படம் எடுத்து கொண்டபடியே சுமார் 2 கிலோ மீட்டர் தூரம் தனது நடைப்பயிற்சியை தொடர்ந்தார்.அதனை தொடர்ந்து ஏரியை சுற்றி சைக்கிள் பயணம் மேற்கொண்டார், ஏரிச்சாலையில் இருந்த சுற்றுலாப்பயணிகள் மற்றும் பொதுமக்கள், காட்சி தொண்டர்கள் உள்ளிட்டோர் முதல்வர் சைக்கிள் சவாரி செய்ததை ஆர்வத்துடன் கண்டு ரசித்தனர்.



கொடைக்கானல் ஏரியில் முதல்வர் ஸ்டாலின் நடைபயிற்சி சென்றார்.



## மானாமதுரை

# வீர அழகர் கோவிலில் சித்திரை திருவிழா தொடங்கியது

### மே 2–ந்தேதி வைகை ஆற்றில் நிலாச்சோறு நிகழ்ச்சி

மானாமதுரை, ஏப். 29

சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் வைகை ஆற்று கரையில் பிரசித்தி பெற்ற ஆனந்த வல்லி அம்மன் சோமநாதர் கோவில், வீர அழகர் கோவில் உள்ளது. ஆண்டு தோறும் 10 நாட்கள் சித்திரை திருவிழா நடைபெறும்.

இந்த ஆண்டு சித்திரை திருவிழா ஆனந்த வல்லி சோமநாதர் கோவிலில் கடந்த 21 ந்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. இன்று 11 மணிக்கு ஆனந்த வல்லி சோமநாதர் திருக்கல்யாணம் நடைபெற்றது.

இதேபோல் வீர அழகர் கோவிலில் சுந்தரராஜ பெருமாளுக்கு காப்பு கட்டுதல் நிகழ்ச்சியுடன் சித்திரை திருவிழா தொடங்கியது.

இந்தக் கோவிலில் மூலவர்சுந்தரராஜப் பெருமாள் எனும் நாமத் துடன் எழுந்தருளி அருள்பாலிக்கிறார். சித்திரைத் திருவிழா தொடக்கமாக நடைபெற்ற காப் புக் கட்டுதல் உத்ஸவத்தை முன்னிட்டு, கோவிலில் மூலவருக்கும் உத்ஸவருக்கும் திருமஞ்சனம் நடத்தப்பட்டு, தேவியர் சமேத மாக கோயில் முன்பாக உள்ள மண்டபத்தில் சுந்தரராஜப் பெருமாள் எழுந்தருளினார்.

பின்னர், வீர அழகர் பல்லக் கில் புறப்பாடாகி மானாமதுரை நகராட்சி அலுவலகத்தில் அமைக்கப்பட்டிருந்த மண்டகப்படிக்கு எழுந்தருளினார். இரவு சர்வ அலங்காரம் செய்யப்பட்டு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது.

ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு வீர அழகரை வழிபாடு செய்தனர்.

திருவிழாவின் முக்கிய நிகழ்வாக வருகிற 30 ஆம் தேதி இரவுவீர அழகர் எதிர்சேவையும், மறு நாள் மே 1 ஆம் தேதி காலை 7 மணிக்கு அழகர் ஆற்றில் இறங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது .மே 2ஆம் தேதி இரவு மானாம துரை கிராமத்தார் மண்டகப்படியில்வைகை ஆற்றுக்குள் நிலாச் சோறு நிகழ்ச்சி நடைபெறுகிறது. தொடர்ந்து வரும் 6 ந்தேதி மானாமதுரை கடைவீதி முழுவதும்

வீர அழகர் எழுந்தருளுவார் அன்று உற்சவம் ஸாந்தி நிகழ்ச்சியுடன் சித்திரை திருவிழா நிறைவடைகிறது.

## அணைக்கு நீர்வரத்து இல்லை

# வைகை அணையின் நீர்மட்டம் தொடர்ந்து சரிவு

### விவசாயிகள் கவலை

தேனி,ஏப்.29

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி அருகே 71 அடி உயரமுடைய வைகை அணைக்கு, மழைக்காலங்களில் மேற்கு தொடர்ச்சி மலைகளில் இருக்கின்ற குமுளி மலை, சுருளி மலை, மேகமலை, வெள்ளிமலை, சதுரகிரி மலை, குரங்கனி மலை உள்ளிட்ட மலைப் பகுதிகளில் இருந்து நீர் வரத்து ஏற்படும்.இதனால் இவ்வணையை நம்பி தேனி மாவட்ட மக்கள் மட்டுமின்றி மதுரை திண்டுக்கல் சிவகங்கை ராம்நாடு ஆகிய 5 மாவட்ட மக்களின் குடிநீர் ஆதாரமாகவும், விவசாயத்தின் உயிர் நாடியாக திகழ்ந்து வருகிறது.

ஆனால் இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்து ஏப் 21 ஆம் தேதி வரை எதிர் பார்த்த அளவிற்கு பருவ மழை பெய்யாததால், அணைக்கு நீர்வரத்து கணிசமாகவே இருந்து வந்த நிலையில் 21.04.26 நாளில் அணைக்கு வினாடிக்கு 8 கன அடி நீர் மட்டுமே வந்து கொண்டிருந்தது. மறுநாள் காலையில் அணைக்கு நீர்வரத்து முற்றிலும் தடைபட்டது.

ஆனால் இந்த ஆண்டு ஜனவரி 1ஆம் தேதியன்று அணையின் நீர்மட்டம் 65.35 அடியாகவும், நீர்வரத்து வினாடிக்கு 1095 கன அடியாகவும் இருந்த நிலையில், ஜனவரி 20 ஆம் தேதியன்று திடீரென பெய்த கனமழையால் அணைக்கு அதிக பட்சமாக நீர்வரத்து வினாடிக்கு 923 கன அடியாக அதிகரித்திருந்தது.

இதற்குப் பின்பு எதிர்பார்த்த அளவிற்கு பருவமழை பெய்யாததால் அணை பகுதிக்கு நீர் வரத்து குறைந்ததால் அணையில் இருந்து விவசாயத்திற்கும்குடிநீருக்கும் தண்ணீர் திறந்து விடப்பட்டதால் தற்போது அணையின் நீர்மட்டம் சரிவை நோக்கியே காணப்படுகிறது. ஆனால் கடந்த ஆண்டு இதே தேதியில் அணையின் நீர்மட்டத்தை ஒப்பிடுகையில் அணையின் நீர்மட்டம் 55.89 அடியாகவும் நீர்வரத்து வினாடிக்கு 14 கன அடியாகவும் நீர் இருப்பு 2863 மில்லியன் கனடியாகவும் நீர் வெளியேற்றம் வினாடிக்கு 72 கன அடியாகவும் இருந்ததால் கடந்த ஆண்டு கோடை காலத்தில் தண்ணீர்பற்றாக்குறை ஏற்படவில்லை.

ஆனால் இந்தாண்டு எதிர்பார்த்த அளவிற்கு பருவமழை பெய்யாததால் ஏப் 22 ஆம் தேதியிலிருந்து அணைக்கு நீர்வரத்து முற்றிலும் தடைபட்டு அணையின் நீர்மட்டம் சரிவை நோக்கி காணப்படுகிறது.

மேலும் இந்த ஆண்டு வழக்கத்தை விட கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்து காணப்படுவதால் அணையில் உள்ள நீர் சிறிது நாட்களுக்கு மட்டுமே பயன்படுத்தும் சூழலும் நிலவி வருவதால் பொதுமக்களும் விவசாயிகளும் கவலை அடைந்துள்ளனர்

இன்றைய காலை 6 மணிநிலவரப்படிவைகை அணையின் நீர்மட்டம் 30.41அடியாகவும், நீர் இருப்பு385 மில்லியன் கன அடி லிட்டராகவும், அணையின் நீர்த்தேக்க பகுதிக்கு நீர்வரத்து இன்றியும், அணையில் இருந்து குடி நீருக்கு 72 கன அடியாகவும் மதுரைசித்திரைதிருவிழாவிற்காக வினாடிக்கு 300 கன அடி என மொத்தம் 372 கன அடி நீர் வினாடிக்கு வெளியேற்றப்படுவது குறிப்பிடத்தக்கது.

## ஆண்டிபட்டி அருகே

# மாயமான பள்ளி சிறுவன் நீச்சல் குளத்தில் சடலமாக மீட்பு

### முன்னாள் ராணுவ வீரர் உட்பட 2 பேர் கைது

தேனி,ஏப்.29

தேனிமாவட்டம் ஆண்டிபட்டி அருகே டி. பொம்மிநாயக்கன் பட்டியை சேர்ந்தவர் பல்லவராஜா மனைவி அம்சவள்ளி(32).

இவர் குடும்பத்துடன் ஆண்டிபட்டி கணவாய் மலை பகுதியில் திம்மரச நாயக்கனூர் செக் போஸ்ட் எதிரே மலை அடிவாரத்தில் உள்ள தோட்டத்து வீட்டில் தங்கி விவசாயம் செய்து வருகிறார்.

இவர்களுக்கு ரித்தீஸ் முத்து (8), தங்கமுத்து என இரண்டு ஆண் குழந்தைகள்.

இதில் மூத்த மகன் ரித்தீஸ் முத்து என்பவர் நாள்தோறும் தோட்டத்து வீட்டில் இருந்து, திம்மரசநாயக்கனூருக்கு சென்று அங்குள்ள அரசு பள்ளியில் 4 ஆம் வகுப்பு படித்து வந்தார்.

தற்போது பள்ளி விடுமுறை என்பதால் ரித்தீஸ் முத்து, ஏப் 26 ஆம் தேதியன்று

தோட்டத்தில் இருந்த அவரது அம்மாவிடம், அப்பா உடன் ஆடு மேய்க்க செல்வதாக, கூறி விட்டு சென்றவர், வீடு திரும்பவில்லை எனவும் சிறுவனை எங்கு தேடியும் கிடைக்கவில்லை என சிறுவனின் அம்மா ஆண்டிபட்டி காவல் நிலையத்தில் அன்று இரவு புகார் அளித்தார்.

இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்த போலீசார், உடனே அன்று இரவு அப்பகுதியில் சென்று தேடிய போது,

ஆண்டிபட்டியில் கொண்டமநாயக்கன்பட்டியைச்சேர்ந்த சுப்பையா மகன் முன்னாள் ராணுவ வீரர் பாலமுருகன் (46) என்பவரின் தோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள நீச்சல் குளத்தின் கேட்டில் சிறுவனின் ஆடைகள் இருந்ததை போலீசார் கைப்பற்றினர். பின்னர் சந்தேகம் அடைந்த போலீசார், தீயணைப்பு படையினரை வரவழைத்து, இரவோடு இரவாக நீச்சல் குளத்திற்குள்ளே தேடியதில் சிறுவன் நீருக்குள் இறந்த நிலையில் கிடந்தவரை தீயணைப்பு படையினர் மீட்டு, சிறுவனின் உடலை போலீசாரிடம் ஒப்படைத்தனர்.

இதையடுத்து போலீசார் சிறுவனின் உடலை கைப்பற்றி, பிரேத பரிசோதனைக்காக தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குஅனுப்பிவைத்து விட்டு, போலீசார் விசாரணை நடத்தினர்.

விசாரணையில் நிலத்தின் உரிமையாளர் முன்னாள் ராணுவ வீரர் பாலமுருகன் என்பவர் அனுமதி இல்லாமல் நீச்சல் குளம் அமைத்து,

நீச்சல் பயிற்சி வழங்கி வருவதும், இறந்த சிறுவனின், தாய் தந்தையரின் நிலமும், முன்னாள் ராணுவ வீரரின் நிலமும் அருகே, அருகே அமைந்திருப்பதும், சிறுவன் அடிக்கடி நீச்சல் குளத்திற்கு சென்று வந்ததும், அதனால் அந்த சிறுவன் நீச்சல் குளத்தில் இறங்கி இருக்கலாம்! என்பது விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து, போலீசார் இது தொடர்பாக முன்னாள் ராணுவ வீரர் பாலமுருகன் மற்றும் தோட்டத்து காவலாளியான திம்மரச நாயக்னூரைச் சேர்ந்த சுப்ரமணி மகன் கந்தசாமி (53) ஆகிய இருவர் மீதும் மறு வழக்கு பதிவு செய்து, நேற்று இருவரையும் கைது செய்த போலீசார் அவர்களை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி சிறையில் அடைத்தனர்.



ராமநாதபுரம் பழைய பேருந்து நிலையம் அருகே ஏற்பட்ட போக்குவரத்து நெரிசலால் நீண்ட வரிசையில் காத்திருந்த வாகன ஓட்டிகள்.

## ராமநாதபுரம்

# பழைய பேருந்து நிலையத்தில் கடும் போக்குவரத்து நெரிசல்

### கூடுதல் போலீசார் நியமிக்க பொதுமக்கள் கோரிக்கை

ராமநாதபுரம்,ஏப்.29

ராமநாதபுரம் பழைய பேருந்துநிலையம்அருகே ரயில் நிலையம் அமைந்துள்ளது. இந்த ரயில்நிலையத்திற்கு தினசரி வரும் ஏராளமான பயணிகள், அங்கிருந்து மாவட்டத்திலுள்ள முக்கிய ஆன்மீக மற்றும் சுற்றுலாத்தலங்களான தேவிபட்டினம், திருப்புல்லாணி, உத்தர கோசமங்கை, ஏர்வாடி தர்கா உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்குச் செல்கின்றனர். சுற்றுலாப் பயணிகளுடன் உள்ளூர் பொதுமக்களும் அதிகளவில் இந்த ரயில் நிலையத்தைப் பயன்படுத்தி வருகின்றனர்.

ரயில் நிலையத்திலிருந்து ஒரே நேரத்தில் வெளியேறும் பயணிகளாலும், அங்கு அணிவகுக்கும் வாகனங்களாலும் பழைய பேருந்து நிலையப் பகுதியில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. பேருந்துகள், ஆட்டோக்கள் மற்றும் இருசக்கர வாகனங்கள் என அனைத்தும் ஒரே நேரத்தில் குவிவதால், அப்பகுதி ஸ்தம்பித்துக் காணப்படுகிறது. இதனால் வாகன ஓட்டிகள் குறித்த நேரத்திற்குச் செல்ல முடியாமல் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

இந்த போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்தவும், பொதுமக்களின் சிரமத்தைக் குறைக்கவும் மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக, பழைய பேருந்து நிலையப் பகுதியில் கூடுதல் போலீசாரை நியமித்து போக்குவரத்தைச் சீர் செய்ய வேண்டும் என சமூக ஆர்வலர்களும் பொதுமக்களும் வலியுறுத்தியுள்ளனர்.

## பாவூர்சத்திரம் அருகே

# 7 வயது சிறுமிக்கு பாலியல் தொந்தரவு செய்தவருக்கு 5 ஆண்டு சிறை

### தென்காசி கோர்ட்டு தீர்ப்பு

தென்காசி, ஏப்.29

பாவூர்சத்திரம் அருகே 7 வயது சிறுமிக்கு பாலியல் தொந்தரவு செய்தவருக்கு 5 ஆண்டு சிறைதண்டனை விதித்து தென்காசி கோர்ட்டில் தீர்ப்பளிக்கப்பட்டது.

தென்காசி மாவட்டம் பாவூர்சத்திரம் அருகே உள்ள லெட்சுமியூரில் சிறுமியை பாலியல் தொந்தரவு செய்ததோடு அதனை தட்டிக் கேட்ட சிறுமியின் தாய் தந்தையரை அவதூறாக பேசி தாக்கிய நபருக்கு தென்காசி நீதிமன்றம் 5 ஆண்டுகள் சிறை தண்டனையும் ரூபாய் 5 ஆயிரம் அபராதமும் விதித்து தீர்ப்பு அளித்தது.

தென்காசி மாவட்டம், பாவூர்சத்திரம் அருகேயுள்ள ஒரு கிராமத்தில் கடந்த 12221 அன்று வீட்டில் தனியாக இருந்த 7 வயது சிறுமியை, அதேப் பகுதியைச் சேர்ந்த அன்னப்பாண்டி மகன் ராஜ்குமார் (34) என்பவர் செல்போனில்விளையாடலாம் என்று கூறி அழைத்து பாலியல் தொந்தரவு செய்துள்ளார். இதற்கு மறுப்பு தெரிவித்த அச்சிறுமி இது பற்றி தனது தாயாரிடம் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி சிறுமியின் தந்தை மற்றும் தாயார் ராஜ்குமாரிடம் தட்டி கேட்ட போது, அவரது தாயை அவதூறாக பேசியதுடன், அவரது தந்தையை கல் வீசி தாக்கி, கம்பால் அடித்துள்ளார். இது பற்றி சிறுமியின் தாயார் ஆலங்குளம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் செய்தார். போலீசார் வழக்குப் பதிவு செய்து ராஜ்குமாரை போக்சோ சட்டத்தில் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இந்த வழக்கின் விசாரணை தென்காசி மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கினை விசாரித்த தென்காசி மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிபதி பி.ராஜவேலு, ராஜ்குமாருக்கு 5 ஆண்டுகள் சிறை தண்டனையும், ரூ.5 ஆயிரம் அபராதமும் விதித்து தீர்ப்பு வழங்கினார். இந்த வழக்கில் அரசு தரப்பு வழக்கறிஞர் குட்டி (எ) மருதப்பன் ஆஜராகி வாதாடினார்.

## கண்ணகி, வீரபாண்டி கவுமாரியம்மன் கோவில் சித்திரை திருவிழா

# முன்னேற்பாடு பணிகள் குறித்து கலெக்டர் ஆலோசனை

தேனி,ஏப்.28

தேனி மாவட்டத்தில் தமிழக கேரள எல்லையை ஒட்டி மேற்கு தொடர்ச்சி மலையின் உச்சியில் கடல் மட்டத்திலிருந்து 4,830 அடி உயரத்தில் 2 ஆயிரம் ஆண்டுகள் பழமையான மங்கலதேவி கண்ணகி கோவில் அமைந்துள்ளது.

இக் கோவில் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிக்குள் அமைந்துள்ளதால் ஆண்டுக்கு ஒரு முறை சித்ரா முழு நிலவு அன்று மட்டுமே பக்தர்கள், இக் கோவிலுக்கு செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

மே 1 ஆம் தேதி வெள்ளிக்கிழமை அன்று சித்திரை முழு நிலவு வருவதால் தேனி மாவட்ட நிர்வாகம் மற்றும் கேரள மாநிலத்தில் இடுக்கி மாவட்ட நிர்வாகம் மங்களதேவி கண்ணகி கோவிலுக்கு பக்தர்கள் சென்று வருவதற்கான கட்டமைப் பணிகளை செய்து வருகிறது.

இதற்காக நேற்று தேனி மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட கலெக்டர் ரஞ்ஜீத் சிங் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடந்தது.

இக் கூட்டத்தில் தமிழக கேரள மக்களால் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகின்ற இத்திருவிழா, இந்த ஆண்டு 01.05.2026 அன்று திருவிழா நடைபெற உள்ளது.

இத்திருவிழாவில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடு செய்ய இருப்பதால் தமிழக மற்றும் கேரள பக்தர்கள் குமுளியில் இருந்து கோவிலுக்கு செல்லுவதற்கு ஏதுவாக போக்குவரத்து வசதி, சுகாதாரம், குடிநீர், தற்காலிக பந்தல்கள் மற்றும் கழிப்பிட வசதி, பாதைகள் செப்பணிடுதல் போன்ற பணிகள் மேற்கொள்வது குறித்து ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டது.

அதனைத்தொடர்ந்து, தேனி மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற வீரபாண்டி அருள்மிகு கமாரியம்மன் திருக்கோவில் சித்திரை பெருந்திருவிழா ஆண்டுதோறும் வெகுவிமர்சியாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டு 12.05.2026 முதல் 19.05.2026 வரை 8 நாட்கள் திருவிழா நடைபெற உள்ளதால் இத்திருவிழாவில் இலட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு, சாமி தரிசனம் செய்ய உள்ளார்கள். மேலும் தோரோட்ட திருவிழா மே 15 அன்று சிறப்பாக நடைபெற உள்ளது.

இத்திருவிழாவில் பக்தர்கள் எவ்வித சிரமமுமின்றி தரிசனம் செய்திட ஏதுவாக போக்குவரத்து வசதி, சுகாதார வசதி, தற்காலிக பந்தல்கள், தற்காலிக கழிப்பிட வசதி, இருசக்கர வாகனம் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம், பக்தர்கள் வசதிக்காக ஆங்காங்கே குடிநீர் தொட்டிகள் அமைத்தல், அனைத்து முக்கிய சந்திப்புகள் மற்றும் பொதுமக்கள் அதிகமாகக் கூடும் இடங்களில் அளவு மின் விளக்குகள் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்வது தொடர்பாக அனைத்துத் துறை அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இத்திருவிழாக்களில் பக்தர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்குவது, தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவது, சுகாதாரத்துறை மற்றும் தீயணைப்புத்துறை, வனத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் அலுவலர்களுடன் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து மாவட்ட கலெக்டர் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் ராஜகுமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சினேஹாப்ரியா, மாவட்ட வன அலுவலர் கிரண், பெரியகுளம் சார் ஆட்சியர் ரஜத்பீடன் உள்ளிட்ட துறை சார்ந்த அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

மெட்ராஸ் மணி
MADRAS MANI DAILY TAMIL PUBLISHED FROM - CHENNAI

ஏப்ரல் 29 2026 புதன்கிழமை

# காவிரி மேலாண்மை ஆணைய கூட்டத்தை தள்ளிவைக்க வேண்டும்: அரசியல் கட்சி தலைவர்கள் வலியுறுத்தல்

சென்னை: 'தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகள் இல்லாததால் காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டத்தை தள்ளிவைக்க வேண்டும்' என அரசியல் கட்சி தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதுதொடர்பாக அவர்கள் வெளியிட்ட அறிக்கை: மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் பெ.சண்முகம்: காவிரி மேலாண்மை ஆணையத்தின் 50-வது கூட்டம் ஏப்.29-ம் தேதி டெல்லியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

காவிரி நீர் என்பது தமிழகம், கர்நாடகா, புதுச்சேரி, கேரளா உள்ளிட்ட மாநிலங்கள் தொடர்பானவை. தற்போது தமிழகம், புதுச்சேரி, கேரளாவில் சட்டப்பேரவை தேர்தல் நடைபெற்று வாக்கு எண்ணிக்கை மே 4-ம் தேதி நடைபெற உள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகள் இல்லாத சூழ்நிலையில், இந்தக் கூட்டத்தை நடத்துவது பொருத்தமாக இருக்காது.

மேலும், 29-ம் தேதி நடைபெற உள்ள கூட்டத்தின் பொருள் என்ன என்பதும் தெரிவிக்கப்பட வில்லை. எனவே, இந்தக் கூட்டத்தை தள்ளிவைத்து தேர்ந்தெடுக்கப்பட்டமாநிலஅரசுகள்பொறுப்பேற்ற பிறகு நடத்தவேண்டும்.

இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் மு. வீரபாண்டியன்: தற்போதுகாபந்து அரசுகளே பதவியில் உள்ளன. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகள் பதவி ஏற்க உள்ள நிலையில், மாநில அதிகாரிகளை வைத்து இக்கூட்டத்தை நடத்துவது பொருத்தமற்றது. எனவே, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட புது அரசுகள் பதவி ஏற்றவுடன் இக்கூட்டத்தை நடத்த வேண்டும்.

பாமக தலைவர் அன்புமணி: தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் முடிவடைந்து முடிவுகள் அறிவிக்கப்படாத நிலையில், இப்போதுள்ள அரசால் எந்த கொள்கை முடிவுகளையும் எடுக்க முடியாது.

இத்தகைய சூழலில் கூட்டத்தில் பங்கேற்கும் அதிகாரிகள் தவறான நிலைப்பாட்டை எடுத்தால் அது தமிழகத்துக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தி விடும். எனவே, மூன்று மாநிலங்களில் புதிய அரசுகள் பங்கேற்கும் வரை கூட்டத்தை ஒத்திவைக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## ராஜபாளையத்தில்

# பெண் திடீர் சாவு

### குழந்தை பெற்ற 16–வது நாளில் சோகம்

ராஜபாளையம், ஏப்.29

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் ஸ்ரீரெங்கபாளையம் தெருவைச்சேர்ந்தகுருநாதராஜா என்பவரது மகள் ஸ்வேதா (20). இவரது கணவர் சிவசங்கர் எலெட்ரிசியன் வேலை பார்த்து வருகிறார்.

ஸ்வேதா கர்ப்பமான நிலையில் அதே பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து வந்தார். 9 ஆவது மாதத்தில் பிரசர் அதிகமாக இருக்கிறது ஆதலால் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லுங்கள் என மருத்துவர்கள் கூறிவிட்டனர்.

இதையடுத்து ராஜபாளையம் அரசு மகப்பேறு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அறுவைச் சிகிச்சை மூலம் பெண் குழந்தை பிறந்தது. இதையடுத்து கடந்த 18 ம் தேதி வீடு திருப்பினார். தலைவலி ஏற்படுவதாக கூறிவந்தவர், நேற்று திடீரென உயிரிழந்தார்.

தெற்கு காவல் நிலைய காவல் துறையினர் பிரேதத்தை மீட்டு விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு உடற்கூறாய்விற்கு அனுப்பிவைத்தனர்.

இறப்புக்கான காரணம் பிரேத பரிசோதனைக்கு பிறகுதான் தெரியவரும் என கூறப்படுகிறது.

## சோழவந்தான் பகுதியில்

# மின்வெட்டை சரி செய்ய கூடுதல் பணியாளர்களை நியமிக்க கோரிக்கை

சோழவந்தான் ஏப் 29

மதுரை மாவட்டம் சோழவந்தான் மற்றும் சுற்றுவட்டார 20க்கும் மேற்பட்ட கிராமப் பகுதிகளில் அடிக்கடி ஏற்படும் மின்வெட்டை சரி செய்வதற்கு பணியாளர்கள் பற்றாக்குறையால் காலதாமதம் ஏற்படுவதாக பொதுமக்கள் புகார் தெரிவிக்கின்றனர் குறிப்பாக மேலக்கால் தென்கரை முள்ளி பள்ளம் உள்ளிட்ட பகுதிகளில் மின்சார வயர்கள் செல்லும்பகுதிகளில்தென்னை மரங்கள் மற்றும் வாழை மரங்கள் கொடிக்கால் உள்ளிட்டவை உள்ளன கோடை காலம் என்பதால் காய்ந்த மரங்கள் மின்சார வயற்களில் விழும்போது மின்தடை ஏற்படுகிறது இதனால் குடியிருப்பு பகுதிகளுக்கு செல்லும் மின்சாரம் தடைபடுவதால் பல்வேறு சமயங்களில் வீடுகளுக்கு மின்சாரம் இல்லாமல் பெண்கள் மற்றும் குழந்தைகள் வயதானவர்கள் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர்

மின்தடை ஏற்பட்டவுடன் சம்பந்தப்பட்ட மின்வாரிய அலுவலகத்திற்கு தகவல் தெரிவித்தும் போதிய பணியாளர்கள் இல்லாத நிலையில் மின்தடையை சரி செய்ய கால தாமதம் ஏற்படுவதாக பொதுமக்கள் புகார் தெரிவிக்கின்றனர். குறிப்பாக மேலக்கால் கிராமத்தில் மின்தடை ஏற்பட்டால் சரி செய்வதற்கு இரண்டு நாட்களுக்கு மேல் ஆவதாக பெண்கள் மற்றும் வீட்டின் உரிமையாளர்கள் கூறுகின்றனர். மின்வாரிய பணியாளர்களும் போதிய பணியாளர்கள் இல்லாத நிலையில் அனைத்து வேலைகளையும் குறைந்த அளவு பணியாளர்களைக் கொண்டு செய்ய வேண்டிய நிலை இருப்பதால் சிரமங்கள் ஏற்படுவதாகவும் ஆகையால் கூடுதல் பணியாளர்களை மின்வாரியம் நியமிக்க வேண்டும் கிராமப் பகுதிகளில் நிரந்தரமாக மின்வாரிய பணியாளர்களை நியமித்து மின்தடைகளை உடனுக்குடன் சரி செய்ய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என கூறுகின்றனர்.

கோடை காலம் உச்சத்தில் உள்ள நிலையில் அடுத்து வரும் காலங்களில் அதிக அளவு மின்வெட்டு ஏற்படும் என்பதால் தற்காலிகமாக கூடுதல் பணியாளர்களின் நியமித்து பொதுமக்களின் சிரமங்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என மின்வாரிய உயர் அதிகாரிகளுக்கு பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# தேனி அருகே லோடுமேன் தற்கொலை

தேனி,ஏப்.29

தேனி அருகே பழனி செட்டிபட்டியில் நாகம்மாள் கோவில் தெருவை சேர்ந்தவர் கண்ணன் மனைவி கலைச்செல்வி (26). இவர்களுக்கு திருமணம் முடிந்து 7 ஆண்டுகள் ஆகிறது. இவரது கணவர் தேனி அருகே அன்னஞ்சி பிரிவு பகுதியில் உள்ள ஒரு தனியார் மில்லில் லோடுமேன் வேலை பார்த்து வந்தார்.

இவரது கணவருக்கு குடிப்பழக்கம் இருந்து வந்துள்ளது.

இந்த நிலையில் சம்பவ நாளான ஏப் 26 தேதியன்று இரவு குடித்துவிட்டு வீட்டுக்கு வந்த, கண்ணனிடம் குடும்ப செலவிற்காக, கலைச்செல்வி பணம் கேட்டதாகவும் , அதற்கு கண்ணன் அவரது மனைவியிடம் தகராறு செய்து, அவரை வீட்டை விட்டு விரட்டி விட்டதாக தெரிகிறது.பின்னர் கலைச்செல்வி, அவரது பிள்ளைகளுடன் அடுத்த தெருவில் உள்ள அவரது அம்மா வீட்டுக்கு சென்று உள்ளார்.

இந்த சூழலில் கண்ணன் வீட்டின் படுக்க அறையில் தூக்கு மாட்டி தொங்கிய நிலையில் இருந்தவரை, உடனே அருகில் உள்ளவர்கள் உதவியுடன் மீட்டு அவரை பார்த்தபோது அவர் உயிரற்று சடலமாக இருந்ததாக கூறப்படுகிறது.

பின்னர் இதை அறிந்து அங்கு வந்த பழனி செட்டிபட்டி போலீசார் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துவிட்டு இது தொடர்பாக வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.


**Protium | புரோட்டியம் ஃபைனான்ஸ் லிமிடெட்**
(முன்னர் குரோத் சோர்ஸ் ஃபைனான்சியல் டெக்னாலஜிஸ் லிமிடெட்)

பதிவு மற்றும் பெருநிறுவன அலுவலக முகவரி: 7வது தளம், பிளாக் B2, ஃபேஸ் - I, நிர்லான் நாலெட்ஜ் பார்க், பஹாடி கிராமம், வெஸ்டர்ன் எக்ஸ்பிரஸ் நெடுஞ்சாலைக்கு அருகில், காமா தொழிற்பேட்டை, கோரேகான்(கிழக்கு), மும்பை-400063, மகாராஷ்டிரா.

**உடைமை அறிவிப்பு**- (பிரிவு 13(4)-இன் கீழ் மற்றும் பாதுகாப்பு வட்டி அமலாக்க விதிகள், 2002-இன் விதி 8(1)-உடன் சேர்த்துப் படிக்கப்படும் பின் இணைப்பு IV-இன் படி)

ஏனெனில்,கீழ்க்கையொப்பமிட்டுள்ள புரோட்டியம் ஃபைனான்ஸ் லிமிடெட் (முன்னர் குரோத் சோர்ஸ் ஃபைனான்சியல் டெக்னாலஜிஸ் லிமிடெட்) ("இனிமேல் "புரோட்டியம் ஃபைனான்ஸ் லிமிடெட்" எனக் குறிப்பிடப்படும்) நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியாக, நிதிச் சொத்துக்களைப் பத்திரமாக்குதல் மற்றும் மறுகட்டமைத்தல் மற்றும் பாதுகாப்பு வட்டி அமலாக்கச் சட்டம், 2002 (சட்டம் எண். 54/2002) (SARFAESI சட்டம்)-இன் கீழ், மற்றும் பாதுகாப்பு வட்டி (அமலாக்கம்) விதிகள், 2002-இன் விதி 3-உடன் சேர்த்துப் படிக்கப்படும் பிரிவு 13(12)-இன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, **கடன் வாங்கியவர்களான வெற்றி ஃபேப்ரிகேஷன்ஸ் நிறுவனத்தை, அதன் உரிமையாளர் சுரேஷ் குமார் பி, த/பெ பாஞ்ஜாமி மூலமாக, 11 பிப்ரவரி 2026 தேதியிட்ட ஒரு கோரிக்கை அறிவிப்பை வெளியிட்டேன். கூட்டுக் கடன் வாங்கியவர்; 1. சுரேஷ் குமார் பி, த/பெ. பாஞ்ஜாமி 2. கல்பனா எஸ், க/பெ. சுரேஷ் குமார் பி, GS004MF02222249 என்ற கடன் கணக்கு எண் கொண்ட கடனுக்காக, 11 பிப்ரவரி 2026 அன்று, அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையான ரூ. 27,41,571.13/- (இருபத்தேழு லட்சம் நாற்பத்தொரு ஆயிரம் ஐநூற்று எழுபத்தொரு ரூபாய் மற்றும் பதின்மூன்று பைசா மட்டும்)** ஐ, அந்த அறிவிப்பைப் பெற்ற நாளிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்த வேண்டும்.

கடன் வாங்கியவர் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியதால், கடன் வாங்கியவருக்கும் பொதுமக்களுக்கும் இதன்மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், 2002 ஆம் ஆண்டின் பாதுகாப்பு வட்டி அமலாக்க விதிகளின் விதி 8 உடன் சேர்த்துப் படிக்கப்படும் அந்தச் சட்டத்தின் பிரிவு 13 இன் துணைப் பிரிவு 4 இன் கீழ் தமக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தின் குறியீட்டு உடைமையை கீழ்க்கையொப்பமிட்டவர் இந்த நாளில் எடுத்துள்ளார். **2026 ஏப்ரல் 27 ஆம் நாள்.**

குறிப்பாகக் கடன் வாங்குபவர்களும், பொதுவாகப் பொதுமக்களும் இந்தச் சொத்துடன் எந்தவொரு பரிவர்த்தனையும் செய்ய வேண்டாம் என்று இதன்மூலம் எச்சரிக்கப்படுகிறார்கள். மேலும், இந்தச் சொத்துடன் செய்யப்படும் எந்தவொரு பரிவர்த்தனையும், **2026 பிப்ரவரி 11 ஆம் தேதி** நிலவரப்படி, புரோட்டியம் ஃபைனான்ஸ் லிமிடெட்டின் **INR 27,41,571.13/- (இருபத்தேழு லட்சம் நாற்பத்தொரு ஆயிரம் ஐநூற்று எழுபத்தொரு ரூபாய் மற்றும் பதின்மூன்று பைசா மட்டும்)** தொகைக்கான கட்டணத்திற்கும், அதன் மீதான கூடுதல் வட்டிக்கும், அத்துடன் ஏற்பட்ட செலவுகள், கட்டணங்கள் மற்றும் இதர செலவினங்களுக்கும் உட்பட்டதாகும்.

பாதுகாக்கப்பட்ட சொத்துக்களை மீட்கக் கிடைக்கும் கால அவகாசம் தொடர்பாக, சட்டத்தின் பிரிவு 13-இன் துணைப் பிரிவு (8)-இல் உள்ள விதிகளுக்குக் கடன் வாங்குபவரின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

**அசையாச் சொத்தின் விவரம்**

**வழங்குநர்/OEM பெயர்:** உபனல் சிஎன்சி பிரைவேட் லிமிடெட், **பொருட்களின் விவரம்:,** 1. ஒரு செட் ஜேஃப்ஒய் தயாரிப்பு சிஎன்சி ஹைட்ராலிக், பிரஸ் பிரேக். இயந்திரம், மாடல்: TPM8 225T/4100, வரிசை எண். TPM236140P, **எண்ணிக்கை - 1, விலைப்பட்டியல் எண் மற்றும் தேதி** - 231000131, தேதி 04.11.2023

**தேதி: 27 ஏப்ரல் 2026** | **Sd/-, புரோட்டியம் ஃபைனான்ஸ் லிமிடெட் சார்பாக**
**உடைமை இடம்:: தமிழ்நாடு** | **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி**


பென்னாகரம் அருகே

# கள்ளத்தனமாக மது விற்பனை செய்த கடைகளை அடித்து நொறுக்கிய பெண்கள்

தருமபுரி, ஏப். 29

தருமபுரி மாவட்டம் பென்னாகரம் சுற்று வட்டார பகுதிகளில் மதுபானங்களை கள்ளத்தனமாக விற்பனை செய்யும் சந்துக் கடைகள் ஆங்காங்கே செயல்பட்டு வருவதாக மக்கள் புகார் தெரிவித்து வருகின்றனர்.

இதுபோன்ற கடைகளால் ஏழை, எளிய மக்களின் குடும்ப பொருளாதாரம், குழந்தைகளின் கல்வி, வீட்டு நிம்மதி ஆகியவை பாழாவதாகக் கூறி காவல்துறையிடம் அப்பகுதி மக்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர். இருப்பினும், சந்துக் கடைகள் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இந்நிலையில், சந்துக்கடைகளால் ஆத்திரமடைந்த பெண்கள் உள்ளிட்டோர் திரண்டு பென்னாகரம் அடுத்த போடூர் பகுதியில் செயல்படும் 4 சந்துக் கடைகளை நேற்று கல்வீசி தாக்கி நொறுக்கினர். மேலும், இவற்றில் ஒரு கடையில் மது விற்பனையில் ஈடுபட்டவர் பெண்களிடம் தகராறு செய்ததால் அவரைத் தாக்க முயன்றனர்.

இதனால் அவர் மானாவாரி விளை நிலங்களில் குதித்து தப்ப முயன்ற போது பெண்கள் தொடர்ந்து அவரை விரட்டிச் சென்றதால் பரபரப்பு ஏற்பட்டது. இந்த சம்பவம் குறித்து தகவல் அறிந்த பென்னாகரம் போலீஸார் போடூர் பகுதியில் சந்துக் கடைகள் நடத்தி வந்த மாதேஷ் (59), சவுதா மணி (39), கோவிந்தராஜ் (48) ஆகிய 3 பேரைக் கைது செய்தனர். அவர்களிடம் இருந்து 56 மது பாட்டில்கள் பறிமுதல் செய்யப்பட்டன.


**Protium | புரோட்டியம் ஃபைனான்ஸ் லிமிடெட்**
(முன்னர் குரோத் சோர்ஸ் ஃபைனான்சியல் டெக்னாலஜிஸ் லிமிடெட்)

பதிவு மற்றும் பெருநிறுவன அலுவலக முகவரி: 7வது தளம், பிளாக் B2, ஃபேஸ் - I, நிர்லான் நாலெட்ஜ் பார்க், பஹாடி கிராமம், வெஸ்டர்ன் எக்ஸ்பிரஸ் நெடுஞ்சாலைக்கு அருகில், காமா தொழிற்பேட்டை, கோரேகான்(கிழக்கு), மும்பை-400063, மகாராஷ்டிரா.

**உடைமை அறிவிப்பு**- (பிரிவு 13(4)-இன் கீழ் மற்றும் பாதுகாப்பு வட்டி அமலாக்க விதிகள், 2002-இன் விதி 8(1)-உடன் சேர்த்துப் படிக்கப்படும் பின் இணைப்பு IV-இன் படி)

ஏனெனில், **புரோட்டியம் ஃபைனான்ஸ் லிமிடெட்** (முன்னர் குரோத் சோர்ஸ் ஃபைனான்சியல் டெக்னாலஜிஸ் லிமிடெட்) ("இனிமேல் "புரோட்டியம் ஃபைனான்ஸ் லிமிடெட்" எனக் குறிப்பிடப்படும்) நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியாகிய கீழ்க்கையொப்பமிட்டுள்ள நான், நிதிச் சொத்துக்களைப் பத்திரமாக்குதல் மற்றும் மறுகட்டமைத்தல் மற்றும் பிணைய வட்டி அமலாக்கச் சட்டம், 2002 (சட்டம் எண். 54/2002) (SARFAESI சட்டம்)-இன் கீழ், மற்றும் பிணைய வட்டி (அமலாக்கம்) விதிகள், 2002-இன் விதி 3-உடன் சேர்த்துப் படிக்கப்படும் பிரிவு 13 (12)-இன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, கடன் வாங்கியவர்களான **பிரெசிமெட்டல் வொர்க்ஸ் அதன் கூட்டாளிகளான கோவிந்தன் சிவ பாரதியின் மனைவி ஸ்ரீநிதி எச், கோவிந்தன் சிவபாண்டியனின் மனைவி ஸ்ரீநிதி எச், மற்றும் காளிதாஸின் மகள் சிவராஞ்சனி (இணைக் கடன் வாங்கியவர்); 1 சிவராஞ்சனி (மகள்) ஆகியோரைக் கோரி 27 டிசம்பர் 2025 தேதியிட்ட ஒரு கோரிக்கை அறிவிப்பை வெளியிட்டேன். 1. காளிதாஸ் 2. ஸ்ரீநிதி எச், கோவிந்தன் சிவபாண்டியனின் மனைவி 3. கோவிந்தன் சிவபாண்டியன், கோவிந்தனின் மகன் 4. கோவிந்தன் சிவபாரதி, கோவிந்தனின் மகன் ஆகியோர், GS013MF02396218 என்ற கடன் கணக்கு எண் தொடர்பாக, 27 டிசம்பர், 2025 அன்றுள்ள நிலவரப்படி, அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையான ரூ. 15,87,971.69/- (ரூபாய் பதினைந்து லட்சம் எண்பத்தேழு ஆயிரம் ஒன்பது நூற்று எழுபத்தி ஒன்று மற்றும் அறுபத்தி ஒன்பது பைசா மட்டும்)** தொகையை, அந்த அறிவிப்பைப் பெற்ற நாளிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்த வேண்டும்.

கடன் வாங்கியவர்கள் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியதால், சட்டத்தின் 13 ஆம் பிரிவின் துணைப் பிரிவு 4-இன் கீழ் தமக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தின் **அடையாளப்பூர்வமான உடைமையை** கீழ்க்கையொப்பமிட்டவர் எடுத்துக்கொண்டார் என்பதை கடன் வாங்கியவருக்கும் பொதுமக்களுக்கும் இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது. மேற்கூறிய சட்டத்தை, பாதுகாப்பு வட்டி அமலாக்க விதிகள், 2002-இன் விதி 8-உடன் சேர்த்து, 2026-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27-ஆம் தேதியன்று அமலுக்கு வருகிறது.

குறிப்பாகக் கடன் வாங்கியவர்களும், பொதுவாகப் பொதுமக்களும் இந்தச் சொத்துடன் எந்தவொரு பரிவர்த்தனையும் செய்ய வேண்டாம் என்று இதன்மூலம் எச்சரிக்கப்படுகிறார்கள். மேலும், இந்தச் சொத்துடன் செய்யப்படும் எந்தவொரு பரிவர்த்தனையும், **2025 டிசம்பர் 27-ஆம் தேதி நிலவரப்படி, புரோட்டியம் ஃபைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் சார்பில், INR 15,87,971.69/- (ரூபாய் பதினைந்தாயிரம் எண்பத்தேழு ஆயிரம் ஒன்பது நூற்று எழுபத்தொரு மற்றும் அறுபத்தொன்பது பைசா மட்டும்)** தொகை மற்றும் அதன் மீதான கூடுதல் வட்டி, அத்துடன் ஏற்பட்ட செலவுகள், கட்டணங்கள் மற்றும் இதர செலவினங்களுக்கும் உட்பட்டதாகும்.

பாதுகாக்கப்பட்ட சொத்துக்களை மீட்கக் கிடைக்கும் கால அவகாசம் தொடர்பாக, சட்டத்தின் பிரிவு 13-இன் துணைப் பிரிவு (8)-இல் உள்ள விதிகளுக்குக் கடன் வாங்கியவரின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

**அசையா சொத்தின் விவரம்**

**வழங்குநர்/ OEM பெயர்:** DMS இன்ஜினியரிங் இண்டஸ்ட்ரீஸ், **பொருட்களின் விவரம்** 1 1/2" துளையிடும் இயந்திரம் CKP தயாரிப்பு, H.P 960 RPM மோட்டார், குளிரூட்டி துணைக்கருவிகள், எதிர் எடை. 4 ஸ்பிண்டில் துளையிடும் தலை, நகரும் ஜிக் தட்டு வகை, கோலட் நட், சிறப்பு ஷாங்க் அடாப்டர், டிரைவா ஷாங்க் உடனான இயந்திரம் பொருத்தும் பிராக்கெட்-1 செட், **எண்ணிக்கை:-** 1 செட், 1 செட், **விலைப்பட்டியல் எண் & தேதி:-** DMS001/24-25, தேதி, 27.07.2023, **வழங்குநர்/ OEM பெயர்:** ACE டிசைனர்ஸ் லிமிடெட், பொருட்களின் விவரம்: ACE CNC லேத் மாடல்: J 300 LM, **எண்ணிக்கை** - 1, **விலைப்பட்டியல் எண் & தேதி** 2351222946, தேதி: 07.02.2024

**தேதி: 27 ஏப்ரல் 2026,** | **Sd/-, புரோட்டியம் ஃபைனான்ஸ் லிமிடெட் சார்பாக**
**உடைமை இடம்: தமிழ்நாடு** | **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி**


சோழவந்தான் அருகே

# ஆரம்ப சுகாதார நிலையத்தில் நாய் கடிக்கு தடுப்பூசி பற்றாக்குறை

## நோயாளிகள் அவதி

சோழவந்தான் ஏப் 29

மதுரை மாவட்டம் சோழவந்தான் அருகே மேலக்கால் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மேலக்கால் திருவேடகம் தென்கரை முள்ளிப்பள்ளம் மற்றும் சோழவந்தான் உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட கிராமம் மற்றும் நகர பகுதிகளிலிருந்து பொதுமக்கள் அன்றாடம் நூற்றுக்கு மேற்பட்டோர் தங்களின் நோய்களுக்கு சிகிச்சை பெற்று வருகின்றனர் இந்த நிலையில் நாய் கடிக்குதடுப்பூசி போடவருபவர்கள் அலைக்கழிக்கப்படுவதாக புகார் தெரிவித்துள்ளனர் சில தினங்களுக்கு முன்பு மேலக்கால் கிராமத்தைச் சேர்ந்த முக்கிய பிரமுகரின் மகனுக்கு நாய் கடித்த நிலையில் காலை 7 மணி அளவில் நாய் கடித்த பையனின் தாயார் மேலக்கால் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு தடுப்பூசி போடுவதற்காக அழைத்து வந்துள்ளார் இந்த நிலையில் அங்கு இருந்த மருத்துவ பணியாளர் தடுப்பு ஊசி இல்லை என்று கூறியதுடன் ஒரு மணி நேரம் கழித்து வரக் கூறியுள்ளார்

இதனால் அதிர்ச்சி அடைந்த அவர் ஒரு மணி நேரத்தில் நாய் கடித்த இடத்தில் விஷத்தன்மை முற்றி உயிருக்கு ஆபத்து ஏற்பட்டு விடும் எனகருதி தனது கணவருக்கு போன் செய்து ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வரவழைத்துள்ளார் மேலக்கால் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் நாய் கடிக்கு தடுப்பூசி பற்றாக்குறை உள்ளதா அல்லது அங்குள்ள பணியாளர்கள் தடுப்பூசி போடுவதில் அலட்சியம் காட்டுகின்றனரா என மாவட்ட சுகாதார அதிகாரிகள் ஆய்வு செய்ய வேண்டும் மேலும் இரண்டு நாட்களுக்கு முன்பு நடைபெற்ற சம்பவம் குறித்து உரிய விசாரணை நடத்தி தவறு நடந்திருக்கும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட பணியாளர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்எனகோரிக்கை விடுத்துள்ளனர்

மேலும் கிராமப் பகுதி மக்கள் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை முழுமையாக நம்பி உள்ள நிலையில் மருத்துவ உபகரணங்கள் தடுப்பூசிகள் போதிய அளவு வைத்து இருக்க மாவட்ட சுகாதார துறை ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு போதிய அறிவுறுத்தல் வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்


**CFM ARC thoughtful regeneration | சிஎஃப்எம் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட்**

பெருநிறுவன அலுவலகம்: முதல் தளம், வேக்ஃபீல்ட் ஹவுஸ், ஸ்ப்ராட் ரோடு, பல்லார்ட் கிழக்கு, மும்பை 400038

**கோரிக்கை அறிவிப்பு**

நாங்கள், **சி.எஃப்.எம் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் (சி.எஃப்.எம்ஏ.ஆர்.சி)** (ஹிரானந்தனி ஃபைனான்சியல் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்டிடன் உரிமை மாற்றம் பெற்றவர்), எங்கள் கார்ப்பரேட் அலுவலகம் 1வது தளம், வேக்ஃபீல்ட் ஹவுஸ், ஸ்ப்ராட் ரோடு, பல்லார்ட் கிழக்கு, மும்பை400038 இல் அமைந்துள்ளது. மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(2)இன் கீழ், பாதுகாக்கப்பட்ட கடனளிப்பவர் என்ற தகுதியில், இதன்மூலம் மீண்டும் ஒருமுறை அறிவிப்பை வழங்குகிறோம்.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் வாங்குபவர்கள்/கூட்டுக் கடன் வாங்குபவர்கள்/அடமானதாரர்கள் ஹிரானந்தனி ஃபைனான்சியல் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்டிடமிருந்து நிதி உதவியைப் பெற்றிருந்த நிலையில், நிதி உதவியைப் பெற்றிருந்தபோதிலும், கடன் வாங்குபவர்கள்/கூட்டுக் கடன் வாங்குபவர்கள்/அடமானதாரர்கள், வட்டி மற்றும் அசல் தொகைகளை உரிய தேதிகளில் திருப்பிச் செலுத்துவதில் தவறுகள் செய்துள்ளனர் என்று நாங்கள் குறிப்பிடுகிறோம். இந்திய ரிசர்வ் வங்கியால் வெளியிடப்பட்ட வழிகாட்டுதல்கள்/அறிவுறுத்தல்களுக்கு இணங்க, கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் இந்தக் கணக்கு செயல்படாத சொத்தாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. நிதிச் சொத்துக்களைப் பத்திரமாக்குதல் மற்றும் மறுகட்டமைத்தல் மற்றும் பாதுகாப்பு வட்டி அமலாக்கச் சட்டம் 2002இன் கீழ் CFMARCஇன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, பாதுகாப்பு வட்டி (அமலாக்கம்) விதிகள், 2002இன் விதி 3 உடன் சேர்த்துப் படிக்கப்படும் பிரிவு 13(12)இன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை ஒப்பந்த விகிதத்தில் கூடுதல் வட்டி, செலவுகள், கட்டணங்கள் மற்றும் இதர செலவுகள் போன்றவற்றுடன் செலுத்துமாறு கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் கடன் வாங்குபவர்கள்/கூட்டுக் கடன் வாங்குபவர்கள்/அடமானம் வைத்தவர்களுக்குக் கோரிக்கை அறிவிப்புகளை வழங்கியதைத் தொடர்ந்து இது நிகழ்ந்துள்ளது. இருப்பினும், அந்த அறிவிப்புகள் வழங்கப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டன, எனவே இது குறித்து பொது அறிவிப்பின் மூலம் அவர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

| கடன் வாங்குபவர்/இயக்குநர்/அடமானம் வைப்பவர்/ உத்தரவாதம் அளிப்பவரின் பெயர் மற்றும் முகவரி/ கடன் கணக்கு எண். | கோரிக்கை அறிவிப்பு தேதி வாராக்கடன் தேதி | கோரிக்கை அறிவிப்பின்படி செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை | அடமானம் வைக்கப்பட்ட சொத்து/ பிணையப்படுத்தப்பட்ட சொத்துக்களின் விளக்கம் |
|---|---|---|---|
| 1. ஆறுமுகம் பி (கடன் வாங்குபவர்/ அடமானம் வைப்பவர்) 2. பன்னீர்செல்வம் எம் (கூட்டுக் கடன் வாங்குபவர்) 3. ஜோதி பி (கூட்டுக் கடன் வாங்குபவர்) **கடன் கணக்கு எண்:** 4375058101015543 **அனுமதிக்கப்பட்ட கடன் தொகை ரூ.** 899879/ | 06-04-2026 / 02-02-2025 | 24.03.2026 அன்றுள்ள நிலவரப்படி ரூ. 103201/ (ரூபாய் பதினொரு லட்சம் மூவாயிரத்து இருநூற்று ஒன்று மட்டும்) | திருவண்ணாமலை மாவட்டம், செய்யார் பதிவு மாவட்டம், ஆரணி துணை மாவட்டம், ஆரணி தாலுகா, சேவூர் கிராமத்தில் அமைந்துள்ள 1030 சதுர அடி பரப்பளவுள்ள சொத்து. கிழக்குமேற்காக அளவிடும்போது, தெற்குப் பக்கம் 29 அடி, வடக்குப் பக்கம் 11 அடி, வடக்குதெற்காக அளவிடும்போது, கிழக்குப் பக்கம் 55 அடி, மேற்குப் பக்கம் 48 அடி என மொத்தம் 1030 சதுர அடி. |
| 1. ஜெயஸ்ரீ புரொவிஷன் ஸ்டோர் (கடன் வாங்குபவர்/ அடமானம் வைப்பவர்) 2. சதீஷ்குமார் மஞ்சுநாதன் (கூட்டுக் கடன் வாங்குபவர்) 3. அமுதா வி (கூட்டுக் கடன் வாங்குபவர்) **கடன் கணக்கு எண்:** 4375058101015588 **அனுமதிக்கப்பட்ட கடன் தொகை ரூ.** 1054033/ | 06-04-2026 / 05-05-2025 | ரூபாய் பதினொரு இலட்சம் முப்பத்தேழு ஆயிரம் எண்ணூற்று எண்பத்தேழு மட்டும்) ரூ. 1137887/ (26/03/2026 அன்றுள்ள நிலவரப்படி) | சர்வே எண் 374/9 இல் அமைந்துள்ள சொத்தின் அனைத்துப் பகுதிகளும், மொத்தம் 88 சதுர மீட்டர். வேலூர் மாவட்டம், வேலூர் பதிவு மாவட்டம், பள்ளிகொண்டா துணை மாவட்டம், அணைக்கட்டு தாலுகா, திப்பசமுத்திரம் மதுரா, குச்சிப்பாளையம் கிராமம். எல்லை: மேற்கில் பிரதான சாலை, கிழக்கில் சர்வே எண் 371 கொண்ட நிலம், தெற்கில் சர்வே எண் 374/10 கொண்ட நிலம், வடக்கில் சர்வே எண் 374/8 கொண்ட நிலம். அளவுகள் கிழக்கிலிருந்து மேற்கு வரை வடக்குப் பக்கம் 13 மீட்டர், தெற்குப் பக்கம் 16 மீட்டர், வடக்கிலிருந்து தெற்கு வரை கிழக்குப் பக்கம் 6 மீட்டர், மேற்குப் பக்கம் 6.8 மீட்டர். |
| 1. எஸ்.எஸ்.பி. பேக்ஸ் (கடன் வாங்குபவர்/ அடமானம் வைப்பவர்) 2. திருந்தயன் ஆர்.எம் (கூட்டுக் கடன் வாங்குபவர்) 3. விவேக் திருந்தயன் (கூட்டுக் கடன் வாங்குபவர்) 4. இந்திரா திருந்தயன் (கூட்டுக் கடன் வாங்குபவர்) **கடன் கணக்கு எண்:** 4375049101016106 **அனுமதிக்கப்பட்ட கடன் தொகை ரூ.** 1485032 | 06-04-2026 / 02-01-2025 | 30/03/2026 அன்றுள்ள நிலவரப்படி ரூ. 1787333/ (ரூபாய் பதினேழு இலட்சம் எண்பத்தேழு ஆயிரம் முன்னூற்று முப்பத்து மூன்று மட்டும்) | கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தின் அனைத்துப் பகுதிகளும். சர்வே எண். எஸ்.எஃப்.எண்.310/8. நாதம் எஸ்.எஃப்.எண்.70/2A. வருவாய் பதிவேட்டின்படி எஸ்.எஃப்.எண்.310/8. நாதம் எஸ்.எஃப்.எண்.70/2A. மொத்தப் பரப்பளவு1614 சதுர அடி. வீட்டுக் கதவு எண். 4/16. இடத்தின் பெயர், கிராமம், நகரம், பதிவு, துணை மாவட்டம் போன்ற அமைவிடம் கடச்சநல்லூர் கிராமம், குமாரபாளையம் தாலுகா, நாமக்கல் மாவட்டம், பள்ளிபாளையம் துணைப் பதிவு மாவட்டம், நாமக்கல் பதிவு மாவட்டம். 1614 சதுர அடி நிலக் கட்டிடத்திற்கான எல்லைகள், வடக்கே: கிழக்குமேற்குச் சாலை, தெற்கே: சித்ரா மற்றும் நாதம் எஸ்.எஃப். எண் 310/7க்குச் சொந்தமான சொத்து, கிழக்கே: நாதம் எஸ்.எஃப். எண் 310/7 மற்றும் நாதம் புரம்போக்கே நிலம், மேற்கே: வடக்குதெற்குச் சாலை. அளவீடுகள், வடக்குப் பக்கத்தில் கிழக்குமேற்காக 8.8 மீட்டர், தெற்குப் பக்கத்தில் கிழக்கு மேற்காக 12.0 மீட்டர். கிழக்குப் பக்கத்தில் வடக்குதெற்காக 9.2 மீட்டர், மேற்குப் பக்கத்தில் வடக்குதெற்காக மீட்டர், 6.8 மீட்டர் +3.0 மீட்டர் +2.8 மீட்டர். மொத்தப் பரப்பளவு 0.00150 சதுர மீட்டர், அல்லது 1614 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம். அனைத்துச் சலுகை உரிமைகள் மற்றும் பாதை உரிமைகளுடன். |

மேற்கூறிய சூழ்நிலைகளின் கீழ், கடன் வாங்குபவர்கள்/கூட்டுக் கடன் வாங்குபவர்கள்/அடமானம் வைப்பவர்கள்/சொத்துரிமைதாரர்கள், இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள், மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொகையையும், அத்துடன் அந்தத் தொகையின் மீது ஒப்பந்த விகிதங்களிலான கூடுதல் வட்டியையும், மற்றும் பணம் செலுத்தும் தேதி வரை மேலே குறிப்பிடப்பட்டுள்ள கடன் வாங்குபவர்கள்/கூட்டுக் கடன் வாங்குபவர்கள்/அடமானம் வைப்பவர்களால் ஏற்பட்ட இதர செலவுகள், கட்டணங்கள், முதலியனவற்றையும் CFM-ARC க்குச் செலுத்த வேண்டும் என இதன்மூலம் மீண்டும் ஒருமுறை அறிவிப்பு வழங்கப்படுகிறது. கடன் வாங்குபவர்கள்/கூட்டுக் கடன் வாங்குபவர்கள்/அடமானம் வைப்பவர்கள் மேற்கூறியவாறு CFM-ARC க்குப் பணம் செலுத்தத் தவறினால், அதன் செலவுகள் மற்றும் விளைவுகள் தொடர்பான முழுப் பொறுப்பையும் கடன் வாங்குபவர்கள்/கூட்டுக் கடன் வாங்குபவர்கள்/அடமானம் வைப்பவர்களே ஏற்கும் வகையில், CFM-ARC ஆனது சட்டத்தின் பிரிவு 13 (4) மற்றும் பொருந்தக்கூடிய விதிகளின் கீழ், மேலே குறிப்பிடப்பட்ட பாதுகாக்கப்பட்ட சொத்துக்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும். CFM-ARC இன் முன் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி, கடன் வாங்குபவர்கள்/கூட்டுக் கடன் வாங்குபவர்கள்/அடமானதாரர்கள், SARFAESI சட்டம், 2002இன் பிரிவு 13 (13) இன் கீழ், மேற்கூறிய சொத்துக்களை விற்பனை, குத்தகை அல்லது வேறு வழிகளில் மாற்றுவதற்குத் தடை செய்யப்பட்டுள்ளனர்.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி

தேதி: 29.04.2026 இடம்: சென்னை | சி.எஃப்.எம் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் சார்பாக



**UNITY Small Finance Bank | யூனிட்டி ஸ்மால் ஃபைனான்ஸ் வங்கி லிமிடெட்,**

கார்ப்பரேட் அலுவலகம்: சென்ட்ரம் ஹவுஸ், சி.எஸ்.டி சாலை, வித்யானகரி மார்க், கலினா, சாண்டாக்ரூஸ் (கிழக்கு), மும்பை 400 098

**பாதுகாக்கப்பட்ட சொத்துக்களை மின்-ஏல விற்பனை செய்வதற்கான பொது அறிவிப்பு**

'நிதிச் சொத்துக்களைப் பத்திரமாக்குதல் மற்றும் மறுகட்டமைத்தல் மற்றும் பாதுகாப்பு வட்டி அமலாக்கச் சட்டம்' 2002 (2002-இன் 54)-இன் கீழ் **யூனிட்டி ஸ்மால் ஃபைனான்ஸ் வங்கி லிமிடெட்**டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியாகிய நான், மற்றும் பாதுகாப்பு வட்டி (அமலாக்கம்) விதிகள், 2002-இன் பிரிவு 13(12)-ஐ (விதி 3)-உடன் சேர்த்துப் படிப்பதன் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்தானது நிலுவைத் தொகையை வசூலிப்பதற்காக "ஆன்லைன் மின்-ஏலம்" மூலம் விற்கப்படும் என்று பொதுமக்களுக்கு இதன்மூலம் அறிவிக்கிறேன்.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள மற்ற விதிமுறைகளைத் தவிர, இந்தச் சொத்தானது கண்டிப்பாக **"உள்ளபடியே", "உள்ளபடியே" மற்றும் "எந்தப் பொறுப்பும் இல்லை"** என்ற அடிப்படையில் விற்கப்படும்.

| கடன் வாங்குபவரின் பெயர் | கோரிக்கை அறிவிப்பின்படி பாதுகாக்கப்பட்ட கடனின் தொகை (தொகை ரூபாயில்) | சொத்தின் விவரம் | ஏலம் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி | சொத்தின் மின்-ஏலத்தின் தேதி மற்றும் நேரம் | ஒதுக்கீடு விலை (தொகை ரூபாயில்) | முன் பண வைப்புத்தொகை (தொகை ரூபாயில்) |
|---|---|---|---|---|---|---|
| **திரு. ரோஜர் கோட்யார்ன் கார்ப்பரேஷன் இந்தியா பிரைவேட் லிமிடெட் ("கடன் வாங்குபவர்/அடமானம் வைப்பவர்"), திரு. ஏ. துரை ராஜ் ("இயக்குநர் /உத்தரவாதம் அளிப்பவர்") மற்றும் திரு. எஸ். அனந்த் ("இயக்குநர் /உத்தரவாதம் அளிப்பவர்")** | **ரூ. 11,05,40,412.31/-** (வாங்குதல் ரசீது தள்ளுபடி, காலக் கடன் மற்றும் வணிகக் கடனுக்காக பதினொரு கோடி ஐந்தாயிரம் நாற்பதாயிரத்து நானூற்றுப் பன்னிரண்டு ரூபாய் மற்றும் முப்பத்தொரு பைசா (12.06.2024 வரையிலான வட்டி மற்றும் அதன் மீதான கூடுதல் வட்டி உட்பட)) | பிளாட் எண்.1 D, முதல் தளம், "ரெய்ன் ட்ராப்", எல். என். நகர், கலப்பட்டி கிராமம், கோயம்புத்தூர் 641035, தமிழ்நாடு. 1529.60 சதுர அடி சூப்பர் பில்ட்-அப் பரப்பளவு மற்றும் இரண்டு மூடப்பட்ட கார் பார்க்கிங் வசதியுடன். | **25.05.2026** | **26.05.2026 அன்று** காலை 11.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை. (தலா 10 நிமிடங்களுக்கு வரம்பற்ற நீட்டிப்பு) | **ரூ. 76,00,000/-** (ரூபாய் எழுபத்தி ஆறு லட்சம்) | **ரூ. 7,60,000/-** (ரூபாய் ஏழு லட்சம் அறுபதாயிரம் மட்டும்) |

**மின்-ஏல விற்பனையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்**

1. சொத்து, நிர்ணயிக்கப்பட்ட விலைக்குக் குறைவாக விற்கப்படாது. மேலும், யூனிட்டி ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் பாதுகாக்கப்பட்ட கடனளிப்பவராக உறுதிப்படுத்திய பின்னரே விற்பனை நடைபெறும். சொத்து கண்டிப்பாக **"உள்ளபடியே, இருக்கும் இடத்திலேயே" மற்றும் "உள்ளபடியே, என்னவாக இருக்கிறதோ அப்படியே" மற்றும் "எந்தப் பொறுப்புரிமையும் இன்றி"** விற்கப்படும்.
2. மின்-ஏலம், வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குநரான மெஸ்ஸர்ஸ். ஆர்கா இமார்ட் பிரைவேட் லிமிடெட் மூலம் www.auctionbazaar.com என்ற இணையதளத்தில் "ஆன்லைனில்" நடத்தப்படும்.
3. ஏலதாரர்கள் செல்லுபடியாகும் மின்னஞ்சல் முகவரியை வைத்திருக்க வேண்டும் {ஏலம் எடுக்க விரும்பும் நபருக்கு மின்னஞ்சல் முகவரி அவசியம், ஏனெனில் அனைத்து...} தொடர்புடைய தகவல்கள் மற்றும் ஐடி & கடவுச்சொல் ஒதுக்கீடு ஆகியவை மெஸ்ஸர்ஸ் ஆர்கா இமார்ட் பிரைவேட் லிமிடெட் (Auctionbazaar.com) மூலம் மின்னஞ்சல் வழியாகத் தெரிவிக்கப்படலாம்.
4. தகுதிபெற்ற வருங்கால ஏலதாரர்கள், மெஸ்ஸர்ஸ் ஆர்கா இமார்ட் பிரைவேட் லிமிடெட், 7-1-28/1/A / 1 , பார்க் அவென்யூ 1, அமீர்பேட், செகந்திராபாத், தெலங்கானா 500016 என்ற முகவரியிலிருந்து மின்-ஏலம் குறித்த ஆன்லைன் பயிற்சியைப் பெற்றுக்கொள்ளலாம். இணையதளம் www.auctionbazaar.com, உதவி எண் 8370969696, மின்னஞ்சல் முகவரி contact@auctionbazaar.com, support@auctionbazaar.com. மின்-ஏலத் தேதிக்கு முன்னர் ஏற்படும் எந்தவொரு இணைய வலையமைப்புச் சிக்கல் / மின்சாரத் தடை / வேறு ஏதேனும் தொழில்நுட்பக் குறைபாடுகள் / செயலிழப்பு போன்றவற்றிற்கு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி/வங்கி அல்லது மெஸ்ஸர்ஸ் ஆர்கா இமார்ட் பிரைவேட் லிமிடெட் (Auctionbazaar.com) பொறுப்பேற்காது. இதுபோன்ற எதிர்பாராத சூழ்நிலைகளைத் தவிர்க்க, ஆர்வமுள்ள ஏலதாரர்கள் தாங்கள் தொழில்நுட்ப ரீதியாகத் தயாராக இருப்பதை உறுதி செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மின்-ஏல நிகழ்வில் வெற்றிகரமாகப் பங்கேற்பதற்குத் தேவையான போதுமான மின்சாரத் துணை அமைப்பு முதலிய வசதிகளுடன் நன்கு தயார் நிலையில் உள்ளது.
5. முன்பண வைப்புத்தொகை **(EMD)** ஆனது, **RTGS/NEFT** நிதிப் பரிமாற்றம் மூலம், **நடப்புக் கணக்கு எண்-026881300002012, வங்கியின் பெயர்: யெஸ் பேங்க் லிமிடெட், கிளை: பாந்த்ரா, மும்பை, பயனாளியின் பெயர்: யூனிட்டி ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட், IFSC குறியீடு: YESB0000268 என்ற கணக்கிற்குச் செலுத்தப்பட வேண்டும்.**
6. நிர்ணயிக்கப்பட்ட விலைக்குக் குறைவான மற்றும்/அல்லது முன்பண வைப்புத்தொகை இல்லாத ஏலங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. ஏலதாரர்கள், குடியிருப்பு அடுக்குமாடிக் குடியிருப்பில் தங்களது மேலதிக ஏலத்தொகையை **ரூ. 1,00,000/- (ஒரு லட்சம் ரூபாய் மட்டும்)** மடங்குகளில் அதிகரிக்கலாம்.
7. வெற்றி பெற்ற ஏலதாரர், ஏலத்தொகை/விற்பனை விலையில் 25%-ஐ (ஏற்கனவே செலுத்தப்பட்ட முன்பணம் உட்பட) வெற்றி பெற்ற ஏலதாரர் அறிவிக்கப்பட்ட உடனேயே செலுத்த வேண்டும். வெற்றி பெற்ற ஏலதாரர், மீதமுள்ள 75% ஏலத்தொகை/விற்பனை விலையை, வெற்றி பெற்ற ஏலதாரர் அறிவிக்கப்பட்ட 15 நாட்களுக்குள், பொருந்தக்கூடிய TDS-க்கு உட்பட்டுச் செலுத்த வேண்டும்.
8. வெற்றி பெற்ற ஏலதாரர் மேலே குறிப்பிட்டுள்ளபடி விற்பனை விலையைச் செலுத்தத் தவறினால், முன்பணம் (EMD) உட்பட அனைத்து வைப்புத்தொகைகளும் எந்தவித முன்னறிவிப்பும் இன்றி பறிமுதல் செய்யப்பட்டதாகக் கருதப்படும். இருப்பினும், மீதமுள்ள 75% தொகையைச் செலுத்துவதற்கு மேலும் ஒரு நியாயமான கால அவகாசம் நீட்டிக்கப்படலாம், அது அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் முழுமையான விருப்புரிமைக்கு உட்பட்டது.
9. மின்னணு ஏலம் முடிவடைந்த பிறகு, வெற்றி பெறாத ஏலதாரர்களின் முன்பணத் தொகை (EMD), செயல்முறையின்படி வட்டியின்றித் திருப்பித் தரப்படும்.
10. அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் வழங்கப்பட்ட விவரங்கள், அவரது அறிவு, நம்பிக்கை மற்றும் பதிவுகளின்படி துல்லியமாகக் கூறப்பட்டுள்ளன. அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி எந்தவொரு பிழை, தவறான கூற்று அல்லது விடுபடல் போன்றவற்றிற்குப் பொறுப்பேற்க மாட்டார்.
11. அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியான கீழ்க்கையொப்பமிட்டுள்ள எனக்கு, எந்தவொரு ஏலத்தையும் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ, விற்பனையை ஒத்திவைக்கவோ/தள்ளிப்போடவோ/ரத்து செய்யவோ அல்லது விற்பனையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை எந்தவித முன்னறிவிப்பும் இன்றி அல்லது காரணங்கள் கூறாமல் மாற்றியமைக்கவோ முழுமையான உரிமையும் விருப்புரிமையும் உண்டு.
12. ஏலதாரர்கள், தங்கள் ஏலத்தைச் சமர்ப்பிக்கும் முன், சொத்தின் மீதான கட்டணங்கள்/சுமைகள் குறித்து விவேகமான விசாரணைகளை மேற்கொண்டு, சொத்தின் உரிமை, அளவு, தரம் ஆகியவற்றைப் பற்றித் தாங்களே திருப்தி அடைந்து கொள்ள வேண்டும். இணையவழி ஏலத்தைச் சமர்ப்பித்த பிறகு, சொத்தின் மீதான கட்டணங்கள், சுமைகள் மற்றும் வேறு எந்த விஷயம் போன்றவை தொடர்பான எந்தவொரு கோரிக்கையும் ஏற்கப்படாது.
13. சொத்து விற்பனையின் மீதான நிலுவைகள், பாக்கிகள், வரிகள், கட்டணங்கள், சட்டப்பூர்வமானவை அல்லது வேறுவிதமானவை, முத்திரைக் கட்டணம்/பதிவுக் கட்டணம் உட்பட அனைத்தையும் வாங்குபவரே ஏற்க வேண்டும்.
14. மேலும் விவரங்களுக்கு, மேலே குறிப்பிடப்பட்ட முகவரியில் உள்ள யூனிட்டி ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி **திரு. அசோக்குமார் மாண்டா, அலைபேசி எண் 9892294841 மற்றும் திரு. ரவேஷ், அலைபேசி எண் 9884004069** ஆகியோரைத் தொடர்பு கொள்ளவும்.
15. முழு விற்பனைத் தொகையும் பெறப்பட்ட பின்னரும், அதன் 15 நாட்களுக்குப் பிறகு, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் முன் அனுமதி மற்றும் உறுதிப்படுத்தலுக்குப் பின்னரும், விற்பனைச் சான்றிதழ் பதிவுடன் (தேவைப்பட்டால்) அசையாச் சொத்து(களின்) உடைமை ஒப்படைக்கப்படும். மேலும், விற்பனைச் சான்றிதழ் வாங்குபவர்(களின்) பெயரில் மட்டுமே வழங்கப்படும், வேறு எந்தப் பெயரிலும் வழங்கப்படாது.
16. கடன் வாங்குபவர்(கள்)/உத்தரவாதம் அளிப்பவர்(கள்) ஆகியோருக்கு SARFAESI விதிகள், 2002-இன் விதி 8 மற்றும் 9-இன் கீழ் சட்டப்பூர்வ விற்பனை அறிவிப்பு இதன்மூலம் வழங்கப்படுகிறது. மேலும் இந்த விற்பனையானது, நிதிச் சொத்துக்களைப் பத்திரமாக்குதல் மற்றும் மறுகட்டமைத்தல் மற்றும் பாதுகாப்பு வட்டி அமலாக்கச் சட்டம், 2002-இன் கீழ் பரிந்துரைக்கப்பட்ட விதிகள்/நிபந்தனைகள் மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும்.
17. இணையவழி ஏலங்களைச் சமர்ப்பிக்கும்போது/ஏல விற்பனையில் பங்கேற்கும்போது ஏற்படக்கூடிய எந்தவொரு பிணைய இணைப்புச் சிக்கல், கணினிப் பிழை மற்றும்/அல்லது மின்சாரப் பிரச்சினை மற்றும்/அல்லது வேறு ஏதேனும் சிக்கல்கள் மற்றும்/அல்லது அத்தகைய சிக்கல்களின் காரணமாக வங்கியால் ஏலங்கள் பெறப்படாமல் போனால், வங்கியோ அல்லது சேவை வழங்குநரோ பொறுப்பேற்க மாட்டார்கள்.
18. ஏல அறிவிப்பை வங்கியின் இணையதளத்தில் காணலாம் - **https://theunitybank.com/regulatory-disclosures.html**

**இந்த அறிவிப்பு, SARFAESI சட்டம் மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின்படி, அடுத்த ஏலம்/விற்பனைக்கு முன்னர் கடன் வாங்குபவர்/உத்தரவாதம் அளிப்பவர்கள்/அடமானம் வைப்பவர்களுக்கு சட்டப்பூர்வமான 15 நாட்கள் அறிவிப்பாகவும் செயல்படும்.**

தேதி: 29.04.2026 | Sd/-அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இடம்: கோயம்புத்தூர், தமிழ்நாடு | யூனிட்டி ஸ்மால் ஃபைனான்ஸ் வங்கி லிமிடெட் சார்பாக



**KLM AXIVA FINVEST LTD**

பெருநிறுவன அலுவலகம்: KLM கிராண்ட் எஸ்டேட், இடப்பள்ளி புறவழிச்சாலை, இடப்பள்ளி, எர்ணாகுளம் 682024, தொலைபேசி: 7558865300

**ஏல அறிவிப்பு**

KLM ஆக்சிவா ஃபின்வெஸ்ட் லிமிடெட், அடமானப் பொருட்களை 05.05.2026 அன்று கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகளில் முறையாக நடத்த முடிவு செய்துள்ளது. எனவே, கடனைத் திருப்பிச் செலுத்த அல்லது வட்டியுடன் புதுப்பிக்க விரும்பும் வாடிக்கையாளர்கள், ஏலக் காலத்திற்கு முன்பு தத்தமது கிளைகளைத் தொடர்பு கொள்ள வேண்டும். இருப்பினும், மேற்கூறிய காரணங்களால் ஏலத்தை நடத்தத் தவறினால், ஏலத்தை நடத்தும் இடத்திற்கு ஏல நடவடிக்கைகளை ஒத்திவைக்க நிறுவனத்திற்கு முழு அதிகாரம் உண்டு.KLM கிராண்ட் எஸ்டேட், இடப்பள்ளி பைபாஸ் சாலை, இடப்பள்ளி, எர்ணாகுளம் 682024.

**புதுக்கோட்டை:-2வது ஏல நாள் மற்றும் நேரம்: 07.05.2026, காலை 10.00 மணி. ஏல மையம்: கதவு எண்: 2382/P, ஜே.எம் டவரின் முதல் தளம், 2382, மேற்கு பிரதான வீதி, புதுக்கோட்டை, தமிழ்நாடு, அஞ்சல் குறியீடு-622001.**

**KEERANUR 202505090100792 202505090100904 202505090100945 202505090100963 202505090100971 202505090100990 202505090100991 PUDUKKOTTAI 202505250100587 VIRALIMALAI 202505120100797 202505120100837 202505120100862 202505120101001.**

**ராமநாதபுரம்:-2வது ஏல நாள் மற்றும் நேரம்: 08.05.2026, காலை 10.00 மணி. ஏல மையம்: கதவு எண்: 3/624, தர்மா பிளாசாவின் முதல் தளம், மதுரை மண்டலம் சாலை, பரமக்குடி, ராமநாதபுரம், 623707.**

**KAMUTHI 202505020100747 202505020100760 202505020100765 202505020100768 202505020100781 202505020100796 202505020100833 202505020100898.**

**தேனி:-2வது ஏல நாள் மற்றும் நேரம்: 09.05.2026, காலை 10.00 மணி. ஏல மையம்: கதவு எண் 227, தரைத்தளம். தளம், ஆர்.கே. வளாகம், (பேருந்து நிலையம் அருகில்) மதுரை-தேனி பிரதான சாலை, ஆண்டிப்பட்டி-625512**

**AUNDIPATTY-BUS STAND 202504610101060 202504610101139 202504610101205 202504610101290 202504610101329 202504610101350 AUNDIPATTY_CHETTIARPATTI 202504630101687 202504630101759 202504630101765 202504630101861 202504630101917 202504630101940 202504630101976 202504630102096 202504630102127 202504630102246.**

**விருதுநகர்:-2வது ஏலத் தேதி மற்றும் நேரம்: 11.05.2026, காலை 10.00 மணி ஏல மையம்: கதவு எண்: 64-7, முதல் தளம், கிட்டி பேலஸ் வளாகம், புல்லாலக்கோட்டல் சாலை, விருதுநகர், 625001**

**ARUPPUKOTTAI 202504450102251 202504450102307 202504450102337 202504450102771 202504450102812 202504450102813 202504450102866 202504450102876 202504450102930 202504450102946 202504450103028 202504450103058 202504450103107 202504450103125 202504450103128 202504450103147 202504450103184 202504450103211 SIVAKASI BUSSTAND 202504960100557 202504960100565 202504960100599 SRIVILLIPUTHUR 202504810101603 202504810101623 202504810101714 202504810101767 202504810101770 202504810102046 202504810102106 VIRUDHUNAGAR 202504360100156 202504360101471 202504360101472 202504360101536 202504360101555 202504360101604 202504360101607 202504360101622 202504360101627 202504360101638 202504360101778 202504360101780 202504360101960.**

**சிவகங்கை:-2வது ஏலத் தேதி மற்றும் நேரம்: 12.05.2026, காலை 10.00 மணி ஏல மையம்: கதவு எண்: 104, முதல் தளம், ஆலங்கிரி வளாகம், காவல் நிலைய நிறுத்தம், கலையர்கோயில், சிவகங்கை, 625706**

**DEVAKOTTAI - RAMNAGAR 202505300100649 202505300100650 202505300100692 202505300100693 202505300100694 KALAYARKOIL 202504560101046 202504560101081 202504560101114 202504560101171 202504560101215 202504560101277 202504560101278 202504560101279 MANAMADURAI 202504800100723.**

**மதுரை:-2வது ஏலத் தேதி மற்றும் நேரம்: 13.05.2026, காலை 10.00 மணி ஏல மையம்: கதவு எண்: 54, முதல் தளம், பிபி டவர், பாலம் ஸ்டேஷன் சாலை, செல்லூர், ஆத்ததுறை, 625002**

**OTHAKADAI 202504780100085 202504780100719 202504780100771 202504780100816 202504780100842 202504780100874 202504780100881 202504780100885 202504780100953 202504780100990 202504780101032 202504780101052 SELLUR 202504440100716 202504440100799 202504440100817 202504440100821 202504440100826 202504440100925 T – KALLUPATTI 202504790101025 202504790101062 202504790101063 202504790101091 202504790101092 USILAMPATTI 202504370100922 USILAMPATTITOWN 202504500100974.**

**தென்காசி: 2வது ஏலத் தேதி மற்றும் நேரம்: 14.05.2026, காலை 10.00 மணி ஏல மையம்: கதவு எண்: 10/688B, முதல் தளம், புவனேஸ்வரன் டிம்பர் டெப்போ, சுரண்டண்டல், மெயின் ரோடு, பயூர்த்சத்திரம், தென்காசி தாலுகா, தென்காசி, 629161**

**ALANGULAM 202506410100680 202506410100859 202506410100892 202506410100896 202506410100908 202506410100930 202506410100931 202506410101024 202506410101051 202506410101086 202506410101088 202506410101177 202506410101220 202506410101226 202506410101284 202506410101293 202506410101321 202506410101337 202506410101349 202506410101361 202506410101377 202506410101386 202506410101395 202506410101402 202506410101421 202506410101451 202506410101453 202506410101456 202506410101470 202506410101478 202506410101479 202506410101553 202506410101575 202506410101580 202506410101588 202506410101596 202506410101598 PAVOORCHATRAM 202504120100788 202504120100903 202504120100920 202504120100923 202504120100924 PULIYANGUDI 202504480101047 202504480101077 202504480101081 202504480101105 202504480101133 202504480101328 202504480101367 202504480101384 202504480101389 VADAKARAI 202505040101215 202505040101240 202505040101255 202505040101258 202505040101260 202505040101271 202505040101385 202505040101447 202505040101453 202505040101472 202505040101493 202505040101519 202505040101521 202505040101525 202505040101543 202505040101605 202505040101615 202505040101616 202505040101634 202505040101650 202505040101651 202505040101658 202505040101662 202505040101669.**

**தூத்துக்குடி-2வது ஏலத் தேதி மற்றும் நேரம்: 15.05.2026, காலை 10.00 மணி ஏல மையம்: அறை எண். 208/5642/4, ஸ்ரீ ராம் கட்டிடத்தின் முதல் தளம், பேருந்து நிலைய சாலை, உடங்குடி, தூத்துக்குடி, 628203**

**UDANGUDI 202504510101128 202504510101129 202504510102218 202504510102239 202504510102537 202504510102859 202504510102964.**

**திருநெல்வேலி:-2வது ஏலத் தேதி மற்றும் நேரம்: 16.05.2026, காலை 10.00 மணி ஏல மையம்: கதவு எண்: 97A/10, நேதாஜி சாலை, மேலப்பாளையம், திருநெல்வேலி, 627005**

**CHERANMAHADEVI 202505580100955 202505580101130 202505580101243 202505580101288 202505580101373 202505580101411 202505580101502 202505580101529 202505580101695 202505580101696 202505580101728202505580101782 KOODANKULAM 202504270103005 MELEPALAYAM 202503970100861 202503970100862 202503970101036 PALAYAMKOTTAI 202503930100964 SAMADHANAPURAM 202504080101010 202504080101076 202504080101081 202504080101264 202504080101303 202504080101351 202504080101352 TIRUNELVELITOWN 202504140100738 202504140100971VEERAVANALLUR 202503840101046 202503840101244 202503840101272 202503840101306 202503840101346 202503840101378 202503840101432 202503840101468 202503840101477 202503840101495 202503840101502 202503840101530 202503840101551 202503840101591.**

**கன்னியாகுமரி:-2வது ஏலத் தேதி மற்றும் நேரம்: 18.05.2026, காலை 10.00 மணி ஏல மையம்: கதவு எண்: 21/104C, முதல் தளம், பீனியல் பிளாசா, பெட்ரோல் பம்ப் எதிரில், மெய்யூர் சாலை, திங்கள் சந்தை, மெய்யூர் அஞ்சல், கன்னியாகுமரி, 629802**

**ANJUGRAMAM 202503650101061 202503650101121 ARUMANAI 202503590101087 202503590101091 ENAYAM PUTHENTHURAI 202504210101072 202504210101090 202504210101094 202504210101190 202504210101197 202504210101304 202504210101351 KULASEKARAM 202503960100535 202503960100570 202503960100602 202503960100612 202503960100613 202503960100614 202503960100655 202503960100705 202503960100706 MARTHANDAM 202503940100509 MEKKA MANDAPAM 202504180100975 202504180101097 202504180101191 NAGERCOIL BEACH ROAD 202504280100564 RAJAKKAMANGALAM 202504000100536 202504000100635 THIRUVATTAR 202504750101147 202504750101197 202504750101211 202504750101425 202504750101490 202504750101499.**

### பகல்– இரவு மின் தேவை பகுப்பாய்வு:

# 10 ஆண்டு கால மின்திட்டத்தை உருவாக்க மின்வாரியம் முடிவு

சென்னை, ஏப்.29–

பகல் மற்றும் இரவு நேர மின்தேவையை பகுப்பாய்வு செய்து பத்து ஆண்டு கால மின் திட்டத்தை உருவாக்க மின் பகிர்மான கழகம் திட்டமிட்டுள்ளது.

தமிழகத்தின் தினசரி மின்சார தேவை சராசரியாக 16 ஆயிரம் மெகாவாட் என்ற அளவில் இருக்கும். கோடை காலங்களில் 20 ஆயிரம் மெகாவாட்டையும் கடந்து மின் தேவை அதிகரிகரிக்கும். தமிழகத்தில் கடந்த 21ம் தேதி அதிகபட்ச மின் தேவை 21,060 மெகாவாட் பதிவானது.

தமிழக மின் வாரியம் தனக்கு சொந்தமான அனல், எரிவாயு மின் நிலையங்கள், சூரியசக்தி மற்றும் காற்றாலைகள் மூலமாக மின் உற்பத்தி செய்து தேவையை பூர்த்தி செய்யும், இதைத் தவிர மத்திய அரசின் மின் உற்பத்தி நிலையங்களில் இருந்து கிடைக்கும் தமிழகத்துக்கான பங்கில் இருந்தும் தேவை பூர்த்தி செய்யப்படுகிறது.

இந்நிலையில் இந்த மின் தேவையை பகல் நேரம் மற்றும் இரவு நேரம் என பிரித்து அதில் ஏற்படும் இடைவெளியை பகுப்பாய்வு செய்து 10 ஆண்டு கால மின் திட்டத்தை உருவாக்க மின் பகிர்மான கழகம் திட்டமிட்டுள்ளது.

மின் வாரியத்தை பொறுத்தவரை காலை 7 முதல் மாலை 6 மணி வரை உள்ள தேவையை பகல் நேர மின் தேவையாகவும், மீதமுள்ள நேரங்களை இரவு நேர மின் தேவையாகவும் கணக்கிட்டுள்ளது.

இது குறித்து மின் வாரிய அதிகாரிகள் கூறியதாவது: மத்திய மின்சார ஆணையத்தின் மின் தேவை மற்றும் அதனை பூர்த்தி செய்யும் திறன் தொடர்பான 2026–27 முதல் 2035–36 ஆண்டு வரையிலான தேசிய மின்சார திட்ட அறிக்கையில் மார்ச் முதல் ஜூன் மாதம் வரை பகல் நேரத்தில் அதிக மின்தேவையும், இரவு நேரத்தில் அது 3ஆயிரம் முதல் 4 ஆயிரம் மெகாவாட் வரை குறையும் என தெரிவித்துள்ளது.

கோடை காலங்களில் பகல் மற்றும் இரவு நேரங்களுக்கு இடையிலான இடைவெளி அதிகமாக இருக்கும். பகல் நேர அதிக தேவை சூரிய மின் உற்பத்தியால் பூர்த்தி செய்யப்படுகிறது.

இருப்பினும், நவம்பர் மற்றும் டிசம்பர் போன்ற பருவமழை மற்றும் குளிர் கால மாதங்களில், குறைந்த சூரிய உற்பத்தி மற்றும் நுகர்வு முறைகள் காரணமாக இந்த இடைவெளி குறைகிறது, சில நேரங்களில் அப்படியே தலைகீழாக மாறுகிறது.

பருவமழை காலத்தில் போதிய அளவு மழை பெய்யாததால் தேவை அதிகரித்தது. இந்த தேவை மரபுசார் மின் உற்பத்தி ஆதாரங்கள் வாயிலாகவே பூர்த்தி செய்யப்பட்டது. ஆனால் இரவு நேர தேவையில் பெரிய மாற்றம் ஏதும் ஏற்படவில்லை.

தற்போது கார்பன் உமிழ்வை குறைக்க புதுப்பிக்கத்தக்க ஆதாரங்கள் மூலம் பசுமை மின் உற்பத்தி திறன் அதிகரித்து வரும் நிலையில் பகல் மற்றும் இரவு நேர தேவையை பகுப்பாய்வு செய்து 10 ஆண்டுகால மின் திட்டத்தை உருவாக்க திட்டமிட்டுள்ளோம்.

இதன்மூலம் மின்சாரத் தேவையை பூர்த்தி செய்வதற்கு அனல் மின் நிலையம், சூரிய சக்தி, காற்றாலை போன்ற ஆதாரங்கள் எவ்வளவு பங்களிப்புகளை வழங்க வேண்டும் என்பது மதிப்பீடு செய்யப்படும். மேலும் எந்த நேரத்துக்காக எவ்வளவு சேமிக்க வேண்டும் என்பதையும் மதிப்பிட உதவும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

### பிரபல இசையமைப்பாளர்

# ஜேம்ஸ் வசந்தன் கார் கண்ணாடி உடைப்பில் அரசியல் இல்லை

## காவல்துறை விசாரணையில் தகவல்

சென்னை, ஏப்.29–

சென்னை பாலவாக்கம் பகுதியில் பிரபல இசையமைப்பாளர் ஜேம்ஸ் வசந்தன் குடும்பத்துடன் வசித்து வருகிறார். இவர் சுப்ரமணியபுரம், பசங்க உள்ளிட்ட பல்வேறு திரைப்படங்களுக்கு இசையமைத்துள்ளார்.

கடந்த சில நாட்களாக த.வெ.க. தலைவர் விஜயையும், அவரது அரசியல் குறித்தும் ஜேம்ஸ் வசந்தன் தனது சமூக வலைத்தளப் பக்கத்தில் தொடர்ந்து விமர்சித்து வருகிறார். பல்வேறு கலந்துரையாடல் நிகழ்ச்சிகளுக்கும் சென்று த.வெ.க. தலைவர் விஜய்யின் அரசியலை கடுமையாக விமர்சித்து வருகிறார்.

இதற்கு எதிர்வினை



யாற்றும் வகையில் தவெக தொண்டர்களும் அவரை கடுமையாக விமர்சித்து வருகின்றனர்.

இந்த நிலையில், நேற்று சென்னை கொட்டிவாக்கம் பகுதியில் இசையமைப்பாளர் ஜேம்ஸ் வசந்தனின் கார் கண்ணாடி அடையாளம் தெரியாத நபர்களால் உடைக்கப்பட்டதாகப் புகார் எழுந்துள்ளது. இது குறித்து அவர் தன்னுடைய சமூகவலைத்தளப் பக்கத்தில், தன்னுடைய கார் கண்ணாடி உடைப்பட்டு சேதப்படுத்தப்பட்ட வீடியோவை பகிர்ந்துள்ளார்.

அதில் தறுதலைகளின் வேலையா அல்லது தற்குறிகளின் வேலையா என்று தெரியவில்லை என்றும் இன்று மதியம் நான் ஒரு உணவகத்திற்குச் சாப்பிடச் சென்றபோது இந்த சம்பவம் நடைபெற்றுள்ளது" என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தமிழக வெற்றிக் கழகத்திற்கு எதிராக தான் கருத்துக்களை தெரிவித்து வருவதால் அக்கட்சியை சேர்ந்தவர்கள் இது போன்ற சம்பவத்தில் ஈடுபட்டு இருக்கலாம் எனவும் அவர்களின் போக்கு சமூக வலைதளத்தில் சரியானதாக இல்லை எனவும் ஜேம்ஸ் வசந்தன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக திருவான்மியூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டதில் ஜேம்ஸ் வசந்தன் உணவகத்தின் வாசலில் கார் நிறுத்த இடம் இல்லாததால் அருகில் சாலை ஓரத்தில் நிறுத்தியதாக கூறப்படுகிறது.

அவ்வாறு நிறுத்தியதில் பெண் ஒருவர் வீட்டிற்குள் செல்ல முடியாத சூழல் காரணமாக ஆத்திரத்தில் கார் கண்ணாடியை உடைத்தது தெரியவந்துள்ளது. இதனை எடுத்து ஜேம்ஸ் வசந்தன் கார் கண்ணாடி உடைக்கப்பட்டதில் எந்தவித அரசியலும் இல்லை என போலீசார் தெரிவித்துள்ளனர்.

### கள்ளழகர் ஆற்றில் இறங்குவதற்காக

# வைகையில் திறக்கப்பட்ட தண்ணீர் சோழவந்தான் வந்தடைந்தது

சோழவந்தான் ஏப்ரல் 29

மதுரை மாவட்டம் சோழவந்தானில் ஜெனக நாராயண பெருமாள் கள்ளழகர் வேடம் பூண்டு வருகின்ற மே 1ஆம் தேதி சோழவந்தானில் உள்ள வைகை ஆற்றில் இறங்க உள்ளார் இந்த நிலையில் கள்ளழகர் இறங்கும் நிகழ்ச்சிக்காக வைகை அணையில் இருந்து திறக்கப்பட்ட தண்ணீர் நேற்று சோழவந்தான் வந்தடைந்தது இங்குள்ள ஜெனக நாராயண பெருமாள் கோவிலில் சித்திரைத் திருவிழாவை முன்னிட்டு வருடம் தோரும் சித்ரா பௌர்ணமி அன்று ஜெனக நாராயண பெருமாள் கள்ளழகர் வேடம் பூண்டு வைகை ஆற்றில் இறங்குவது தொன்று தொட்டு நடைபெற்று வருகிறது அதே போல் இந்த ஆண்டும் வருகின்ற மே 1ஆம் தேதி காலை ஜெனக நாராயண பெருமாள் கள்ளழகர் வேடம் பூண்டு சோழவந்தான் வைகை ஆற்றில் இறங்க உள்ளார் மதுரை அடுத்து அதிக அளவு மக்கள் கள்ளழகரை தரிசிக்க சோழவந்தான் நகருக்குள் வருவார்கள் என்பதால் சோழவந்தான் நகரம் முழுவதும் அன்று விழாக்கோலம் பூண்டு காணப்படும் முன்னதாக காலை 6 மணி அளவில் சோழவந்தான் காவல் நிலையத்தில் இருந்து ஜெனக நாராயண பெருமாள் கள்ளழகர் வேடத்தில் பல்வேறு மண்டகப் படிகளில் பொது மக்களுக்கு தரிசனம் செய்து அழைத்து வரப்படுவார் பின்னர் வைகை ஆற்றில் கள்ளழகர் இறங்கி பக்தர்களுக்கு காட்சி தருவார் பின்னர் ஆற்றில் கள்ளழகருக்கு பல்வேறு அபிஷேகங்கள் அலங்காரங்கள் நடைபெற்று பக்தர்களுக்கு காட்சி தருவார் இதற்காக வைகை அணையில் இருந்து திறக்கப்பட்ட தண்ணீர் ஆனது நேற்று மாலை சோழவந்தான் வந்தடைந்தது சோழவந்தான் வைகை ஆற்றில் தண்ணீர் வந்ததை தொடர்ந்து பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர் கள்ளழகர் இறங்கும் வைபவத்தை முன்னிட்டு சோழவந்தான் வைகை ஆற்றுப்பகுதியை சீரமைக்கும் பணிகளில் சோழவந்தான் பேரூராட்சி நிர்வாகமும் சோழவந்தான் ஜெனக நாராயண பெருமாள் கோவில் நிர்வாக அதிகாரி மற்றும் பணியாளர்களும் ஈடுபட்டு வருகின்றனர்.

### செட்டிப்புணியம் கிராமத்தில்

# கிணற்றில் தவறி விழுந்த 5 வயது சிறுவன் பலி

செங்கல்பட்டு, ஏப். 29–

செங்கல்பட்டு தாலுகா காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட மகேந்திரா சிட்டி அடுத்த செட்டிப்புண்ணியம் கிராமத்தை சேர்ந்தவர் லிங்கம்(30) இவர் டிரைவராக வேலை செய்து வருகிறார்.

இவருக்கு மனைவி மற்றும் ஐந்து வயதில் யுவராஜ் என்கிற மகனும் உள்ளனர்.

இந்நிலையில் வழக்கம்போல லிங்கம் வேலைக்கு சென்றுவிட்டார். மனைவி ஆடு மேய்ப்பதற்காக கழனிக்கு சென்றுள்ளதாக கூறப்படுகிறது.

சிறுவன்வீட்டின்அருகே ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் யுகேஜி பயின்று வந்துள்ளார்.

எப்போதும் அப்பா வேலைக்கு சென்று விடுவார். அம்மா ஆடு மேய்க்க சென்று விடுவார். சிறுவன் பள்ளிக்கு சென்றுவிட்டு வந்து அக்கம்பக்கத்தில் உள்ள சிறுவர்களோடு விளையாடுவது வழக்கம். அதிலும் தற்போது கோடை விடுமுறை என்பதால் எப்போதும்போல அக்கம் பக்கத்து சிறுவர்களோடு தொடர்ந்து விளையாடி கொண்டிருந்த சிறுவன் அம்மாவை தேடி கழனிக்கு சென்றபோது கால் தவறி விவசாய கிணற்றில் விழுந்து விட்டதாக கூறப்படுகிறது. சிறுவன் விளையாடக்கூடிய பொம்மை அந்த கிணற்றில் மிதப்பதை கண்ட அப்பகுதியை சேர்ந்தவர் ஊருக்குள் தகவல் தெரிவித்ததுடன் கிணற்றில் குதித்து சிறுவனை மீட்டு செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றனர்.

சிறுவனை பரிசோதித்த மருத்துவர்கள் சிறுவன் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். இதுகுறித்து கிடைத்த தகவலின் அடிப்படையில் செங்கல்பட்டு தாலுகா போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். சிறுவன் கிணற்றில் விழுந்து இறந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

### திருச்செந்தூர்

# முருகன் கோவிலில் விஜய் சாமி தரிசனம்

## வேலுடன் வந்து வழிபட்டார்

திருச்செந்தூர், ஏப்.29–

திருச்செந்தூர் முருகன் கோவிலில்த.வெ.க.தலைவர் விஜய் வேலுடன் வந்து சாமி தரிசனம் செய்தார்.

தமிழக வெற்றிக்கழக தலைவர் விஜய் நேற்று இரவு சென்னையில் இருந்து தனி விமான மூலம் புறப்பட்டு மதுரை விமான நிலையம் வந்து அடைந்தார். அங்கிருந்து கார் மூலம் திருச்செந்தூர் தனியார் விடுதிக்கு வந்து சிறிது நேரம் ஓய்வெடுத்தார். பின்னர் அங்கிருந்து வேஷ்டி சட்டை அணிந்து கொண்டு சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு கார் மூலம் சென்றார்.

பின்னர் கோவில் வளாகத்தில் இருந்து பேட்டரி கார்மூலம் சண்முகவிலாச மண்டபம் அருகில் வந்தார். கோவில் கடல் புனித தீர்த்தத்தில் கால்களை நனைத்து விட்டு பின்னர் சண்முக விலாசம் மண்டபம் வந்தார். அங்கு திரிசுதந்திரர்கள் சார்பில் பூரணகும்ப மரியாதை கொடுக்கப்பட்டது. மேலும் இரண்டு அடி வேல் கொடுக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கையில் வேலுடன் கோவிலில் மூலவர், சண்முகர் சன்னதியில் விஸ்வரூப தீபாராதனை தரிசனம் செய்தார். பினனர் பஞ்சலிங்க தரிசனம் செய்த அவர் தக்ஷிணாமூர்த்தி பெருமாள் சத்ரு சம்ஹார மூர்த்தி ஆகிய சன்னதிகளில் வழிபாடு நடத்தினார். விஜய் கோவிலுக்கு வருவதை தெரிந்த ஆயிரக்கணக்கான ரசிகர்கள் விஜய் காண சண்முக விலாச மண்டபம் முன்பு குவிந்தனர்.

இதனால் தரிசனம் முடித்து வடக்கு வாசல் வழியாக வெளியே வந்த கார்மூலம்தனியார்ரிசார்ட் சென்றார். இதனால் காத்திருந்த ரசிகர்கள் ஏமாற்றம் அடைந்தனர். அங்கு சிறிது நேரம் ஓய்வெடுத்துவிட்டு கார் மூலம் தூத்துக்குடி விமான நிலையம் சென்றார். பின்னர் அங்கிருந்து தனி விமான மூலம் சென்னை சென்றடையுள்ளார்.

தமிழக சட்டமன்ற தேர்தல் 23ம் தேதி நிறைவு பெற்ற நிலையில் தமிழக வெற்றி கழக தலைவர் விஜய் திருச்செந்தூர் முருகன் கோவிலில் சுவாமி தரிசனம் செய்தது, அரசியல் வட்டாரத்தில் பேசும் பொருளாக மாறி உள்ளது.



### ஆழ்வார் குறிச்சி அருகே

# டிரான்ஸ்பார்மரிலிருந்து விழுந்தவர் சாவு

## சிகிச்சை பலனின்றி இறந்தார்

கடையம், ஏப். 29

ஆழ்வார்குறிச்சி அருகே மின்மாற்றியில் பழுது பார்க்க ஏறியபோது, கீழே விழுந்து காயமடைந்த பேரூராட்சி ஒப்பந்தப் பணியாளர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அவர் சிகிச்சை பலனளிக்காமல் நேற்று அவர் உயிரிழந்தார். இதற்கு உரிய இழப்பீடு வழங்குவதோடு மின்வாரிய ஊழியர் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி ஆழ்வார்குறிச்சி மின்வாரிய அலுவலகத்தை நேற்று இரவு உறவினர்கள் உள்ளிட்டோர் திடீர் முற்றுகையிட்டனர்.

ஆழ்வார்குறிச்சி அருகே உள்ள செட்டிகுளத்தைச் சேர்ந்த சுப்பையா மகன் மிராசு கிருஷ்ணன் (வயது37). இவர் ஆழ்வார்



குறிச்சிப் பேரூராட்சியில் தெரு விளக்குகள் சரிபார்க்கும் பணியில் தற்காலிக ஊழியராக பணியாற்றி வந்தார். இந்நிலையில் ஏப். 21ஆம் தேதி ஆழ்வார்குறிச்சி மனோன்மணியம் பல்கலைக் கழக வளாகம் அருகேயுள்ள மின்மாற்றியில் ஏற்பட்ட பழுதை சரிசெய்யுமாறு மின்வாரிய ஊழியர் ஒருவர் மிராசு கிருஷ்ணனிடம் கூறியுள்ளார். இதையடுத்து மின்மாற்றியில் ஏற்பட்டப் பழுதை சரி செய்ய முயன்ற மிராசு கிருஷ்ணன் மீது மின்சாரம் பாய்ந்ததாகக் கூறப்படுகிறது. இதையடுத்து மின்மாற்றியில் இருந்து கீழே விழுந்து காயமடைந்த மிராசு கிருஷ்ணன் திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். அங்கு சிகிச்சை பலனிக்காமல் நேற்று அவர் உயிரிழந்தார்.

இதையடுத்து மிராசு கிருஷ்ணன் குடும்பத்திற்கு உரிய நிவாரணம் வழங்கக் கோரியும், மின்வாரிய ஊழியர் மீது துறை ரீதியாக உரிய நடவடிக்கை எடுக்கக் கோரியும் மிராசு கிருஷ்ணனின் உறவினர்கள் மற்றும் திமுக, பாஜக உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் ஆழ்வார்குறிச்சி மின்வாரிய அலுவலகத்தை திடீர் முற்றுகையிட்டுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது அவர்களிடம் ஆழ்வார்குறிச்சி காவல் ஆய்வாளர் குணசேகரன், உதவி ஆய்வாளர்கள் ராஜதுரை, செல்வன், மின்வாரிய உதவி செயற்பொறியாளர் ராஜலட்சுமி, உதவிப் பொறியாளர் சங்கர செல்வி உள்ளிட்டோர் பேச்சு நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியதையடுத்து அனைவரும் கலைந்து சென்றனர். உயிரிழந்த மிராசு கிருஷ்ணனுக்கு அன்பரசி என்ற மனைவி, பூமிகா (9), சுப கரணி (8) என்ற மகள்களும் சக்திவேல் என்ற மகனும் உள்ளனர்.

### விழுப்புரம் மாவட்டத்தில்

# 4,529 மாணவர்கள் நீட் தேர்வு எழுதுகின்றனர்

## கலெக்டர் தகவல்

விழுப்புரம், ஏப்.29

வருகிற 3–ஆம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற உள்ள நீட் தேர்வை விழுப்புரம் மாவட்டத்தில் 4,529 மாணவர்கள் எழுதுகின்றனர். இதற்கான முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் மாவட்ட கலெக்டர் ஷேக் அப்துல் ரஹ்மான் தலைமையில் நடைபெற்றது.

தேர்வு மையங்கள்: மாவட்டத்தில் மொத்தம் 9 மையங்களில் தேர்வு நடைபெறுகிறது (தூய இருதய மேனிலைப் பள்ளி, எம்.ஜி.ஆர். அரசு மகளிர்கல்லூரி, காமராஜ் நகராட்சி பள்ளி, அரசு மாதிரி மகளிர் பள்ளி, அரசு சட்டக்கல்லூரி உட்பட). பெற்றோர்களுக்கான வசதி: தேர்வு எழுத வரும் மாணவர்களின் பெற்றோர்கள் தங்குவதற்கும், வாகனங்களை நிறுத்துவதற்கும் அந்தந்த மையங்களுக்கு அருகிலுள்ள பள்ளிகள் மற்றும் திருமண மண்டபங்களில் சிறப்பு வசதிகள்



செய்யப்பட்டுள்ளன. சுழற்சி முறையில் பேருந்து வசதி: தேர்வு மையங்களுக்குச் செல்ல ஏதுவாக விழுப்புரம் புதிய பேருந்து நிலையம் மற்றும் மாதா கோவில் பேருந்து நிறுத்தத்தில் இருந்து சுழற்சி முறையில் பேருந்துகள் இயக்கப்பட உள்ளன. தேர்வு மையங்களில் தடையற்ற மின்சாரம், குடிநீர் வசதி, கழிவறை வசதி மற்றும் சுகாதாரத்தைப் பராமரிக்க நகராட்சி பணியாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மாணவர்கள் தேர்வு மையங்களுக்குச் செல்ல வழிகாட்டும் தகவல் பலகைகளை வைக்கவும் மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார். இதில் மாவட்ட வருவாய் அலுவலர் ஹரிதாஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



கேரள மாநிலம் திருச்சூர் பூரம் திருவிழாவை முன்னிட்டு திருவம்பாடி மற்றும் பாரமேக்காவு பகவதி அம்மன் கோவில் யானைகளான சந்திரசேகரனும், எர்ணாகுளம் சிவகுமார் யானையும், துதிக்கை உயர்த்தி வடக்கு நாதரை வணங்கி உபசரித்து செல்லும் நிறைவு நிகழ்ச்சி நடந்தது.

### புனே அருகே

# வந்தே பாரத் ரெயில் தடம் புரண்டது

## பயணிகள் தவிப்பு

புனே, ஏப். 29

நாட்டின் அதிவேக மற்றும் மிகவும் பாதுகாப்பான ரெயிலாகக் கருதப்படும் வந்தே பாரத் ரெயில், தனது பயண வரலாற்றில் முதன்முறையாக விபத்துக்குள்ளான சம்பவம் நாடு முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பயங்கர சத்தம்.. பதறிய பயணிகள்! மும்பையிலிருந்து சோலாப்பூர் நோக்கிச் சென்ற வந்தே பாரத் ரெயில் (வண்டி எண்: 22225), நேற்று இரவு 7.30 மணியளவில் புனே ரெயில் நிலைய நடைமேடைக்குள் நுழைந்தது. அப்போது, அங்குள்ள 'டைமண்ட் கிராசிங்' எனப்படும் தண்டவாளங்கள் ஒன்றையொன்று சந்திக்கும் பகுதியில் சென்றபோது, ரெயிலின் 4வது பெட்டியின் ஒரு சக்கரம் பயங்கர சத்தத்துடன் தண்டவாளத்தை விட்டு கீழே இறங்கியது.

இதனால் ரெயிலுக்குள் இருந்த பயணிகள் நிலநடுக்கம் ஏற்பட்டது போல் உணர்ந்து அலறினர். நடந்தே சென்ற பயணிகள் விபத்து நடந்தவுடன் ரெயில் நிறுத்தப்ப ட்டது. ரெயிலின் பாதுகாப்பு அமைப்பான 'கவசம்' செயல்பாட்டில் இருந்தபோதிலும் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது. காயங்கள் ஏதுமின்றி உயிர் தப்பிய பயணிகள், பெட்டிகளில் இருந்து இறங்கித் தங்கள் உடைமைகளைச் சுமந்தபடி தண்டவாளத்திலேயே நடந்து நடைமேடைக்குச் சென்றனர்.

இந்த விபத்து குறித்து மத்திய ரெயில்வே மக்கள் தொடர்பு அதிகாரி கூறுகையில், "புனே ரெயில் நிலைய யார்டு மறுசீரமைப்புப் பணிகள் திட்டமிடப்பட்டுள்ளன. விபத்து நடந்த டைமண்ட் கிராசிங் பகுதியை மாற்றும் பணி முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும். பயணிகள் மாற்று ரெயில் மூலம் பாதுகாப்பாக அனுப்பி வைக்கப்பட்டனர்," எனத் தெரிவித்தார்.

போக்குவரத்து பாதிப்பு இந்த விபத்து காரணமாக புனே வழியாகச் செல்லும் முக்கிய எக்ஸ்பிரஸ் ரெயில்களின் இயக்கம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

2019–ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட வந்தே பாரத் ரெயில், 2026– ஆம் ஆண்டான இன்று வரை ஒருமுறை கூட தடம் புரண்டதில்லை என்ற சாதனையை வைத்திருந்தது.

தற்போது நிகழ்ந்த இந்த முதல் விபத்து ரெயில்வே வட்டாரத்தில் பெரும் விவாதத்தைக் கிளப்பியுள்ளது.

### மேற்கு வங்கத்தில்

# திரிணாமுல் காங்கிரஸ்– பா.ஜ.க.வினர் இடையே மோதல்

## துப்பாக்கிச் சூட்டில் காவலர் காயம்

கொல்கத்தா, ஏப்.29



மேற்குவங்க மாநிலத்தில் ஆளும் திரிணாமுல் காங்கிரஸ் மற்றும் பா.ஜ.க.வினரிடையே மோதல் தொடர்ந்து வரும் நிலையில் வடக்கு 24 பர்கனாஸ் மாவட்டத்தில் பா.ஜ.க. வேட்பாளர் வீட்டுக்கு வெளியே நடந்த துப்பாக்கிச்சூட்டில் மத்திய தொழிலக காவல் படை காவலர் காயமடைந்தார். மேற்கு வங்க மாநிலத்தில் நாளை இரண்டாம் கட்ட மற்றும் இறுதிக் கட்ட சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், நேற்று முன்தினம் நள்ளிரவு இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. மாநிலத்தில் கடந்த 23–ஆம் தேதி நடந்த முதல் கட்ட சட்டப்பேரவைத் தேர்தல் பெரும்பாலும் அமைதியாக நடந்துமுடிந்தது. ஆனால், இரண்டாம் கட்டத் தேர்தலுக்கான பிரசாரம் தொடங்கியது முதல் ஆளும் கட்சி மற்றும் பாஜகவினரிடையே மோதல் போக்கு தொடர்ந்து வருகிறது.

அதுபோல, நேற்று முன்தினம் இரவும் மோதல் சம்பவம் நிகழ்ந்துள்ளது. இது குறித்து போலீசார் தரப்பில் கூறியதாவது:

வடக்கு 24 பர்கனாஸ் மாவட்டம் ஜகா டல் பகுதியில் நேற்று முன்தினம் மாலை திரிணாமுல் காங்கிரஸின் கொடி மற்றும் பதாகைகளை கட்டிக் கொண்டிருந்த அக் கட்சித் தொண்டரை, அங்கு வந்த ஒரு கும்பல் கடுமையாகத் தாக்கியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக திரிணாமுல் காங்கிரஸ் கட்சியினர் உள்ளூர் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளனர். அப்போது அங்கு வந்த பா.ஜ.க.வினருக்கும் திரிணாமுல் காங்கிரஸாருக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. பின்னர் இரு தரப்பினரும் கற்களை வீசி தாக்கிக் கொண்டனர். உடனடியாக போலீசார் குவிக்கப்பட்டு நிலைமை சுட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. பின்னர், அங்கிருந்து சென்ற இரு கட்சியினரும். இரவில் பா.ஜ.க. வேட்பாளர் பவன் சிங் வீட்டின் அருகில் மீண்டும் மோதலில் ஈடுபட்டுள்ளனர். நாட்டு வெடிகுண்டுகளை வீசியும், துப்பாக்கிச்சூடு நடத்தியும் தாக்கிக்கொண்டனர். அதில், அங்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த யோகேஷ் சர்மா என்ற மத்திய தொழிலக காவல்படை வீரர் குண்டு காயமடைந்தார். அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

துப்பாக்குச்சூடு நடத்தியது யார் என்பது குறித்து தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. இந்த மோதல் சம்பவம் தொடர்பாக தேர்தல் ஆணையம் தரப்பில் அறிக்கை கேட்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தனா.

ஹூக்ளி மாவட்டத்தில் இருதரப்புக்கும் நேற்று நடந்த மோதலில் திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் அரம்பாக் தொகுதி எம்.பி. மித்தாலி பாக் வாகனத்தை பா.ஜ.க.வினர் சேதப்படுத்தினர். இந்த தாக்குதலில் காயமடைந்த மித்தாலி பாக் அரம்பாக் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவரை, கட்சியின் தலைவரும் மாநில முதல்வருமான மம்தா பானர்ஜி மருத்துவமனையில் சந்தித்து நலம் விசாரித்தார். இந்த தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்த மம்தா, மேற்கு வங்க மக்கள் பா.ஜ.க.வுக்கு தேர்தலில் உரிய பதிலடி கொடுப்பர் என்றார். தாக்குதல் குறித்து பாதிக்கப்பட்ட எம்.பி. மித்தாலிபாக்கூறுகையில், 'எனது வாகனம் கோகாட்டில் பா.ஜ.க. அலுவலகம் அருகே வந்தபோது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில், கார் கண்ணாடி உடைந்து என் மீது விழுந்ததில் காயம் ஏற்பட்டது என்றார்.

ஆனால், திரிணமூல் காங்கிரஸின் இந்த குற்றச்சாட்டை பா.ஜ.க. மறுத்தது. இந்தச் சம்பவம் தொடர்பாகவும் அறிக்கை கேட்கப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

### ஆம் ஆத்மியில் இருந்து

# 7 பேர் இணைந்ததால் மாநிலங்களவையில் பாஜக எம்.பி.க்களின் பலம் 113 ஆக உயர்வு

புதுடெல்லி,ஏப். 29



ஆம் ஆத்மி கட்சியிலிருந்து 7 மாநிலங்களவை எம்.பி.க்கள் பாஜக., வில் இணைந்ததால், அங்கு அதன் பலம் 113-ஆகவும், தே.ஜ கூட்டணியின் பலம் 148-ஆகவும் அதிகரித்துள்ளது.

ஆம் ஆத்மி கட்சியில் இருந்து ராகவ் சத்தா உட்பட 7 எம்.பி.க்கள் விலகி, பாஜக., வில் இணைந்தனர். மாநிலங்களவையில் ஆம் ஆத்மி கட்சி எம்.பி.க்கள் 3-ல் 2 பங்கு பேர் பாஜக.வில் இணைந்ததாக எம்.பி.ராகவ் சத்தா அறிவித்தார். இதை மாநிலங்களவை தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் ஏற்றுக்கொண்டதாக நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜூ எக்ஸ் தளத்தில் தெரிவித்துள்ளார்.

மாநிலங் களவை இணையதளத்திலும் புதிதாக இணைந்தவர்கள் பாஜக எம்.பி.க்களாக அறிவிக்கப்பட்டுள்ளது. பாஜக., வில் 7 உறுப்பினர்கள் இணைந்ததால், மாநிலங்களவையில் பாஜக எம்.பி.க்களின் பலம் 113 ஆகவும் தே.ஜ கூட்டணி எம்.பி.க்களின் பலம் 148-ஆகவும் அதிகரித்துள்ளது. மாநிலங்களவையில் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 245. அரசியல் சாசன சட்ட திருத்த மசோதாக்களை நிறைவேற்ற 3-ல் 2 பங்கு எம்.பி.க்களின் ஆதரவு தேவை. அந்த பெரும்பான்மையை தே.ஜ கூட்டணி நெருங்குகிறது.

மாநிலங் களவையில் ஆம் ஆத்மி கட்சிக்கு சஞ்சய் சிங், பல்பிர் சிங், என்.டி.குப்தா ஆகிய 3 உறுப்பினர்கள் மட்டுமே உள்ளனர். இது குறித்து சஞ்சய் சிங் கூறியதாவது: ஆம் ஆத்மி கட்சி எம்.பி.க்களின் இணைவு சட்டப்பூர்வமானது அல்ல. மாற்று கட்சியில் இணைய 3-ல் 2 பங்கு ஆதரவு தேவை.

அரசியல் சாசன நிபுணர்கள், கபில் சிபல் போன்றோரிடம் ஆலோசித்த பின்பு மாநிலங்களவை தலைவர் சி.பி.ராதா கிருஷ்ணனிடம், கட்சி மாறிய எம்.பி.க்களை அரசியல் சாசனத்தின் 10-வது பிரிவின் படி தகுதி நீக்கம் செய்ய மனு அளித்துள்ளேன். இவ்வாறு அவர் கூறினார்.

இந்தாண்டு இறுதிக்குள் மாநிலங்களவையில் மேலும் 30 உறுப்பினர்களின் இடங்கள் காலியாகும். அப்போது தங்களுக்கு மேலும் 5 எம்.பி.க்கள் கிடைப்பர் என பாஜக நம்பிக்கையுடன் உள்ளது.

# விண்வெளியில் இருந்து கிராமங்களை 'மேப்பிங்' செய்த இஸ்ரோ

புதுடெல்லி,ஏப். 29



விண்வெளியில் இருந்து இந்தியாவின் ஒவ்வொரு கிராமத்தையும் மிகத் துல்லியமாக வரைபடமாக்கும் முக்கிய திட்டத்தை இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.

இது தொடர்பான அறிவிப்பை தேசிய ஊராட்சிகள் தினமான கடந்த வெள்ளிக் கிழமை இஸ்ரோ வெளியிட்டது. நாடு முழுவதற்குமான உயர்-தெளிவுத்திறன் கொண்ட நிலப் பயன்பாடு மற்றும் நிலப்பரப்பை 1:10000 என்ற விகிதத்தில் வரைபடம் செய்து முடித்துள்ளதாக இஸ்ரோ அறிவித்தது. அதாவது வரைபடத்தில் உள்ள 1 செ.மீ என்பது தரையில் வெறும் 100 மீட்டரைக் குறிக்கும். இது ஒரு நெல் வயலுக்கும் குளத்துக்கும் இடையிலான வித்தியாசத்தை துல்லியமாக வேறுபடுத்திக் காட்டும் அளவுக்குத் தெளிவானது.

2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, இந்தியாவில் 6,49,481 கிராமங்கள் இருந்தன. இந்த செயற்கைக் கோள் தரவை அரசு நிறுவனங்களுக்கு இஸ்ரோ வழங்கியுள்ளது.

இது தொடர்பாக இஸ்ரோ எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், 'இந்தத் தரவுத் தொகுப்பு கிராமப் பஞ்சாயத்து மேம்பாட்டுத் திட்டங்களுக்குத் துணைபுரிவதுடன், பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தின் 'கிராம் மஞ்சித்ரா' (கிராம வரைபடம்) இணையதளத்தில் உள்ள தகவல் பிரிவுகளில் ஒன்றாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. இது கிராமப்புற அளவில் வலுவான, தரவு சார்ந்த நிர்வாகத்தை சாத்தியமாக்குகிறது'' என்று தெரிவித்துள்ளது.

கிராம் மஞ்சித்ரா இணையதளம், உள்ளாட்சி அமைப்புகள் தரவு சார்ந்த வளர்ச்சி முடிவுகளை எடுக்க உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. கிராமங்களை வரைபடமாக்குவது, கிராமப் பஞ்சாயத்து மேம்பாட்டுத் திட்டங்களைச் சிறப்பாகத் தயாரிப்பதற்கு உதவும். இது தரவு அடிப்படையிலான முடிவெடுக்கும் முறையை சாத்தியமாக்குவதுடன், நில வளங்களையும் அவற்றின் பயன்பாட்டு முறைகளையும் கண்டறிய உதவும். ஒட்டுமொத்தமாக, இந்தியாவின் கிராமப் புறங்களில் அரசுத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் வெளிப்படைத் தன்மையையும் பொறுப்புடைமையையும் இது மேம்படுத்தும். மேலும் அடிமட்ட அளவில் ஜனநாயகத்தை வலுப்படுத்தும்.

### மத்தியப்பிரதேசத்தில் அதிர்ச்சி:

# தத்தெடுத்த 2 வயது பெண் குழந்தையை நடுரோட்டில் தவிக்கவிட்ட தம்பதி கைது

## சொத்துகளை இழந்ததால் விபரீத முடிவு

போபால், ஏப்.29



மத்தியப்பிரதேச மாநிலத்தில் 2 வயது பெண் குழந்தையை நடுரோட்டில் பெற்றோர் தவிக்கவிட்டு சென்றனர். பின்னர் போலீசார் அந்த குழந்தையை மீட்டனர்.

சொத்துகளை இழந்ததால் இந்தவிபரீதமுடிவை எடுத்தது தெரியவந்தது.

மத்தியப்பிரதேச மாநிலம் சோய்குர்த் அருகே தேசிய நெடுஞ்சாலையில் ஒரு 2 வயது மதிக்கத்தக்க பெண் குழந்தை தனியாக அழுதுக் கொண்டே நிற்பதாக போலீசாருக்கு அங்குள்ளவர்கள் தகவல் தெரிவித்தனர்.

உடனே மன்பூர் காவல் நிலைய அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு சென்று அந்த குழந்தையை மருத்துவ மையத்திற்கு அழைத்துச் சென்று பரிசோதனை செய்தனர்.

இதில் குழந்தை நலமுடன் இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்த நிலையில் காப்பகத்தில் குழந்தை ஒப்படைக்கப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் தாமாக வந்து வழக்குப்பதிவு செய்து விசாரணையைத் தொடங்கினர்.

குழந்தை கண்டெடுக்கப்பட்ட இடத்தில் உள்ள சி.சி.டி.வி. காட்சிகள், அருகிலிருந்தவர்களிடம் விசாரணை நடத்தினர்.

அதன் அடிப்படையில் அடையாளம் தெரியாத ஒரு கார் அங்கு இருந்ததை கண்டனர்.

எனவே அந்த கார் எண்ணை வைத்து விசாரணை செய்ததில் போபாலைச் சேர்ந்த ஆகாஷ் மூடா என்பவரின் பெயரில் அந்த கார் பதிவு செய்யப்பட்டிருப்பது தெரிய வந்தது.

இதனைத் தொடர்ந்து ஆகாஷ் மீது போலீசாருக்கு சந்தேகம் எழ உடனடியாக ஒரு போலீஸ் குழு போபாலில் உள்ள ஆகாஷின் வீட்டுக்குச் சென்று விசாரணை நடத்தினர். ஆகாஷின் மனைவியிடமும் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

அப்போது பல திடுக்கிடும் தகவல்கள் வெளியானது.

அதன்படி, ஆகாஷ் மூடா மற்றும் அவரது மனைவியும் ஒரு பெண் குழந்தையை இந்தூரில் ஒரு தனியார் காப்பகத்தில் இருந்து ஒரு லட்சம் ரூபாய் கொடுத்து தத்தெடுத்தனர். மேலும் அந்த குழந்தையை பராமரிக்க

மாதம் ரூ.20 ஆயிரம் சம்பளம் கொடுத்து பெண் ஒருவரை பணிக்கு அமர்த்தியுள்ளனர். ஆனால் ஒழுங்காக சம்பளம் கொடுக்காததால் அந்த பெண் வேலையை விட்டு நின்றுவிட்டார்.

எனவே குழந்தையை வாங்கிய தம்பதியினர் இரண்டு ஆண்டுகள் அதனை வளர்த்தனர். இந்த நிலையில் அந்தக் குழந்தை தங்கள் குடும்பத்திற்கும் தொழிலுக்கும் துரதிர்ஷ்டத்தைக் கொண்டு வந்துவிட்டதாகக் கருதியதால் காரில் குழந்தையை அழைத்துக்கொண்டு வந்து நடுரோட்டில் விட்டு விட்டு சென்றுவிட்டது தெரிய வந்தது.

ஆகாஷ் மூடா மற்றும் அவரது மனைவி மற்றும் குழந்தையை விற்ற நான்கு பெண்கள் மற்றும்

இரண்டு ஆண்கள் உட்பட ஆறு பேரை போலீசார் கைது செய்தனர்.

# ஆந்திரா: மகனின் புதிய பைக்கை தீயிட்டு கொளுத்திய தந்தை

விசாகப்பட்டினம்,ஏப். 29

ஆந்திர மாநிலம், விசாகப்பட்டினத்தை சேர்ந்த ஆட்டோ ஓட்டுநர் சந்திரசேகர். இவருக்கு 2 மகன்கள் உள்ளனர். இதில் மூத்த மகன் கல்லூரியில் சேர்ந்து படித்து வருகிறார்.

கடந்த ஆண்டு இவர் கல்லூரியில் சேரும்போது, தனக்கு புதிய பைக் வேண்டும் என தனது தந்தையை நச்சரித்துள்ளார். மகன் ஆசைப்படுகிறானே என சந்திரசேகரும் ரூ.1 லட்சத்துக்கும் அதிக விலையில், மாதத் தவணையில் பைக் ஒன்றை வாங்கிக் கொடுத்துள்ளார். ஆனால் அதன் பிறகு மகனின் போக்கே மாறிவிட்டது.

அடிக்கடி நண்பர்களுடன் பைக்கில் வெகுதூரம் செல்வது, போக்குவரத்து விதிகளை அடிக்கடி மீறுவது, அதிக வேகமாக செல்வது என மகன் செயல்பட்டுள்ளார்.

போக்குவரத்து விதி மீறல் தொடர்பாக அபராத ரசீது அடிக்கடி தந்தையின் செல்போனுக்கு வந்துள்ளது. இதற்கிடையில் பைக்கில் மகன் வேகமாக சென்றதால் ஒரு விபத்தும் ஏற்பட்டுள்ளது. இதில் படுகாயமடைந்த மகனுக்கு ரூ.1 லட்சம் வரை சந்திரசேகர் மருத்துவ செலவு செய்துள்ளார். அந்த பைக்கை பழுது நீக்க ரூ.20 ஆயிரம் செலவிட்டுள்ளார். மகன் குணமடைந்த பிறகும் அவரது போக்கில் எந்த மாற்றமும் ஏற்படாததால் சந்திரசேகர் ஆத்திரமடைந்தார். இதில் நேற்று அவர் தனது மகன் பைக்கை ஒரு மைதானத்தில் வைத்து, அதன் மீது பெட்ரோலை ஊற்றி தீயிட்டு கொளுத்தினார்.

இது குறித்த தகவலின் பேரில் பெந்துர்த்தி போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஈரான் புதிய நிபந்தனைகளை ட்ரம்ப் ஏற்க வாய்ப்பில்லை

## பேச்சுவார்த்தை தொடர்வதில் சிக்கல்

வாஷிங்டன்,ஏப். 29



போர் நிறுத்தத்துக்கு ஈரான் விதித்துள்ள புதிய நிபந்தனைகளால் அதிபர் ட்ரம்ப் அதிருப்தியில் உள்ளதாகவும், அந்த நிபந்தனைகளை அவர் ஏற்க வாய்ப்பில்லை என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளது. இதனால் இரு தரப்புபேச்சுவார்த்தையை தொடர்வதில் இழுபறி நீடிக்கிறது.

அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையிலான போரை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் ஈரான் முன்வைத்த சமீபத்திய திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்க வாய்ப்பில்லை எனஅமெரிக்கஅதிபர்டொனால்டு ட்ரம்ப்கூறியதாக அதிகாரிகள்வட்டாரங்கள் தெரிவித்தன. ஈரானின் புதிய நிபந்தனைகளில், உலகளாவிய முக்கிய எண்ணெய் போக்குவரத்துப் பாதையான ஹார்முஸ் ஜலசந்தியை திறப்பதும், ஈரானின் அணுசக்தித் திட்டம் தொடர்பான பேச்சுவார்த்தைகளை ஒத்திவைப்பதும் அடங்கும்.

நேற்று அமெரிக்க தேசிய பாதுகாப்பு அதிகாரிகளுடன்நடந்த உயர்மட்டக் கூட்டத்தில் ஈரானின் நிபந்தனைகள் குறித்து ட்ரம்ப்தனதுசந்தேகங்களைப் பகிர்ந்து கொண்டார். இதனை தொடர்ந்து, ஈரானின் புதிய நிபந்தனைகளை ட்ரம்ப் ஏற்க வாய்ப்பில்லை என்று ஓர் அதிகாரி தெரிவித்துள்ளார்.

ஈரானின் அணுசக்தி செறிவூட்டல் நடவடிக்கைகள் மற்றும் அந்நாட்டின் அணு குண்டு தயாரிக்க தேவையான யுரேனியம் கையிருப்பு குறித்த சந்தேகங்களைதீர்க்காமல் ஹார்முஸ் ஜலசந்தியை மீண்டும் திறப்பது, அமெரிக்காவின் பேச்சுவார்த்தை நிலையை பலவீனப்படுத்திவிடும் என்று அந்நாடு அச்சம் தெரிவித்துள்ளது.

அதே நேரத்தில், ஹார்முஸ் ஜலசந்தியை முடக்கிய நிலையில் வைத்திருப்பது, உலகளாவிய எரிபொருள் விலைகளின் உயர்வை நீடிக்கச் செய்து, அமெரிக்காவில் எரிபொருள் செலவுகள் உயர்வதற்கு வழிவகுக்கும் என்றும் அந்த ஆலோசனையில் ஒப்புக்கொள்ளப்பட்டது. இந்த சந்திப்பைத் தொடர்ந்து, அமெரிக்க நிர்வாகம் எவ்வாறு அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பது தெளிவாகத் தெரியவில்லை. மேலும், ஈரானின் தலைமை இப்போது யார் கையில் உள்ளது என்பது குறித்தும் அமெரிக்கா கேள்வி எழுப்பியுள்ளது. இரு நாடுகளுக்கு இடையிலான ஒப்பந்தம் குறித்து இறுதி முடிவெடுக்கும் அதிகாரம் இப்போது யாரிடம் உள்ளது என்பதில் அமெரிக்க அதிகாரிகள் நிச்சயமற்ற நிலையில் உள்ளனர், இது ராஜதந்திர செயல்பாட்டை சிக்கலாக்குகிறது என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன.

# பாகிஸ்தான் பலுசிஸ்தானில் 10 நாட்களில் 27 தாக்குதல்கள்

## பாகிஸ்தான் 42 ராணுவ வீரர்கள் உயிரிழப்பு

குவெட்டா,ஏப். 29



பாகிஸ்தானின் பலுசிஸ்தானில் 10 நாட்களில் 27 தாக்குதல்கள் நடத்தியதாகவும், இதில் பாகிஸ்தான் ராணுவ வீரர்கள் 42 பேர் கொல்லப்பட்டதாகவும் பலுச் விடுதலைப்படை தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானில் இருந்து பலுசிஸ்தானை பிரிக்க பலுச் விடுதலைப்படை என்ற அமைப்பு கடந்த 2000-ம் ஆண்டு முதல் போராடி வருகிறது. இவர்களை தீவிரவாதிகளாக அறிவித்து பாகிஸ்தான் ராணுவம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இ ந்நிலையில் பலுச் விடுதலைப் படை செய்தி தொடர்பாளர்ஜீயந்த்பலுச் நேற்று வெளியிட்ட அறிக்கை: பலுசிஸ்தான் மாகாணத்தின் பல இடங்களில் கடந்த 15-ம் தேதி முதல் 25-ம் தேதி வரை 27 தாக்குதல்களை பலுச் விடுதலைப் படை மேற்கொண்டது. சோண்டா, அல்மார்க் பகுதிக்குள் நுழைந்த பாக். ராணுவ வீரர்களை ரிமோட் கன்ட்ரோல் வெடிகுண்டுகள் மூலம் தாக்குதல் நடத்தினோம்.அதன்பின் துப்பாக்கிச் சூடு தாக்குதல் நடத்தினோம். பாக். படைகள் மீது ட்ரோன் தாக்குதலும் நடத்தப்பட்டது. இதில் பாக். ராணுவ வீரர்கள் 42 பேர் உயிரிழந்தனர். பலர் காயம் அடைந்தனர். ஷாரக், ஹர்னாய் பகுதியில் நடைபெற்ற மோதலில் ஒரு பாக்.வீரரை உயிருடன் பிடித்தோம். ராணுவ நிலைகளை கைப்பற்றி ஏராளமான ஆயுதங்களை கைப்பற்றினோம்.

இந்த தாக்குதலில் உள்ளூர் மக்கள் 10 பேரும் உயிரிழந்தனர். பலுச் விடுதலை படையைச் சேர்ந்த 3 வீரர்கள் இந்த சண்டையில் கொல்லப்பட்டனர். இவ்வாறு பலுச் விடுதலைப் படை கூறியுள்ளது. சில வாரங்களுக்கு முன்பாகிஸ்தான் கடலோர காவல்படையைச் சேர்ந்த வீரர்கள் 3 பேரை, அரபிக்கடல் பகுதியில் பலுச் படையினர் சுட்டுக் கொன்றனர். அதன்பின் இந்த தாக்குதல் நடைபெற்றுள்ளது.

# ''மேற்காசியாவில் அமைதியை நிலைநாட்ட ரஷ்யா தயார்''

## ஈரானிடம் புதின் உறுதி

மாஸ்கோ,ஏப். 29

மேற்காசியாவில் அமைதியை உறுதி செய்ய ரஷ்யா தயார் என ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அரக்சி உடனான சந்திப்பில் ரஷ்ய அதிபர் புதின் தெரிவித்துள்ளார்.

கடந்த பிப்.28-ம் தேதி ஈரான் மீது அமெரிக்காவும், இஸ்ரேலும் கூட்டாக இணைந்து தாக்குதல் மேற்கொண்டன. அதற்கு பதிலடியாக இஸ்ரேல் மற்றும் வளைகுடாவில் உள்ள அமெரிக்க நேச நாடுகள் மீது ஈரான் தாக்குதல் நடத்தியது. இதோடு ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் முடக்கியது. இதனால் சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் தட்டுப்பாடு ஏற்பட்டது.

இந்நிலையில், ஏப்ரல் 8 அன்று அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே இடைக்கால போர் நிறுத்தம் ஏற்பட்டது. தற்போது அதை காலவரையின்றி அமெரிக்க அதிபர் ட்ரம்ப் நீட்டித்துள்ளார். இரண்டு தரப்பும் இது தொடர்பாக இறுதி உடன்பாட்டை எட்டுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. இதில் பாகிஸ்தான் மத்தியஸ்தம் செய்து வருகிறது.

பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்க அமெரிக்காவுக்கு மூன்று நிபந்தனைகளை ஈரான் முன்வைத்துள்ளது.

இந்தச் சூழலில் ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அரக்சி, ரஷ்யா பயணித்துள்ளார். அங்கு அந்நாட்டு அதிபர் புதினை அவர் சந்தித்தார். இந்தப் போரில் தங்களுக்கு ஆதரவாக ரஷ்யா இருப்பதற்கு புதினிடம் அரக்சி நன்றி தெரிவித்தார். ''மேற்காசியாவில் அமைதியை விரைந்து உறுதி செய்ய எங்கள் அதிகாரத்துக்கு உட்பட்ட அனைத்தையும் செய்ய ரஷ்யா தயாராக உள்ளது'' என்று அப்போது புதின் தெரிவித்துள்ளார்.

இதை ரஷ்ய அரசு செய்தி நிறுவனம் உறுதி செய்துள்ளார்.

# பிரிட்டனை ஸ்மோக் ஃப்ரீ நாடாக மாற்ற உதவும் சட்டம் விரைவில் அமல்

## ஒருசேர கிளம்பிய எதிர்ப்பும், ஆதரவும்...

லண்டன்,ஏப். 29




பிரிட்டனில் 2008-ஆம் ஆண்டுக்கு பிறகு பிறந்தவர்கள் சிகரெட்டுகள் வாங்குவதை தடை செய்யும் சட்டம் அந்நாட்டின் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட நிலையில், வரும் வாரத்தில் இந்த சட்டம் பிரிட்டனில் அமலுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த சட்டத்தின்படி, 2009-ஆம் ஆண்டு ஜனவரி 1-ஆம் தேதி அன்று மற்றும் அதன் பிறகு பிறந்தவர்கள் சிகரெட் மற்றும் எலெக்ட்ரானிக் சிகரெட்டுகள் வாங்க தடை விதிக்கப்படும். மேலும் புகையிலை பொருட்கள் தொடர்பான விளம்பரங்களுக்கும் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்படும். இந்த சட்டத்தை ஒரு தரப்பினர் வரவேற்கும் நிலையில், மற்றொருதரப்பினர்இந்தசட்டம் தனிநபர் உரிமையை பாதிப்பதாக குற்றம்சாட்டி உள்ளனர்.

இதனிடையே இந்த சட்டம் காலபோக்கில் இளைஞர்களிடையே புகைப்பழக்கத்தை குறைக்க உதவும் என சுகாதாரத்துறைநிபுணர்கள்நம்பிக்கை தெரிவித்து உள்ளனர். மேலும் இந்த சட்டம் ஜனவரி 1, 2009 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ பிறந்த எவருக்கும் சிகரெட் விற்பனையை நிரந்தரமாகத் தடை செய்வதன் மூலம் ஒரு 'புகையற்ற தலைமுறையை' உருவாக்கும் நோக்கத்தைக் கொண்டுள்ளது.

ஐக்கிய இராச்சியத்தின் நான்கு நாடுகளுக்கும் பொருந்தக்கூடிய இந்த சட்டம், வரும் 2027-ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் புகைபிடிப்பதற்கான சட்டப்பூர்வ வயதை ஓராண்டு உயர்த்தும், இதன் மூலம் வருங்கால தலைமுறையினருக்குப் புகையிலை விற்பனை செய்யப்படுவதை இது காலப்போக்கில் முழுமையாகத் தடை செய்யும் என்று அந்நாட்டு அதிகாரிகள் கூறி இருக்கிறர்கள்.

அதே போல விரைவில் அமலுக்கு வர உள்ள இந்தச் சட்டம் குறிப்பிட்ட வயதினருக்கு புகையிலைப் பொருட்களை விற்பதை சட்டவிரோதமாக்குகிறது,அவர்கள்புகைப்பதை அல்ல என்றும் விளக்கம் அளிக்கப்பட்டு உள்ளது. முன்னதாக கடந்த 2019-ஆம் ஆண்டில் இங்கிலாந்தை வரும் 2030-ஆம் ஆண்டிற்குள் 'புகைப்பழக்கமற்ற' (ண் ட்ணிடுஞு-ஞூணுஞு ஞு) நாடாக மாற்றும் தனது லட்சியத்தை ஐக்கிய ராச்சிய அரசு அறிவித்தது. 'புகைப்பழக்கமற்ற நிலை' என்பது, ஒட்டுமொத்தமக்கள்தொகையிலும் புகைபிடிக்கும் பழக்கம் கொண்டவர்களின் விகிதத்தை 5 சதவீதத்திற்கும் குறைவாகக் குறைப்பதே என்று வரையறுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# போர் நிறுத்தம், ஹார்முஸ் ஜலசந்தி, அணுசக்தி விவகாரம்

## அமெரிக்காவுக்கு ஈரான் 3 நிபந்தனைகள்

டெஹ்ரான்,ஏப். 29



அமெரிக்காவுடன் அமைதிப் பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்குவதற்கு ஈரான் மூன்று கட்டங்கள் கொண்ட புதிய திட்டத்தை முன்வைத்துள்ளது.

பாகிஸ் தானில் இரு நாடுகளுக்கு இடையே 2-ம் கட்டப் பேச்சுவார்த்தை நடைபெறாததை தொடர்ந்து, ஈரான் இந்த அதிரடிநிபந்தனைகளைவிதித்துள்ளது. போர் நிறுத்தம், ஹார்முஸ் ஜலசந்தியின் மேலாண்மை, அணுசக்தி விவகாரம் ஆகியவற்றை மையமாக வைத்து இந்தத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

முதல் கட்டம்: ஈரான் மற்றும் லெபனான் மீது போர் தொடுக்கப்படாது என்பதற்கும், போர் முழுமையாக நிறுத்தப்படுவதற்கும் அமெரிக்கா முறையான உத்தரவாதம் அளிக்க வேண்டும்.

இரண்டாம் கட்டம்: முதற்கட்ட நிபந்தனைகள் ஏற்கப்பட்டால் மட்டுமே, சர்வதேசகடல்வழிப் போக்குவரத்தில் முக்கியப் பங்கு வகிக்கும் ஹார்முஸ் ஜலசந்தி நிர்வாகம் மற்றும் மேலாண்மை குறித்து ஆலோசிக்கப்படும்.

மூன்றாம் கட்டம்: மேற்கண்ட இரு நிலைகளும் வெற்றிகரமாகக் கடந்த பின்னரே, அணுசக்தி விவகாரம் குறித்து ஈரான் விவாதிக்கும். ஈரானின் யுரேனியம் செறிவூட்டலை நிறுத்த வேண்டும் என்ற அமெரிக்காவின் நீண்டகால கோரிக்கை இதில் அடங்கும். அமெரிக்காவின் எதிர்வினை ஈரானின் இந்த முன்மொழிவு குறித்து வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ஒலிவியா வேல்ஸ் கூறுகையில், 'இவை மிகவும் நுணுக்கமான ராஜதந்திர விவகாரங்கள்.

பத்திரிகைகள் வாயிலாக அமெரிக்கா பேச்சுவார்த்தை நடத்தாது. அமெரிக்க மக்களின் நலனே எங்களுக்கு முக்கியம். ஈரான் அணு ஆயுதம் பெறுவதை ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்' என்று திட்டவட்டமாகத் தெரிவித்தார். 4 மடங்கு தாக்குதல் ஈரான்துணை அதிபர் இஸ்மாயில் எக்ஸ் தளத்தில் வெளியிட்ட செய்தியில், ''எங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டால், நாங்கள் பதிலடி கொடுப்போம்.

எங்கள் கணக்கு வித்தியாசமானது. எங்களின் ஒரு எண்ணெய் கிணறு பற்றி எரிந்தால், அமெரிக்காவுக்கு ஆதரவளிக்கும் வளைகுடா நாடுகளில் 4 எண்ணெய் கிணறுகள் பற்றி எரியும்'' என்று பதிவிட்டுள்ளார்.

# இந்தோனேசியாவில் ரயில்கள் மோதிக்கொண்ட விபத்து

## பலி எண்ணிக்கை 14 ஆக அதிகரிப்பு

ஜகார்த்தா,ஏப். 29



இந்தோனேசிய தலைநகர்ஜகார்த்தா அருகே ரயில்கள் மோதிக்கொண்ட விபத்தில் பலி எண்ணிக்கை 14 ஆக உயர்ந்துள்ளது. மேலும் இந்த விபத்தில் 84 பேர் காயமடைந்துள்ளனர்.

தலைநகர் ஜகார்த்தாவுக்கு வெளியே உள்ள பெகாசியில் திங்கட்கிழமை இரவு ஒரு பயணிகள் ரயிலும், ஒரு நீண்ட தூர ரயிலும் மோதிக் கொண்டன. இந்த விபத்தில் பலி எண்ணிக்கை 14 ஆக உயர்ந்துள்ளதாக இந்தோனேசிய அரசு ரயில்வே நிறுவனத்தின் தலைமை நிர்வாகி பாபி ரசிடின் கூறினார்.

இந்தோனேசிய அரசின் தேடல் மற்றும் மீட்பு அமைப்பின் தலைவர் முகமது ஷ ாஃபி, செவ்வாயன்று மீட்புப் பணிகள் நிறைவடைந்துவிட்டதாகவும், சிதைந்த பெட்டிகளில் சிக்கியிருந்த பயணிகளை மீட்பது ஒரு கடினமான பணியாக இருந்ததாகவும் கூறினார்.

பெண்கள் மட்டுமே பயணித்த ஒரு பெட்டி இந்த விபத்தில் பெரும் பாதிப்பைச் சந்தித்தது. அதனால் இந்த விபத்தில் உயிரிழந்தவர்கள் அனைவரும் பெண்கள் என்றும், அவர்களில் பெரும்பாலானோர் உலோகத்தால் நசுங்கி உயிரிழந்தனர் என்றும் ஷாஃபி கூறினார்.

பெகாசியில் உள்ள ஒரு மருத்துவமனையில் பாதிக்கப்பட்டவர்களை சந்தித்தப் பிறகு, கடுமையான போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க உதவும் வகையில் ரயில் தண்டவாளங்களுக்கு அருகில் மேம்பாலம் கட்ட ஒப்புதல் வழங்கியுள்ளதாக இந்தோனேசியா அதிபர் பிரபோவோ சுபியாந்தோ கூறினார்.

இந்தோனேசிய அரசின் தேடல் மற்றும் மீட்பு அமைப்பின் தலைவர் முகமது ஷ ாஃபி, செவ்வாயன்று மீட்புப் பணிகள் நிறைவடைந்துவிட்டதாகவும், சிதைந்த பெட்டிகளில் சிக்கியிருந்த பயணிகளை மீட்பது ஒரு கடினமான பணியாக இருந்ததாகவும் கூறினார்.

மேலும், இந்த மோதல் குறித்து அதிகாரிகள் விசாரிப்பார்கள் என்றும், இந்த ரயில் பாதையின் பெரும் பகுதிகள் முறையாகப் பராமரிக்கப்படவில்லை என்றும் அவர் கூறினார். இந்தோனேசியாவின் தேசிய போக்குவரத்துப் பாதுகாப்புக் குழு (KNKT) இந்த விபத்து குறித்த விசாரணையை தொடங்கியுள்ளது.

## காசாவில் ஹமாஸ்

# அமைப்பினரால் பயன்படுத்தப்பட்டு வந்த 14 கி.மீ நீளமுள்ள சுரங்கப்பாதை தகர்ப்பு

ஜெருசலேம்,ஏப். 29



வடக்கு காசா பகுதியில் 14 கிலோமீட்டர் நீளமுள்ள நிலத்தடி சுரங்கங்களை அழித்துவிட்டதாக இஸ்ரேல் பாதுகாப்புப் படை (ஐஈஊ) தெரிவித்துள்ளது. வடக்கு காசா பகுதியில் பொதுவாகவும், குறிப்பாக மஞ்சள் கோட்டிற்கு கிழக்கே உள்ள பெய்த் ஹனூன் பகுதியிலும், ஹமாஸின் நிலத்தடி உள்கட்டமைப்பை அழிக்கும் நோக்கில், வடக்கு படைப்பிரிவுப் படைகளும், யஹலாம் பிரிவும் கடந்த சில மாதங்களாக ஒரு இலக்கு வைக்கப்பட்ட நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக இஸ்ரேலிய பாதுகாப்புப் படை (ஐஈஊ) தெரிவித்துள்ளது.

இந்த நடவடிக்கையின் ஒரு பகுதியாக, படைப்பிரிவின் வீரர்கள், யஹலாம் பிரிவின் போராளிகளுடன் இணைந்து, இதுவரை சுமார் 14 கிலோமீட்டர் நீளமுள்ள நிலத்தடி சுரங்கங்களை அழித்துள்ளதாக அது குறிப்பிட்டது. அப்பகுதியைத் தூய்மைப்படுத்தும் பணியை படைப்பிரிவின் வீரர்கள் தொடர்வதால், அந்தச் சுரங்கங்களுக்குள் உறங்கும் அறைகளும் ஏராளமான ஆயுதங்களும் கண்டெடுக்கப்பட்டன.சமீபத்தில், போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி, படைகளுக்கு உடனடி அச்சுறுத்தலாக இருந்த சுமார் 70 பயங்கரவாதிகளை வடக்கு படைப்பிரிவு ஒழித்துள்ளது என இஸ்ரேலிய பாதுகாப்புப் படை (ஐஈஊ) விவரித்துள்ளது.

'பெக்கா பிராந்தியத்திலும் தெற்கு லெபனானின் பல பகுதிகளிலும் ஹிஸ்புல்லா பயங்கரவாத அமைப்பின் உள்கட்டமைப்புகளுக்கு எதிரான தாக்குதல்களை இஸ்ரேலிய இராணுவம் தொடங்கியுள்ளது,' என இஸ்ரேலிய பாதுகாப்புப் படை (ஐஈஊ) பதிவிட்டுள்ளது.

கடந்த வாரம், லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா இலக்குகளைத் தீவிரமாகத் தாக்குமாறு இஸ்ரேலியப் பாதுகாப்புப் படைக்கு (IDF) இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு உத்தரவிட்டிருந்தார்.

## சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.1,040 குறைந்து ரூ.1,12,800க்கு விற்பனை



சென்னை: சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.130 உயர்ந்து ஒரு கிராம் ரூ.14,100 க்கு விற்பனைண்யாகிறது. ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ 1,040 குறைந்து ஒரு சவரன் ரூ.1,12,800 க்கு விற்பனையாகிறது. சென்னையில் வெள்ண்ளி விலை ஒரு கிராம் ரூ.5 உயர்ந்து ரூ.265 க்கு விற்ண்பனை செய்யப்படுகிண்றது.

## பெட்ரோல் விலை ரூ.100.84, டீசல் விலை ரூ.92.39க்கு விற்பனை




சென்னை: பெட்ரோல் மற்றும் டீசல் விலை தினமும் மாற்றி அமைக்கப்படுகிறது. அதன் அடிப்படையில் இன்றைய பெட்ரோல் விலை சென்னையில் லிட்டருக்கு ரூ.100.84 ஆகவும், டீசல் விலை லிட்டருக்கு ரூ.92.39 ஆகவும் நிர்ண யம் செய்யப்பட்டுள்ளது. இயற்கை எரிவாயுவின் விலை லிட்டருக்கு ரூ.91.50ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. விலை இன்று காலை 6 மணி முதல் அமலுக்கு வந்தது.

## கோவைக் கீரையின் மருத்துவ குணங்கள்



கோவைக் கீரை (coccinia grandis), நாம் அனைவராலும் அறியப்பட்ட ஒரு சாதாரணமான கீரையாகும். ஆனால், அதற்குள் அடங்கியுள்ளது பல்வேறு அசாதாரணமான மருத்துவ நன்மைகள். கோவைக்கீரை இந்தியா முழுவதும் காணப்படும் கொடிவகையைச் சார்ந்த கீரையாகும். பொதுவாக கிராமங்களில் வேலியைச் சுற்றி நன்கு செழிப்பாக வளர்ந்து காணப்படும். இது வறண்ட மற்றும் ஈரப்பதமான சூழல்களைதாங்கி வளரும் இயல்புடையதால் அனைத்து காலங்களிலும் கிடைக்கப்பெறும். இதன் இலை, வேர் மற்றும் காய் என அனைத்துமே மருத்துவ தன்மையுடையதாக திகழ்கிறது. இதன் இலை கசப்பு மற்றும் இனிப்பு சுவை கலந்து இருக்கும்.இந்திய அரசியல்

கோவைக்கீரையில் காணப்படும் சத்துக்கள் மற்றும் மூலக்கூறுகள்

கோவைக் கீரையில் வைட்டமின் ஏ, பி1, பி2 மற்றும் சி காணப்படும். உடலுக்கு வலிமையைத் தரும் தாதுக்களான கால்சியம் மற்றும் பாஸ்பரஸ், இரும்புச்சத்து நிறைந்து உள்ளன. மேலும் மருத்துவ பண்புகளுக்கு காரணமான ஃப்ளேவனாய்டுகள், ஆல்கலாய்டுகள், டெரிபினாய்டுகள், சாப்போனின் உள்ளிட்ட மூலக்கூறுகளைக் கொண்டுள்ளன.

கோவைக்கீரையின் மருத்துவ குணங்கள்

சர்க்கரைநோய் கட்டுப்பாடு: கோவைக்கீரை மற்றும் அதன் காய்கள் ரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவினை கட்டுப்படுத்த உதவுகிறது. மேலும் பான்கிரியாஸின் செயல்பாட்டினை தூண்டி இன்சுலின் உற்பத்தியை அதிகரிக்க உதவுகிறது. வைரஸ் கிருமிகளை அழிக்க : வைரஸ் கிருமிகளின் தாக்கத்தை குறைத்து சளி, ஜலதோஷம் போன்ற பிரச்னைகளுக்கு இயற்கை தடுப்பூசி போன்று கோவைக்கீரை செயல்படுகிறது.

கோடை வெப்பத்தை சமாளிக்க: உடல் வெப்பத்தினை குறைத்து உடலுக்கு போதிய குளிர்ச்சியை கொடுப்பதில் கோவைக்கீரை சிறந்து விளங்குகிறது. மேலும், வெப்பம் அதிகரிப்பினால் ஏற்படும் சருமம் சார்ந்த பிரச்னைகளையும் குறைக்கின்றது.

செரிமானம் தொடர்பான பிரச்னைகள் தீர்வாக...

கோவைக்கீரையில் நார்ச்சத்து நிறைந்து உள்ளதால் செரிமானம் தொடர்பான அனைத்து பிரச்னைகளுக்கும் நல்ல ஒரு தீர்வாக திகழ்கிறது. மேலும், மலச்சிக்கலை தடுக்கிறது.

கால்சியம் மற்றும் பாஸ்பரஸ் மிகுதியாக உள்ளது. உடலுக்கு போதிய வலிமையை கொடுக்கின்றது.

ரத்த சோகையை தடுக்க உதவுகிறது.ஹார்மோன் சமநிலையை மேம்படுத்துகிறது. இதனால் மாதவிடாய் சார்ந்த பிரச்னைகள் தடுக்கப்படுகிறது. மேலும் பசியை தூண்ட உதவுகிறது.

வயிற்றுப்புண், கண் சார்ந்த பிரச்னை, சரும பிரச்னை, ரத்தத்தை சுத்தப்படுத்த என பல்வேறு நன்மைகளை அளிப்பதில் கோவைக்கீரை சிறந்து விளங்குகிறது. கோவை இலையை விளக்கெண்ணெயில் வதக்கி எடுத்து படை, சொரி, சிரங்கு இவைகளுக்குப் பூசலாம். இவ்விலை சாறுடன் வெண்ணெய் சேர்த்துச் சிரங்குகளுக்குப் பூசலாம். இதன் சாற்றை வியர்வை உண்டு. பண்ணுவதற்கு உடலில் பூசுவது உண்டு, கோவை இலைச் சாற்றுடன் நல்லெண்ணெய் கூட்டிக் காய்ச்சி வடித்து படர்தாமரை புண்ணுக்குப் பூசலாம். இலையை காயவைத்து பொடித்தும் புண்கள் மீது தடவ காயம் நீங்கும்.

## கோதுமை ரஸ்க் சோயா பன் புலாவ்

தேவையான பொருட்கள்



- கோதுமை ரஸ்க் - 8 முதல் 10
- சோயா பன் - 1 கப்
- வெங்காயம் - 1 (நறுக்கியது)
- தக்காளி - 1 (நறுக்கியது)
- பச்சை மிளகாய் - 2
- இஞ்சி பூண்டு விழுது - 1 டீஸ்பூன்
- மஞ்சள் தூள் - ¼ டீஸ்பூன்
- மிளகாய் தூள் - ½ டீஸ்பூன்
- கரம் மசாலா - ½ டீஸ்பூன்
- உப்பு - தேவைக்கு
- கடுகு - ½ டீஸ்பூன்
- உளுத்தம் பருப்பு - 1 டீஸ்பூன்
- எண்ணெய் - 2 டேபிள்ஸ்பூன்
- கறிவேப்பிலை - சிறிதளவு
- கொத்தமல்லி - அலங்கரிக்க
- தண்ணீர் - தேவையான அளவு

செய்முறை

முதலில் சோயா பன்னை சூடான தண்ணீரில் 10 நிமிடம் ஊற வைத்து, பிழிந்து வைத்துக்கொள்ளவும்.

கோதுமை ரஸ்கை மிக்ஸியில் அரைத்து வைத்துக்கொள்ளவும்.

கடாயில் எண்ணெய் ஊற்றி கடுகு, உளுத்தம் பருப்பு, கறிவேப்பிலை தாளிக்கவும்.

வெங்காயம், பச்சை மிளகாய் சேர்த்து நன்றாக வதக்கவும்.

இஞ்சி பூண்டு விழுது சேர்த்து வாசனை போகும் வரை வதக்கவும்.தக்காளி சேர்த்து மென்மையாகும் வரை சமைக்கவும்.

மஞ்சள் தூள், மிளகாய் தூள், உப்பு, கரம் மசாலா சேர்த்து கலக்கவும்.இப்போது சோயா சங்க்ஸ் சேர்த்து 2-3 நிமிடம் வதக்கவும்.

சிறிதளவு தண்ணீர் தெளித்து, அரைத்த ரஸ்கை சேர்த்து அடுப்பை அணைத்து கிளறவும்.மூடி வைத்து 5 நிமிடம் கழித்து கொத்தமல்லி தூவி இறக்கவும்.

# பக்கவாத சிகிச்சை புதிய வழிகாட்டுதல்



இந்த உலகில் வாழும் மனிதர்கள் அனைவரும் ஏதோ ஒரு நொடிப் பொழுதில் தலைவலியை சந்தித்திருப்பார்கள். பொதுவாக சிறிது நேரம் இருந்துவிட்டு சென்றுவிடும் தலைவலியை நாம் சாதாரண நோயாகத்தான் பார்க்கிறோம். ஆனால், தலைவலியில் 300 வகைகள் உள்ளன. ஒவ்வொரு தலைவலியும் ஏதோ ஒரு காரணத்தினால் ஏற்படுகிறது. அவற்றில் மிக முக்கியமானதாக கருதப்படுவது மைக்ரேன் தலைவலிதான். ஏனென்றால், இந்த தலைவலியின் தீவிரம் தாங்காமல், தற்கொலை செய்து கொண்டவர்களும் உண்டு. எனவே, மைக்ரேன் தலைவலி குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஆண்டுதோறும் உலகளவில் மைக்ரேன் தலைவலிக்கான தினமும் அனுசரிக்கப்படுகிறது. மைக்ரேன் தலைவலி குறித்து நம்முடன் பகிர்ந்து கொள்கிறார் குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கான சிறப்பு நரம்பியல் மருத்துவர் அருண்குமார்.

மைக்ரேன் என்றால் என்ன.. எதனால் ஏற்படுகிறது?

பொதுவாக நாம் அனைவருமே சாதாரணமாக அடிக்கடி சந்திக்கும் உடல் ரீதியான பிரச்னை என்றால் அது தலைவலிதான். இந்த தலைவலியில் 300 வகைகள் உள்ளன. இதில் ஒரு வகையும் முக்கியமானதாகவும் பார்க்கப்படுவது மைக்ரேன் தலைவலியாகும். இது மிகவும் பரவலாகக் காணப்படுகிற தலைவலி ஆகும். இது ஏன் ஏற்படுகிறது என்றால், பரம்பரை வழியாக வருகிறது. குடும்பத்தில் யாருக்கேனும் மைக்ரேன் இருந்திருந்தால், மரபணு வழியாக அடுத்தத் தலைமுறைக்கும் வரும். இதற்கு வேறு எந்த காரணமும் இருக்காது. இது ப்ரைமரி தலைவலி என்று மருத்துவ உலகில் சொல்லப்படுகிறது இந்த ப்ரைமரி தலைவலியிலேயே நான்குவகைகள் உள்ளன. இதில் முக்கியமாக பார்க்கப்படுவது மைக்ரேன் மற்றும் டென்ஷனினால் ஏற்படும் தலைவலிதான்.

மைக்ரேனின் பாதிப்புகள் எவ்வாறு இருக்கும்?

இந்த மைக்ரேன் பாதிப்பு என்பது ஒற்றைத் தலைவலி ஆகும். இது புருவத்திற்கு மேல் வலி தெரியும். இந்த ஒற்றைத் தலைவலி ஏற்படும்போது வாந்தி உணர்வு, ஒமட்டல், கண்கள் மறைப்பது போன்ற உணர்வு, கண்களில் பூச்சி பறப்பது போன்ற உணர்வு இருக்கலாம். இடதுபக்கம் அல்லது வலதுபக்கம் வலிக்கும். அல்லது இரண்டு பக்கமும் வரலாம். அது மெதுவாக அதிகரிக்கும். ஒரு கட்டத்தில் தலையில் யாரோ இடிப்பது போன்ற தீவிரமான வலியாக மாறும். வெளிச்சத்தைப் பார்க்க முடியாது. சத்தத்தைக் கேட்க முடியாது. இதை போட்டோ ஃபோபியோ, ஃபோனா ஃபோபியா என்று சொல்வோம்.

இந்த மைக்ரேன் தலைவலியானது முதல் 2 மணி நேரம் வரை இருக்கும். அதைத்தொடர்ந்து 2 முதல் 3 நாள் வரை நீடிக்கலாம். இது பொதுவாக, தூக்கமின்மை, க்ளைமேட் சேஞ்ச், மனஅழுத்தம், வேலை பளு, குளிர்ந்த பொருளை உண்ணுவது போன்ற நேரங்களில் ஏற்படுகிறது. அதைக் கண்டுபிடித்து சரி செய்தாலே ஓரளவு தீர்வு காணலாம். அதுபோன்று மூளையில் சுரக்கும் சில கெமிக்கல்கள் அதிகம் சுரந்தாலோ அல்லது குறைவாக சுரந்தாலோ ரத்தக்குழாய்கள் சுருங்குவதோ அல்லது விரிவடைந்தாலோ இப்படிப்பட்ட தலைவலி ஏற்படும். அதாவது, உடலில் ஏற்படும் ரசாயன மாற்றத்தாலும் இந்த மைக்ரேன் ஏற்படலாம். இந்த தலைவலி நார்மலான தலைவலியில் கூடுதல் வலியைக் கொடுப்பதால், மைக்ரேன் உள்ளவர்களால், தலைவலி வந்துவிட்டால், வேறு எந்த வேலையிலும் கவனம் செலுத்த முடியாமல் சிரமப்படுவார்கள்.

மைக்ரேன் வகைகள் என்ன

மைக்ரேனில் இரண்டு வகைகள் உள்ளன. அவை, காமன் மைக்ரேன், கிளாசிக்கல் மைக்ரேன் என இரண்டு வகைகள் இருக்கின்றன. காமன் மைக்ரேனில் நான் மேலே சொன்ன அறிகுறிகள் அத்தனையும் இருக்கும். கிளாசிக்கல்மைக்ரேனில்,ஆராஇருக்கும். ஆரா என்பது மைக்ரேன் தலைவலி தொடங்குவதற்கு முன்பு வரும் விஷுவல் அறிகுறியாகும். அதாவது, கண்ணில் கருப்பு - வெள்ளை நிறத்தில் பொட்டு பொட்டாக தெரியும். இது வெவ்வேறு வடிவத்திலும் தெரியும்.

இதை ஸ்கோட்டோமா என்று மருத்துவ உலகில் சொல்வார்கள். இந்த அறிகுறி வந்தால் உடனே தலைவலி தொடங்கப் போகிறது என்று தெரிந்து கொள்ளலாம். இது பொதுவான ஆரா. இதிலேயே சிலருக்கு தலையில் சூடு ஏறுவது போன்று, கரண்ட் ஷாக் அடிப்பது போன்ற உணர்வுகளும் தலைவலி தொடங்குவதற்கான அறிகுறியாக தெரியும். இதனை சென்ஸிடிவ் ஆரா என்று சொல்வோம்.

சிகிச்சைகள்

மைக்ரேனுக்கான சிகிச்சை என்றால் வரும் முன்காப்பது தான் நல்லது. மைக்ரேன் இருப்பது தெரிந்தால், மைக்ரேன் டைரி ஒன்று பராமரிக்கப்படும். அதில் முதலில் என்ன காரணத்தினால் வருகிறது என்பதை ஆராய்வார்கள். அதாவது தூக்கமின்மையால் வருகிறதா, உணவு ஒவ்வாமையால் வருகிறதா அல்லது வாசனை திரவியங்களால் வருகிறதா, முன்பு சொன்னது போன்று வேலைப் பளுவினாலா, மன அழுத்தமா என்று எப்போது தலைவலி வருகிறது என்று பார்ப்பார்கள். பின்னர், எந்த நேரத்தில் வருகிறது. எவ்வளவு நேரம் இருக்கிறது. வலி எப்படி உணர்கிறார்கள் என்பதை எல்லாம் குறித்து வைத்துக் கொண்டு நரம்பியல் மருத்துவரை அணுக வேண்டும் .இதில் மைக்ரேன் தலைவலிக்கான சிகிச்சைகள் இரண்டு வகையில் உள்ளது.

சூப்ரிவென்ட்டிவ் மைக்ரேன் ட்ரீட்மென்ட்ஸ்' (கreventive Migraine treatments), சூஅபார்ட்டிவ் மைக்ரேன் ட்ரீட்மென்ட்ஸ்' (Abortive migraine treatments) என்று இரண்டு வகைப்படும்.'ப்ரிவென்ட்டிவ் மைக்ரேன் ட்ரீட்மென்ட்ஸ்' என்பது அடிக்கடி தலைவலி வராமல் காக்கும் தடுப்புச் சிகிச்சை. அதற்கான மருந்துகளை 3 முதல் 6 மாதங்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். வாழ்வியல் மாற்றங்களும் அவசியம்.தலைவலியைத் தூண்டும் விஷயங்களைத் தவிர்க்க வேண்டும். உதாரணத்துக்கு குறிப்பிட்ட உணவுகளைச் சாப்பிட்டால் தலைவலி வருகிறது என்றால் அவற்றைத் தவிர்ப்பது, வெயிலில் அலைவதைத் தவிர்ப்பது, அதிக வாசனையுள்ள பெர்ஃபியூம் உபயோகத்தைத் தவிர்ப்பது, நேரம் தவறாமல் சாப்பிடுவது, தூங்குவது போன்றவை அவசியம்.சூஅபார்ட்டிவ் மைக்ரேன் ட்ரீட்மென்ட்ஸ்' என்பது ஒருமுறை தலைவலி வந்தால் அதிலிருந்து விடுபடுவதற்கான தீர்வளிக்கும். வலி வந்த 30 முதல் 45 நிமிடங்களுக்குள் பாராசிட்டமால் பீட்டா பிளாக்கர் , எஸ்.எஸ்.ஆர்.ஐ போன்ற மருந்து, மாத்திரைகளை எடுத்துக்கொண்டாலே பலன் தெரியும். மூளையில் கெமிக்கல் தொடர்பான செயல்பாடுகளால் ரத்தக்குழாய்கள் விரிவடைந்துவிட்டால், என்ன மாத்திரை எடுத்துக்கொண்டாலும் வலி குறையாது. அந்த நபருக்கு வழக்கமாக எத்தனை மணி நேரம் வலி நீடிக்குமோ, அத்தனை மணி நேரம் முடிந்த பிறகுதான் வலியிலிருந்து நிவாரணம் கிடைக்கும்.மைக்ரேன் வராமல் தற்காத்துக் கொள்ளும் வழிகள் என்ன..பிறப்பு மூலமாக ஒருவருக்கு மைக்ரேன் வருகிறது என்றால், அதை தடுக்க முடியாது. வருவதால் ஒன்று செய்ய முடியாது. ஆனால், வந்துவிட்டால், அதை அதிகமாகாமல் கட்டுக்குள் வைத்துக் கொள்ள முடியும். இதற்கு, டென்ஷன், கோபம், மன இறுக்கம் போன்றவை ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். சூடான நீரை அருந்த வேண்டும். குளிரூட்டப்பட்ட உணவுகளைத் தவிர்ப்பது நல்லது. மேலும், தினமும் யோகா, தியானம், மூச்சுப் பயிற்சி, ரிலாக்ஸ்ஷேன் தெரபி, மைக்ரேன் டைரி மெயின்டன் செய்வது போன்றவற்றை செய்யவேண்டும்.

# ஐபிஎல் கிரிக்கெட்டில் மிக குறைந்த ரன்களில் ஆல் அவுட்டான 5 அணிகள்: முதலிடத்தில் ஆர்சிபி

சென்னை: ஐபிஎல் தொடரில் நேற்று டெல்லியில் உள்ள அருண் ஜேட்லி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் டெல்லி கேப்பிடல்ஸ் - ஆர்சிபி அணிகள் மோதின. டாஸ் வென்ற ஆர்சிபி அணியின் கேப்டன் ரஜத் பட்டிதார் பீல்டிங்கை தேர்வு செய்தார்.

பேட்டிங்கை தொடங்கிய டெல்லி அணி புவனேஷ்வர் குமார், ஜோஷ் ஹேசில்வுட் ஆகியோரது வேகப்பந்து வீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் மளமளவென விக்கெட்களை பறிகொடுத்தது. அறிமுக வீரரான சஹில் பராக் ரன் ஏதும் எடுக்காமல் புவனேஷ்வர் குமார் வீசிய முதல் ஓவரின் 2-வது பந்தில் போல்டானார்.



ஜோஷ் ஹேசில்வுட் வீசிய 2-வது ஓவரில் கே.எல்.ராகுல் (1), சமீர் ரிஷ்வி (0) ஆகியோர் அடுத்தடுத்த பந்துகளில் விக்கெட் கீப்பர் ஜிதேஷ் சர்மாவிடம் பிடி கொடுத்து நடையை கட்டினர். இதையடுத்து களமிறங்கிய டிரிஸ்டன் ஸ்டப்ஸ் 5 ரன்கள் எடுத்த நிலையில் புவனேஷ்வர் குமார் பந்தில் முதல் சிலிப் திசையில் நின்ற தேவ் தத் படிக்கலிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இதன் பின்னர் கேப்டன் அக்சர் படேல் ரன் ஏதும் எடுக்காமலும், நித்திஷ் ராணா ஒரு ரன்னிலும் பெவிலியன் திரும்பினர். 3.5 ஓவர்களில் 8 ரன்களுக்கு 6 விக்கெட்களை பறிகொடுத்த நிலையில் டேவிட் மில்லர், அபிஷேக் போரெல் ஜோடி போராடியது. டேவிட் மில்லர் 18 பந்துகளில், 3 பவுண்டரிகளுடன் 19 ரன்கள் எடுத்த நிலையில் ரஷிக் சலாம் பந்தை விளாச முயன்ற போது ஜிதேஷ் சர்மாவிடம் கேட்ச் ஆனது.

இதையடுத்து களமிறங்கிய கைல் ஜேமிசன் 13 பந்துகளில், ஒரு சிக்ஸர், ஒரு பவுண்டரியுடன் 12 ரன்கள் எடுத்த நிலையில் கிருணல் பாண்டியா பந்தில் எல்பிடபிள்யூ ஆனார். அவரைத் தொடர்ந்து குல்தீப் யாதவ் 3 ரன்களில் சுயாஷ் சர்மா பந்தில் போல்டானார். சீராக ரன்கள் சேர்த்த அபிஷேக் போரெல் 33 பந்துகளில், 3 பவுண்டரிகளுடன் 30 ரன்கள் எடுத்த நிலையில் ஜோஷ் ஹேசில்வுட் பந்தில் ஸ்டெம்புகள் சிதற போல்டானார்.

இறுதியில் டெல்லி கேப்பிடல்ஸ் அணி 16.3 ஓவர்களில் 75 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. ஆர்சிபி அணி தரப்பில் ஜோஷ் ஹேசில்வுட் 3.3 ஓவர்களை வீசி 12 ரன்களை விட்டுக்கொடுத்து 4 விக்கெட்களை வீழ்த்தினார். புவனேஷ்வர் குமார் 3 ஓவர்களை வீசி 5 ரன்களை விட்டுக்கொடுத்து 3 விக்கெட்களை கைப்பற்றினார். ரஷிக் சலாம், சுயாஷ் சர்மா ஆகியோர் தலா ஒரு விக்கெட் கைப்பற்றினர்.

இதையடுத்து 76 ரன்கள் இலக்குடன் பேட் செய்த ஆர்சிபி அணி 6.3 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 77 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. விராட் கோலி 15 பந்துகளில், ஒரு பவுண்டரி, 2 சிக்ஸர்களுடன் 23 ரன்களும், தேவ்தத் படிக்கல் 13 பந்துகளில், 3 பவுண்டரிகள், 3 சிக்ஸர்களுடன் 34 ரன்களும் விளாசினர். முன்னதாக ஜேக்கப் பெத்தேல் 11 பந்துகளில், 2 சிக்ஸர்கள், ஒரு பவுண்டரியுடன் 20 ரன்கள் சேர்த்த நிலையில் ஜேமிசன் பந்தில் ஆட்டமிழந்தார்.

9 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற ஆர்சிபி அணிக்கு இது 6-வது வெற்றியாக அமைந்தது. 8 ஆட்டங்களில் விளையாடி உள்ள ஆர்சிபி அணி 6 வெற்றி, 2 தோல்விகளுடன் 12 புள்ளிகள் பெற்று பட்டியலில் 2-வது இடத்தில் தொடர்கிறது. டெல்லி அணிக்கு இது 5-வது தோல்வியாக அமைந்தது. 8 ஆட்டங்களில் விளையாடி உள்ள அந்த அணி 3 வெற்றி, 5 தோல்விகளுடன் 6 புள்ளிகளுடன் 7-வது இடத்தில் தொடர்கிறது.

நடப்பு ஐபிஎல் சீசனில் டெல்லி கேப்பிடல்ஸ் அணி 75 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. இந்நிலையில், ஐபிஎல் கிரிக்கெட் வரலாற்றில் மிக குறைந்த ரன்களை பதிவு செய்த அணிகளின் விவரம் குறித்து பார்ப்போம்.

டெல்லியில் திங்கட்கிழமை அன்று நடைபெற்ற லீக் ஆட்டத்தில் டெல்லி கேப்பிடல்ஸ் அணியை 75 ரன்களில் சுருட்டியது. ஆர்சிபி அணியின் அனுபவப் பந்து வீச்சாளர்களான புவனேஷ்வர் குமாரும், ஹேசில்வுட்டும் டெல்லி பேட்ஸ்மேன்கள் விக்கெட்டுகளை கூட்டு சேர்ந்து வீழ்த்தினர். டெல்லி அணி 3.5 ஓவர்களில் 8 ரன்களுக்கு 6 விக்கெட்டுகளை இழந்தது.

ஆர்சிபி அணி இன்னும் கொஞ்சம் கவனமாக வீசி இருந்தால் டெல்லி அணியை மிகவும் சொற்ப ரன்களில் ஆல் அவுட் செய்திருக்கலாம். ஆனால், அது ஆர்சிபி அணிக்கு கைகூடவில்லை.

இதை எண்ணி ஆர்சிபி அணி ரசிகர்கள் ஆதங்கம் அடைந்தனர். ஏனெனில், ஐபிஎல் கிரிக்கெட்டில் மிக குறைந்த ரன்களுக்கு ஆல் அவுட்டான அணி என்ற மோசமான சாதனையை தன்வசம் கொண்டுள்ளது ஆர்சிபி. அந்த அணி கடந்த 2017 சீசனில் 49 ரன்களுக்கு ஆல் அவுட் ஆகியுள்ளது. அதே நேரத்தில் டெல்லி அணி ரசிகர்களோ, நல்வாய்ப்பாக தங்கள் அணி 49 ரன்களுக்குள் ஆட்டமிழக்கவில்லை என ஆசுவாசம் கொண்டுள்ளனர்.

ஐபிஎல் கிரிக்கெட்டில் மிக குறைந்த ரன்களில் ஆல் அவுட்டான அணிகள் ।கடந்த 2008 சீசனில் மும்பை இந்தியன்ஸ் அணிக்கு எதிராக 67 ரன்களுக்கு ஆல் அவுட்டானது கொல்கத்தா நைட் ரைடர்ஸ். இந்த ஆட்டம் மும்பையில் நடைபெற்றது.

।கடந்த 2017 சீசனில் டெல்லியில் நடைபெற்ற ஆட்டத்தில் டெல்லி (அப்போது டெல்லி டேர்டெவில்ஸ்) அணியை 66 ரன்களில் சுருட்டியது மும்பை அணி.

।கடந்த 2023 சீசனில் ஜெய்ப்பூரில் நடைபெற்ற ஆட்டத்தில் ராஜஸ்தான் ராயல்ஸை 59 ரன்களில் ஆட்டமிழக்க செய்தது ஆர்சிபி.

।முன்னதாக, இதே ராஜஸ்தான் அணியை கடந்த 2009 சீசனில் 58 ரன்களுக்கு ஆல் அவுட் செய்திருந்தது ஆர்சிபி.

।கடந்த 2017 சீசனில் கொல்கத்தாவில் ராயல் சாலஞ்சர்ஸ் பெங்களூரு (ஆர்சிபி) அணியை 49 ரன்களில் ஆல் அவுட் செய்தது கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி.

# மீனவர் சமூக வாழ்வைப் பேசும் 'மண்டாடி'



சூரி கதாநாயகனாக நடித்துள்ள திரைப்படம் 'மண்டாடி'. மதிமாறன் புகழேந்தி இயக்கியுள்ள இந்தப்படத்தின்மூலம்சுகாஷ்,தமிழ் சினிமாவில் அறிமுகமாகிறார்.

மஹிமா நம்பியார், சத்யராஜ், ரவீந்திரா விஜய், மிதுன், பாலசரவணன் உள்ளிட்டோர் நடித்துள்ளனர். ஆர்.எஸ். இன்போடெயின்மென்ட் சார்பில் எல்ரெட் குமார் தயாரிக்கும் இந்தப் படத்துக்காக உடல் மற்றும் மனதளவில் கடுமையான உழைப்பை மேற்கொண்டுள்ளார் சூரி. ஜி.வி.பிரகாஷ் இசையமைத்துள்ள இப்படத்துக்கு எஸ்.ஆர்.கதிர் ஒளிப்பதிவு செய்துள்ளார்.இப்படம், மீனவர் சமூகத்தின் வாழ்க்கையை மையமாகக் கொண்டு, தனித்துவமான விளையாட்டுப் பின்னணியில் அமைந்த, வலுவான கதை சொல்லலுடன்உருவாகியுள்ளது.இதன் படப்பிடிப்பு முடிவடைந்துள்ள நிலையில், தற்போது போஸ்ட் புரொடக்‌ஷன் பணிகள் நடைபெற்று வருகின்றன.

# டிசி' படப்பிடிப்பு நிறைவு



லோகேஷ் கனகராஜ் நாயகனாக அறிமுகமாகும் 'டிசி' படப்பிடிப்பு முழுமையாக முடிவுற்றதாக படக்குழுவினர் அறிவித்துள்ளனர்.


அருண் மாதேஸ்வரன் இயக்கத்தில் லோகேஷ் கனகராஜ் நாயகனாக அறிமுகமாகும் படம் 'டிசி'. இதன் படப்பிடிப்பு நீண்ட நாட்களாக நடைபெற்று வந்தது. தற்போது ஒட்டுமொத்த படப்பிடிப்பும் முடிவுற்றதாக படக்குழு அறிவித்துள்ளது. விரைவில் இறுதிகட்டப் பணிகளை முடித்து வெளியிட படக்குழு மும்முரமாக பணிபுரிந்து வருகிறது.

இதில் வாமிகா, சஞ்சனா கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்ட பலர் லோகேஷ் கனகராஜ் உடன் நடித்துள்ளனர். இதற்கு ஒளிப்பதிவாளராக முகேஷ், இசையமைப்பாளராக அனிருத் ஆகியோர் பணிபுரிந்து வருகிறார்கள். சன் பிக்சர்ஸ் நிறுவனம் இதனை தயாரித்து வருகிறது.

லோகேஷ் கனகராஜ் நாயகனாக அறிமுகமாகும் படம் என்பதால் இதற்கு எதிர்பார்ப்பு இருக்கிறது.

'டிசி' பணிகளை முழுமையாக முடித்து கொடுத்துவிட்டு, அல்லு அர்ஜுன் படத்தின் பணிகளைத் தொடங்க லோகேஷ் கனகராஜ் முடிவு செய்திருக்கிறார். இதன் கதை விவாதமும் ஒருபுறம் மும்முரமாக நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

# 'பாக்கெட் நாவல்' படம்: மாளவிகா மோகனன் உற்சாகம்



தமிழ், தெலுங்கு, இந்தியில் நடித்து வரும் மாளவிகா மோகனன் இப்போது 'பாக்கெட் நாவல்' படத்தில் நடித்து வருகிறார். இதை தியாகராஜன் குமாரராஜா இயக்குகிறார்.

விஜய் சேதுபதி நாயகனாக நடிக்கிறார். கன்னட நடிகர் ராஜ் பி ஷெட்டி, கிஷோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். இளையராஜா இசையமைக்கும் இப்படத்துக்கு நீரவ் ஷா ஒளிப்பதிவு செய்கிறார்.


இப்படம் பற்றி மாளவிகா மோகனன் கூறும்போது, ''பாக்கெட் நாவல் படப்பிடிப்பு மிகச் சிறப்பாக நடந்து வருகிறது. இந்தக் கதையை நாங்கள் மிகவும் மகிழ்ச்சியாக உருவாக்கி வருகிறோம்.

உண்மையிலேயே ஒரு சிறந்த படக் குழுவுடன் பணியாற்றுவது பெருமையாக இருக்கிறது. இந்தப் படத்தை மிகவும் உற்சாகமாக எதிர்பார்க்கிறேன் இப்படம் இந்த ஆண்டு இறுதியில் வெளியாகிறது'' என்றார்.

# பஞ்சாப் கிங்ஸ் வெற்றிக்கு தடைபோடுமா ராஜஸ்தான் ராயல்ஸ்? - முலான்பூரில் பலப்பரீட்சை

முலான்பூர்: ஐபிஎல் தொடரில் இரவு 7.30 மணிக்கு நியூ சண்டிகர் முலான்பூரில் உள்ள மகாராஜா யாதவிந்திர சிங் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் பஞ்சாப் கிங்ஸ் - ராஜஸ்தான் ராயல்ஸ் அணிகள் மோதுகின்றன.

ஸ்ரேயஸ் ஐயர் தலைமையிலான பஞ்சாப் கிங்ஸ் அணி 7 ஆட்டங்களில் விளையாடி 6 வெற்றி, ஒரு முடிவு இல்லாத ஆட்டம் என 13 புள்ளிகளை குவித்து பட்டியலில் முதலிடத்தில் ஆதிக்கம் செலுத்துகிறது. நடப்பு சீசனில் தோல்வியை சந்திக்காத ஒரே அணி பஞ்சாப் கிங்ஸ் மட்டுமே. அந்த அணி தனது கடைசி ஆட்டத்தில் டெல்லி கேப்பிடல்ஸை தோற்கடித்து இருந்தது. அந்த ஆட்டத்தில் 265 ரன்கள் இலக்கை 7 பந்துகள் மீதம் வைத்து வெற்றி பெற்று மிரளச் செய்திருந்தது பஞ்சாப் அணி.





பிரப் சிம்ரன் சிங் 26 பந்துகளில் 76 ரன்களும், ஸ்ரேயஸ் ஐயர் 36 பந்துகளில், 71 ரன்களும் விளாசி அணியின் வெற்றியில் முக்கிய பங்கு வகித்தனர். முன்னதாக இந்த ஆட்டத்தின் தொடக்கத்தில் பிரியன்ஸ் ஆர்யா, பிரப்சிம்ரன் சிங் கூட்டணி பவர்பிளேவில் 116 ரன்கள் விளாசி மிரட்டியிருந்தது. இவர்களிடம் இருந்து மேலும் ஒரு சிறந்த மட்டை வீச்சு வெளிப்படக்கூடும். கூப்பர் கானொலி, நேகல் வதேரா, ஷசாங் சிங் ஆகியோரும் அதிரடியாக விளையாடி பலம் சேர்க்கக்கூடியவர்கள்.

கடந்த பல ஆண்டுகளாக சர்வதேச கிரிக்கெட் மற்றும் ஐபிஎல் தொடர்களில் விராட் கோலி தனது தொடர்ச்சியான உயர்மட்ட செயல் திறன்களால் 'சேஸ்-மாஸ்டர்' என்ற பட்டத்தைத் தனதாக்கிக் கொண்டார். தற்போது அதே பாதையில் ஸ்ரேயஸ் ஐயர் பயணிக்கத் தொடங்கி உள்ளார். கேப்டனாகவும், பேட்டராகவும், பஞ்சாப் கிங்ஸ் அணி நடப்பு தொடரில் இதுவரை தோல்வியடையாமல் இருப்பதற்கு, அதிக அழுத்தம் நிறைந்த சூழல்களில் ஸ்ரேயஸ் ஐயர் வெளிப்படுத்திய அபாரமான ஆட்டமே முக்கியக் காரணமாகும்.

இதனால் இன்றைய ஆட்டத்திலும் ஸ்ரேயஸ் ஐயர், ராஜஸ்தான் அணியின் பந்து வீச்சாளர்களுக்கு நெருக்கடி தரக்கூடும். ரியான் பராக் தலைமையிலான ராஜஸ்தான் ராயல்ஸ் அணி 8 ஆட்டங்களில் விளையாடி 5 வெற்றி, 3 தோல்விகளுடன் 10 புள்ளிகள் குவித்து பட்டியலில் 4-வது இடத்தில் உள்ளது. கடைசியாக அந்த அணி சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிக்கு எதிரான ஆட்டத்தில் 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்திருந்தது.

அந்த ஆட்டத்தில் 228 ரன்களை குவித்த போதிலும் மோசமான பீல்டிங் காரணமாக ராஜஸ்தான் அணி தோல்வியை சந்திக்க நேரிட்டது. ஹைதராபாத் அணியின் அதிரடி வீரரான அபிஷேக் சர்மா 4 ரன்களில் இருந்த போது கொடுத்த கேட்ச்சை ஷிம்ரன் ஹெட்மயரும், 30 ரன்களில் இருந்த போது கொடுத்த எளிதான கேட்ச்சை ரவீந்திர ஜடேஜாவும் தவறவிட்டனர். இதற்கான பலனை ராஜஸ்தான் அணி அனுபவித்து இருந்தது. இதனால் அந்த அணி பீல்டிங்கில் உயர்மட்ட செயல் திறனை வெளிப்படுத்த வேண்டியதுஅவசியமாகும்.

பேட்டிங்கை பொறுத்தவரையில் வைபவ் சூர்யவன்ஷி சிறந்த பார்மில் உள்ளார். கடந்த ஆட்டத்தில் 37 பந்துகளில் 103 ரன்கள் விளாசிய அவரிடம் இருந்து மேலும் ஒரு சிறந்த மட்டை வீச்சு வெளிப்படக்கூடும். அதேவேளையில் ரியான் பராக்கின் பார்ம் கவலை அளிக்கும் வகையில் உள்ளது. நடப்பு சீசனில் அவர், 8 ஆட்டங்களில் விளையாடி 88 ரன்கள் மட்டுமே சேர்த்துள்ளார். இதனால் ரியான் பராக் ரன்கள் குவிக்க வேண்டிய நெருக்கடிக்கு தள்ளப்பட்டுள்ளார்.

முலான்பூர் ஆடுகளத்தில் இந்த சீசனில் பஞ்சாப் அணி இதுவரை விளையாடி உள்ள 3 ஆட்டங்களிலும் வெற்றி கண்டுள்ளது. கடைசியாக இந்த மைதானத்தில் கடந்த 19-ம் தேதி லக்னோ அணிக்கு எதிராக நடைபெற்ற ஆட்டத்தில் பஞ்சாப் அணி 254 ரன்கள் குவித்து மிரட்டியிருந்தது. இந்த ஆட்டத்தில் பஞ்சாப் அணி 54 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி கண்டிருந்தது.

# முதல் டி20 கிரிக்கெட் போட்டியில் நியூஸிலாந்தை வீழ்த்தியது வங்கதேசம்

சட்டோகிராம்: நியூஸிலாந்துக்கு எதிரான முதல் டி20 கிரிக்கெட் போட்டியில் வங்கதேச அணி 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.சட்டோகிராமில் நேற்று நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் பேட் செய்த நியூஸிலாந்து அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 182 ரன்கள் குவித்தது. அதிகபட்சமாக டேன் கிளீவர் 28 பந்துகளில், ஒரு சிக்ஸர், 7 பவுண்டரிகளுடன் 51 ரன்களும், கேட்னி கிளார்க் 37 பந்துகளில், ஒரு சிக்ஸர், 7 பவுண்டரிகளுடன் 51 ரன்களும் சேர்த்தனர். கேப்டன் நிக் கெல்லி 39, ஜோஷ் கிளார்க்சன் 27 ரன்கள் எடுத்தனர்.வங்கதேச அணி சார்பில் ரிஷாத் ஹோசைன் 2 விக்கெட்கள் கைப்பற்றினார். 183 ரன்கள் இலக்குடன் பேட் செய்த வங்கதேச அணி 18 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து 183 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. தவுஹித் ஹிர்தோய் 27 பந்துகளில், 3 சிக்ஸர்கள், 2 பவுண்டரிகளுடன் 51 ரன்களும், ஷாமின் ஹோசைன் 13 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 3 பவுண்டரிகளுடன் 31 ரன்களும் விளாசினர்.பர்வேஷ் ஹோசைன் 28, கேப்டன் லிட்டன் தாஸ் 21, தன்ஸித் ஹசன் 20, சைஃப் ஹசன் 17 ரன்கள் சேர்த்தனர். ஆட்ட நாயகனாக தவுஹித் ஹிர்தோய் தேர்வானார். 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற வங்கதேச அணி 3 ஆட்டங்கள் கொண்ட டி 20 தொடரில் 1-0 என முன்னிலை வகிக்கிறது. 2-வது ஆட்டம் நாளை (29-ம் தேதி) நடைபெறுகிறது.



TO ADVERTISE
PLEASE CONTACT
மெட்ராஸ் மணி
MADRAS MANI
NATIONAL TAMIL DAILY NEWS PAPER
9000657700
9912220350
e.mail : info.southindiatimes@gmail.com

Printed Published and Owned by Buchi Babu Vuppala, Printed At Thanmayee Printers, No:7,3 RD street, Krishna Nagar, Moouarasampet, Madipakkam Chennai-91, Tamil Nadu. Published from 8/5, Mannarswamy koil street, PULIANTHOPE, Chenni-600012, Tamil Nadu Editor: **H.MD. HARIEF,** mail: info.southindiatimes@gmail.com, phone.9000657700, **RNI Reg No. TNTAM/2018/75087.**